தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

எழுந்தது மறவர் கூட்டம்!

—●—

உடல் நரம்பில் தமிழ்க்குருதி ஓடாதார்
ஒதுங்கிடுக; ஒருநாளில் மூவேளைக்கே
குடல் நிரப்பும் தொழிலொன்றே பெரிதென்னும்
கோழையர்கள் வழிவிடுக; மடியர்செல்க!
விடல்அரிதா அடிமைநலம் விரும்பிடுவார்
வெருண்டொதுங்கிக் கொள்க;தமிழ் மானங்காக்கும்
அடல்மறவர் வெங்களிற்றுக் கூட்டமென
அலைந்தெழுந்தார்; அவர்நடைக்குத் தடைசெய்யாமே!

ஆடி. தி. பி. 1995

ரூ0 50 காசு

தென்மொழி

தனித்தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | ஆடி—தி. பி. 1995 (1964 சூலை) | ஓலை 6.

தமிழரை வடவர்பால் அடிமைப்படுத்துவார்
காமராசும், பக்தவத்சலங்களுமே!

தமிழர் மானவுணர்வு மிகுந்தவர்; அடிமை வாழ்வை அஃது எவ்வளவு நலஞ் சான்றதாயினும் வெறுத்தொதுக்குவர். பிறர்க்கு அடிமையுற்றுத் தம் அகப்புற வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டதாகக் கூறப்பெறும் எவருடைய வரலாறும் பண்டைத் தமிழகத்தில் இல்லை. 'உயிர் நீப்பர் மானம் வரின்' என்னும் குறட்பகுதி தமிழரின் முத்திரை வரி. 'மானம்' என்ற நல்லுணர் வாண்மைக்குத் திருக்குறள் ஓர் அதிகாரமே வகுத்துள்ளது. பிற நாட்டு நெறி நூல்களில் இத்தகைய பாகுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. மானமும் ஒழுக்கமும் வாய்ந்த செயல்களையே தமிழர் அறமென்றும் புறமென்றும் நுண்ணிய வேறுபாடுகள் கொண்டு பகுத்தனர். 'வடக்கிருத்தல்' என்ற ஒரு வழக்கம் தமிழர்தம் மான உணர்விற்கோர் எடுத்துக்காட்டு. ஆனால் இஃதெல்லாம் இக்காலத்துக் கதையாகவே போயிற்று. இத் தன்மைகளெல்லாம் பண்டைத் தமிழர்தம் நாகரிகமற்ற பழக்க வழக்கங்கள் என்று இக்காலத் தமிழரே பேசுமளவிற்குத் தமிழர் தரங்கெட்டுப் போயினர்.

இற்றைத் தமிழர் வாழ்க்கையை நினைக்கவே நெஞ்சு நடுங்குகின்றது. தமிழ் எவ்வளவில் தன் தனித்தன்மையை இழந்து, உணர்வு முற்றாத பிற அயன் மொழிச் சொற்கள் இடை விரவி வரக் கலப்புற்றுத், தன் மேன்மையும் சிறப்பும் குன்றி விளங்கு

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

கின்றதோ, அவ்வளவிற்கு இக்காலத் தமிழர் திரிந்து இழிந்து விளங்குகின்றனர். இம்மாறுபாடு தவிர்க்க முடியாத கால வேறுபாடுகளால் ஏற்பட்டதா? இல்லை; காலத்தானும், தேவையானும் ஒரு மொழியோ, இனமோ, நாடோ, ஊரோ, குடும்பமோ வளர்ச்சியுறுமே தவிர, தாழ்ச்சியுறல் இல்லை. காலப்போக்கில் கல்வி நலமற்ற ஒரு குடும்பம் கல்வி, செல்வம் இரண்டிலும் மேம்பாடுறலாம்; ஊர் நகரமாகலாம்; நாடு தொழிலும், செல்வமும் பெருகி வளமடையலாம்; இனம் வாணிகத்தினும், வாழ்க்கையினும் உலகெங்கணும் பரவி விரிவடைந்து சிறப்புப்பெறலாம். மொழி இலக்கண இலக்கியவரம்பு திண்ணியதாய் ஒலி, எழுத்து சொல், கருத்து முதலியவை பல்கிச் சிறப்புறலாம். புறநிலையில் இன்னுந் தெளிவாகச் சொன்னால் காலத்தாலும் தேவையாலும் ஒரு செடி மரமாகுமே தவிர. ஒரு குழந்தை வளர்ந்து ஆளாகுமே தவிர, ஒரு கன்று காளையாகுமே தவிர, ஒரு பூ கனியாகுமே தவிர, மரம் செடியாகவும், ஆள் குழந்தையாகவும், காளை கன்றாகவும், கனி பூவாகவும் பின்னிறங்கித் தாழ்வதில்லை. அவ்வாறு தம் கீழ்நிலையை அவை அடைவதும் வளர்ச்சியின் படிநிலையாக இருக்குமே தவிர, தாழ்ச்சியின் படிநிலையாக என்றும் அமையாது. ஆனால் சில மொழிகளும் இனமும் பிறவும் காலத்தாலும் தேவையாலும் அழிந்து போயினவே எனின், அவை எல்லாமும் தங்களைப் பேணிக் கொள்ளாமையாலும், காத்துக் கொள்ளாமையாலுமே என்று உணர்ந்து கொள்க.

மேற்கண்ட இயற்கைத் தன்மைக்கு மாறுபடுமாறு இற்றைத் தமிழும் தமிழரும் இருத்தற்குக் காரணம் தமிழர் தம்மைப் பேணாமையும் காவாமையுமே! இவ்விழி நிலை ஏன் வந்துற்றது? அதுவும் கட்டிக் காத்தலும், தம்மைத் தாம் பேணிக் கொள்ளலுமே தலையாய வாழ்வு முறைகளாக அமைந்த தமிழினத்தில் இத்தகைய இறக்கம் ஏன் வரல் வேண்டும்? வரலாற்றுத் தொடர்புடைய இவ் வீழ்ச்சியை ஆராய முற்படின், தமிழன் பிற்காலத்தில் எவ்வளவில் இழிந்து பிறன் எச்சிற் சோற்றுக்கு மடி விரித்துப் பழகிக் கொண்டான் என்பதை உணரலாம். இத்தன்மைக்குக் காரணம் தமிழனை இயக்கிச் சென்ற தலைவர்களே! தானாக எண்ணாதவன் பிறர் எண்ணங்களைத் தேடிப் போகின்றான். தானாக முன்னேற வன்மையற்றவன் பிறரைச் சார்ந்து அவர்தம் கால்களைப் பற்றிக்கொண்டு முன்னேறுகின்றான். இத்தகைய தன்னுணர்வும், தன்னறிவும், தன்னாண்மையும் இல்லாத அடிமை நிலை, முன்னுணர்வும் முன்னறிவும் இல்லாத தன்மையினர்க்கே இனித்துக் கிடப்பதாகும். தன்னை நிறைவுள்ளவனாக்கிக் கொண்ட ஒருவன், பிறன் கால்களில் அடிமை என வீழ்ந்து கிடந்து அவன் சோற்றுப் பருக்கைக்கு அங்காந்து வாழ ஒவ்வான். சிறிது சிறிதாகத் தமிழன் அடிமை நலங் கண்டு இக்கால் பேரடிமையாகத், தனிம எண்ணமற்றவனாகப்

பிறன் வீட்டு முன்றிலில் வீழ்ந்துகிடக்கும் அளவிற்குத் தாழ்ந்து போனான். தமிழனின் அற்றை அடிமை நிலைக்குக் காரணமாக விருந்த பிற்காலத் தலைவர்கள் போலவே, இன்றைய பேரடிமை நிலைக்கும் இக்காலத் தலைவர்களே காரணமாக இருக்கின்றனர்.

அரசியல் என்னும் பெயரால் தமிழரை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் வடவர்தம் பேராயக் கட்சி, தமிழரில் தலையாய சிலரைத் தன் கைப்பாவைகளாக ஆக்கி, அவர் வழித் தமிழரை யும்,பிற தமிழினங்களையும் தன் விருப்பம்போல் ஆட்டி அசைய வைத்துக் கொண்டிருக்கின்றது. இவ் வாடல் வல்லார்க்கு ஏற்ற ஆட்டுக் கயிருக இருந்து, தமிழர்களை ஆட்டுப் பாவைகளாக இயக்கும் அத்தலைவர்களின் இரங்கல் நிலை, தமிழர்களை மொழி யின மழித்த மூளிகளாக்கிக் கொண்டு வருகின்றது. இந்நிலையை உடனடியாகத் தடுத்துநிறுத்தாவிடில் இன்னும் ஓர் ஐம்பதாண்டு களில் தமிழன் தன் தலையைத் தூக்கிப் பார்க்க முடியாதவாறு முண்டமாக்கப் படுவான். விரிந்த செல்வம் படைத்தார் தம் வீட்டு வேலைக்காரர்களை வைத்திருக்கும் முறையில், தமிழனும் பெரிய பெரிய மாளிகைகளில் உலா வரலாம்; ஆனால் அம் மாளிகையை அவன் பெருக்கிக் கூட்டித் துப்புரவு செய்பவனுக இருப்பான். அரிய, உயர்வான, சுவையான, ஊட்டமுள்ள உணவுப்பொருள்களைத் தன் குடும்பத்துடன் வயிருர உண்ண லாம்; ஆனால் அவை அவ் வீட்டுச்செல்வர்கள் கொத்திக்கிளறிக் குதப்பித் தூவென்று துப்பி விலக்கிய எச்சிற் பண்டங்களாக இருக்கும்; பல்வகையான இயங்கிகளிலும், மகிழுந்துகளிலும், வானூர்திகளிலும் ஊர் ஊராகப் பயணஞ் செய்யலாம்; ஆனால் அவ்வூர்திகளை ஓட்டுபவனுகவோ, துடைத்துக் கழுவுபவ னுகவோ, தேவையானல் பழுது பார்ப்பவனுகவோ தமிழன் இருப்பான். மெல்லிய, விலை உயர்ந்த பட்டாடைகளையும் வண்ண உடைகளையும் உடுக்கலாம்; ஆனால் அவை அவ் வீட் டார் போட்டுக்கழித்த இரண்டாந்தரத்துணிகளாகவே இருக்கும். இத்தகைய செல்வ நிலை நுகரும் அடிமை வாழ்க்கைக்கே, தமிழ கத்தினின்று வடநாடு போய்ப் போய் மீளும் நம் அரசியல் தலைவர்களான காமராசரும்,பக்தவத்சலமும், அவர் குடைகளும் கைத்தடிகளும் நம்மை இட்டுச் செல்லப் பார்க்கின்றனர். அவர் களும் அறியார் அவர்கள் அடிமை என்பதை! அவ்வளவாக அடிமை மயக்கம் அவர்தம் தலைக்கேறிப் போயிருக்கின்றது அத்தகைய அடிமைச் சுவையில் அவர்தம் நாக்குகள் புரண்டு கிடக்கின்றன. இவ்விழிநிலையைத் தமிழர்கள் இன்றே புரிந்து கொள்ளல் வேண்டும்.

அரசாண்மைப் பொறுப்பில் தமிழனின் உயர்வான நிலை என்றோ இடித்துத் தள்ளப்பட்டு விட்டது. அவன் வான் முட்டும் மாளிகையிலிருந்து, கரம்பு நிலத்திற்குத் தூக்கி எறியப்பட்டுக்

கிடக்கின்றான். அவன் இன்னும் இழிந்து போக நாம் விடக் கூடாது. பொற்கம்பிகள் நிறுத்தப்பெற்ற அடிமைச் சிறைகள் நமக்கு வேண்டா. விருப்பப்படி கல்விலும் முள்ளிலும் பசும் புற்றரையிலும் திரிந்து, ஊற்று நீரையோ, ஆற்று நீரையோ குடித்துக் கொண்டு மனமகிழும்படி வாழ உரிமை வேண்டும். தமிழன் தவறான தலைமையைப்பற்றிக்கொண்டு தவறான வழியில் செல்லத் தொடங்கி விட்டான். அவன் போக்கைத் திசை திருப்ப வேண்டும். கிழவனுக்கு மணம் பேசி முடிக்கப் பெற்ற ஓரிளம் பெண்ணைத் தேற்றுவதுபோல், நம்மை நாநரம்பு வாயா தாரும், தம் திறத்தைத் தாமே அறியாதவரும், வல்லடிமைப் போக்கினரும், சொல்லடிமைப் பேதையரும் பலவாறு தேற்றி ஆற்றுப்படுத்த முற்படுகின்றனர். அவர்தம் மயக்கு மொழிகள் நம்மை அடிமைப் படுத்துவன என்று கண்டு நாம் விலகி, உள்ளுணர்வு பொங்கி எழல் வேண்டும்.

தமிழர்களே! காமராசுகளும் பக்தவத்சலங்களும் வட நாட்டினர்க்கு நம்மை அடிமைப் படுத்தும் வல்லடிமைகள்! யானையால் யானை யாத்தல் போல், அத்தகைய அடிமை நிலைத் தமிழர்களைக் கொண்டே தமிழர்தம்மை என்றும் மீளாத அடிமை களாக்க வடநாட்டார் முயன்று வருகின்றனர் இத்தகைய தலைவர்களை இனி நம்பிப் பயனில்லை. வீறுமுழக்கும் செந்தமிழ்ப் படை ஒன்று திரள வேண்டும். அது வடவரொடு நம்மைப் பிணித்துக்கொண்ட இரும்புக்கயிறுகளை அறுத்தெறியவேண்டும். நமக்கு நடையிடத் தெரியும் அரசாக இருந்து பெரு நடை போட்டிருக்கின்றோம். குமரி முனையின் கடற்கரை மணலில் நம் கால்கள் தோய்ந்துள்ளன பனி மலையின் கொடுமுடியில் நம் பெருவிரல்கள் பதிந்திருக்கின்றன. கிழக்குக் கடற்கரையின் மீன்களை மேற்குக் கடற்கரையின் மணலில் உலர்த்தி யிருக்கின் றோம். வானூர்தியும் அணுக்குண்டும் செய்ய முற்படாததாலேயே நாம் அடிமைகளாக உழல வேண்டியதில்லை. காலப்போக்கில் அவ்வுயிர்ப் போராட்டத்திற்கும் நாம் தலை கொடுப்போம். இந் நிலையில் நாம் விரும்புவது உரிமை! வாழ்வுரிமை! சென்னையின் வாழ்வு தில்லியில் திட்டமிடப்பட வேண்டியதில்லை. நம் வாழ்வும் தாழ்வும் தமிழக எல்லைக்குள் உறுதிப்படுத்தப்பெறல் வேண்டும்

காமராசுகளும் பக்தவத்சலங்களும் தமிழர்தம் அடிமை வாழ்வின் இறுதிப்படலத்தின் நினைவுப்படிமங்களாக நிற்கட்டும். பெரிய பெரிய அணைக்கட்டுகளும், வான்முட்டும் தொழிற்கூடங் களும் அவர்களின் அடிமை வாழ்வால் நமக்குக் கிடைத்த போலிப் பரிசுகளே! இவை இங்கு யாருக்கும் தேவையில்லை. நமக்கு வேண்டியது உரிமை! உரிமையற்ற அடிமை வாழ்வில்

(10-ஆம் பக்கம் பார்க்க.)

வேறென்ன சொல்வது?

கையூட்டினை (இலஞ்சத்தை) ஒழிக்க முதலமைச்சர் பக்தவத்சலம் திட்டம்! —செய்தி.

கரைகண்டவர்!

முதலமைச்சர்களின் துணையால் நான் தலைமையமைச்சர் ஆகவில்லை

இலால் பகதூர் சாத்திரி.

'ஏறியபின் ஏணியை உதை; இன்றேல் இறக்கி விட்டாலும் விடும்' என்பது பழமொழி.

என் அரசாட்சி மக்களின் **நன்மை**யையே நாடும்!

—இலால் பகதூர் சாத்திரி.

அதாவது மக்கள் அடைந்து வருகின்ற நன்மையை!

நடுவணரசு அமைச்சர்கள் கடந்த தேர்தலுக்குப் பணம் தண்டியது பற்றி மேல் அவையில் உசாவல்! -செய்தி.

அப்பொழுதுதானே அடுத்த தேர்தலுக்கு எவரிடம் நிறையப் பணம் தண்டுவது என்பது விளங்கும்!

நேருவின் **சாம்பல்** கரைக்கும் நாள் நாடெங்கும் **விடுமுறை!**

-செய்தி.

சோம்பல் விடுமுறை!

ஒரே **மேடையில்** ஒன்று படுக! நிகரமை (Socialism) கட்சி ஊழியர்கட்குக் காமராசர் வேண்டுகோள்) —செய்தி.

அப்பொழுதுதானே நாடகத்தை நன்றாக நடத்தமுடியும்!

தனித் தமிழ்நாடு பெறவேண்டுமானால் பெரும் புரட்சி நடந்தால் தான் முடியும். அதற்கும் தமிழர்கள் அணியமாக இல்லை! விரும்பவுமில்லை.

—சா. குருசாமி 'அறிவுப்பாதை'

எந்தத் தமிழர்கள்....? தன்மானமுள்ள தமிழர்களா? 'சுயமரியாதைத்' தமிழர்களா?

இந்தியைத் தீண்டினாலே 'திருநீலகண்டம்' என்ற வெறுப்புடன் சேரி வாழ்க்கை வாழ்ந்தால் வருங்கால மக்களின் கல்வி நிலையும், வேலை வாய்ப்பும் என்னவாகும் என்பதையும் தமிழ் மக்கள் எண்ண வேண்டும்.

—சா. குருசாமி 'அறிவுப்பாதை'.

பட்டணத்திற்குப் போய்ப் பரத்தை வாழ்க்கை வாழ்வதை விடச் சேரி வாழ்க்கை எவ்வளவோ மேல்..!

தன்மான இயக்கமான அறிவியல் (!) இயக்கம் ஒன்றுதான் நிலையான தேசிய ஒருமைப் பாட்டுக்கு வழிகாட்டப் போகின்றது.

—சா. குருசாமி. 'அறிவுப்பாதை'

சாத்திரிக்குப் பின் ஆள் தேடிப் போக வேண்டா...!

உயர்கல்வித் துறையை இந்தியா முழுவதற்கும் பொதுவாக நடுவண ரசுப் பொறுப்பில் விடவேண்டும்.

—பாராளுமன்றக் குழுவின் முடிவு.

'....பிறகு இந்தியைக் கட்டாயமாக்குங்கள் என்று உங்களுக்குத் தொல்லை தரமாட்டோம்; அதை நாங்களே பார்த்துக் கொள்வோம்'

உருசிய மொழியில் கல்கியின் 'அலை ஓசை' என்ற நூல் வெளியிடப் பெற்றது! —செய்தி.

'ஆட்டக்காரி அரசியானால் ஆட்டக்கொட்டகை அரண்மனை.' என்பது பழமொழி!

இருபதாண்டுகளாகப் பைஞ்சுதை (Cement)யிற் கலப்படம் செய்து ஏமாற்றி வந்த கூட்டம் ஒன்று கயை நகரில் பிடிபட்டது

—செய்தி.

“கற்றுக் குட்டிகளாக இருக்கும்.” என்கிறார் **நாற்பதாண்டுத்** திறமையுடைய ஒருவர்!

கள்ளுண்ணல், கவருடல் ஆகிய குற்றங்களின் கீழ் ஒரே கிழமையில் சென்னை நகரில் 1034 பெயர்கள் பிடிக்கப்பட்டனர்.

—செய்தி.

'குடி' யாட்சி!

நடப்பாண்டில் கோவைக் கல்லூரிகளில் தமிழிற் பயிற்று முறை நிறுத்தப் பெற்றது அரசினர் சலுகையை நீக்கியது காரணம். செய்தி.

அடுத்த ஆண்டில் இந்தியைப் பயிற்றுமொழி யாக்க வேண்டாமா?

தமிழகத்தில் பல ஆண்டுகள் நிலவும் தமிழ்த்தன்மை அடைந்துள்ள வேற்றுமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்கள் **கிடைக்காத** பொழுது சேர்த்துக் கொள்வது குற்றமாகாது”

—குறள்நெறியில் இலக்குவனார்.

தேடிப் பார்த்துத் தெளிந்த முடிவோ..?

'சாதிகள் ஒழிய வேண்டுவது தான் முறை என்பதே நமது குறிக்கோளாயினும், இதனை விரும்பாதார் மீது சுமத்தவிரும்புவது அறநெறிக்கு ஒத்தது ஆகாது.'

—குறள் நெறியில் இலக்குவனார்.

அதாவது, “திருட்டு ஒழியவேண்வதுதான் முறை...இதனை விரும்பாதர் மீது சுமத்த விரும்புவதும் அறநெறிக்கு ஒத்தது ஆகாது”

பாகித்தானிலிருந்து சேலத்துக்கு வந்த ஏதிலிகள் தொழிற்சாலையில் வேலைசெய்ய மறுக்கின்றனர். நிலம் வேண்டுகின்றனர். —செய்தி.

இடத்தைக் கொடுத்தால் மடத்தப் பிடுங்குவானும் ஆண்டி?

ஏழைக் கோவில்கட்கு உருபா 2 இலக்கம் பொருள் வழங்கத் திருப்பதி கோவில்முடிவு. —செய்தி.

இந்தத் திருப்பதி பெருமாளின் இரக்க மனம், இங்குள்ள பணக்காரர்களுக்கு வரக்கூடாதா..?

பெரியார் ஈ. வே. இராவுக்குத் திருச்சியில் நிறை மிளகாய் கொடுத்தனர்!

அப்பொழுது கூட அவருணர்வில் பழைய காரம் ஏறவில்லையே!

முதலமைச்சர் பக்தவத்சலம் ஏதத்துக் குள்ளானதைத் தொடர்ந்து முறை தவறியும் விரைவாகவும் உந்து முதலியவற்றை ஓட்டிச் செல்வார் மேல் கடும் நடவடிக்கை எடுக்கு மாறு காவல் துறையினர்க்குத் தமிழ் நாட்டு அரசினர் கட்டளை.

'பட்ட' அறிவு!

போலிக் கூட்டுறவுகளை ஒழிப்பேன் இல்லையேல் அமைச்சு வேலையை விட்டு விலகுவேன்.

—நடுவணரசு அமைச்சர்
எசு. கே. டே

விலகிப்போய் அவர்களோடு சேர்ந்து கூட்டுறவை வளர்ப்பேன்!

சூரத்து மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதை எதிர்த்து வடக்கில் மக்கள் பெருங் கிளர்ச்சி; பெண்டிர் உண்ணா நோன்பு.

—செய்தி.

இந்த 'சூரத்' தனம் சேலத்தில் உள்ளவர்களுக்கு எப்படி வரும்?

சேலம் மாவட்டத்தில் இரும்பு ஆலை அமைப்பது பற்றிய திட்டம் கைவிடப்படல் கூடும். —செய்தி.

அட, சுப்பிரமணியா!

கூல வாணிகத்தில் அரசியலார் ஈடுபடல் வேண்டும்.

—பாராளுமன்ற ஆளுங்கட்சிக் குழுவின் அறிக்கை.

நல்ல அரசியல் 'வாணிகம்'!

பொறியியற் கல்லூரி ஆசிரியர் பலருக்கும் போதிய தொழிற்பயிற்சி இல்லை. ஆகையால் ஆசிரியர்கட்கே அப்பயிற்சி அளிப்பது இன்றியமையாதது.

—பர். இலக்குமணசாமி.

நம் அமைச்சர்களுக்கும் இத் திட்டத்தை விரிவுபடுத்தலாம்.

அமைச்சர்களின் எண்ணிக்கை பெருகுவதால் பூசல் மிகும். வேலை சரிவர நடவாது; பேராயக் கட்சி தன்னை வலுப்படுத்திக் கொள்ளவும் கட்சிக்குள் குழுப்பூசலைக் குறைக்கவும் இவ்வாறு பொதுமக்களின் பணத்தை வீணாக்குதல் தவறு.

—தெக்கான் எரால்டு இதழ்.

செவிடன் காதில் ஊதிய சங்கு!

[26-ஆம் பக்கம் பார்க்க.]

கண்ணீர் வரி.

முந்தையொரு பழம்பொழுதில் முகிழ்த்தலர்ந்து விரிந்துயர்ந்த
அந்தமிழை உட்பொதிந்துன் ஆவியெனக் காத்தனையே;
அந்தமிழை உட்பொதிந்துன் ஆவியெனக் காத்ததெலாம்,
இந்தியெனும் புலைமொழிக்கே ஏவல்செயும் இழிதகைக்கோ?

திக்கெட்டும் மணங்கமழ்ந்து தெளியார்க்கிங் கொளியேற்றும்
முக்கழகச் சீர்சுமந்த முதுநூற்கள் யாத்தனையே!
முக்கழகச் சீர்சுமந்த முதுநூற்கள் யாத்ததெலாம்,
புக்கவரும் இந்தியெனும் புன்மொழிக்குக் காவிடவோ?

'எமையாவன் அறம்பழித்தான்' என்றவரை வென்றுவர
இமையாவெண் பனிமலைக்கல் இவர்ந்துபுலி நாட்டினையே;
இமையாவெண் பனிமலைக்கல் இவர்ந்துபுலி நாட்டியது;
நமையழிக்கும் வடவர்க்கே நாயடிமை செய்திடவோ?

அறம்பிழைத்த மனுநூலை அழித்தொழித்துத் தவறிழையாத்
திறம்படைத்த திருக்குறளைச் செய்தளித்துப் பேணினையே;
திறம்படைத்த திருக்குறளைச் செய்தளித்துப் பேணியது,
மறம்படைத்த இந்தியெனும் மந்தியின்கைத் தந்திடவோ?

இன்மையினார்க் குள்ளிரங்கி, இரவலரைப் பரிந்தேற்றுப்
புன்மையினார் தமையழிக்கப் போர்போரென் றார்த்தனையே;
புன்மையினார் தமையழிக்கப் போர்போரென் றார்த்ததெலாம்,
வன்மையினால் அரசமைத்த வடவரடி தொழுதிடவோ?

திகழ்ந்தொளிர்ந்த செந்தமிழ்த்தாய்த் திருவடிக்கீழ் அரசமர்ந்து
புகழழிக்கும் புல்லர்முன் புலியெனநீ பொங்கினையே;
புகழழிக்கும் புல்லர்முன் புலியெனநீ பொங்கினதிங்
கிகழ்சேர்க்கும் இந்தியினுக் கிருந்தடிமை புரிந்திடவோ?

துரை-மாணிக்கம்

மலைதாழ்ந்து நுண்மணலா மாறிநிலை திரிந்தாலும்,
நிலைதாழாச் செம்மலெனத் தமிழா,நீ வாழ்ந்தனையே;
நிலைதாழாச் செம்மலெனத் தமிழா,நீ வாழ்ந்ததெலாம்,
புலைதாழா வடவரடி பொறிதாழ்ந்து வீழ்ந்திடவோ?

(வேறு)

கடிமுர சிருந்தெறிந்து, கவின்பெறுங் குடையிருந்து
முடியடி பகையரசர் மொய்ம்பழித் திறுத்தினையே!
முடியடி பகையரசர் மொய்ம்பழித் திறுத்தியது,
குடிகொலும் வடவரடி குளிர்தமிழ் வீழ்த்திடவோ?

இழிவென ஆங்கிலரை எழுந்தெதிர்த் தவராட்சி
பழிநினை வடவரொடும் படையழிய ஓட்டினையே!
பழிநினை வடவரொடும் படையழிய ஓட்டியது,
மொழிவழி அடிமைசெயும் முறையிலார்க் கஞ்சிடவோ?

(வேறு)

வடமொழியை ஆங்கிலத்தை வல்லபிற வற்றால்
புடமிடல்போல் செந்தமிழ்க்குப் பொலிவுமிகச் சேர்த்தாய்!
புடமிடல்போல் செந்தமிழ்க்குப் பொலிவுமிகச் சேர்த்து,
மடமிகுந்த இந்தியின்முன் மண்டியிடச் செய்வதுவோ?

நிறைகழகப் புலவோரும், நெடுங்கொடிஆள் வேந்தும்,
மறைமலையும் பசுமலையும் மனவிழியால் காத்தார்!
மறைமலையும் பசுமலையும் மனவிழியால் காக்கக்
குறைமதியால் தமிழ்மகளைக் கொடியவர்கைக் கொடுப்பதுவோ?

இறந்தொழிந்த வடமொழியால் ஏற்றதுயர் ஆறிச்
சிறந்துயரும் பொழுதினிலே சீர்மறந்து போனாய்!
சிறந்துயரும் பொழுதினிலே சீர்மறந்து போனால்,
திறந்தெரிந்த செந்தமிழைத் தெவ்வர்கைப் படுப்பதுவோ!

(வேறு)

மூப்பார் தேனை, வளக்கொழுந்தை
முன்னாள் பிறந்த செந்தமிழை,
யாப்பால் பரவி இசைதந்த
யாழே! களிறே! உனைவிளிப்பேன்:

யாப்பால் பரவி இசைதந்த
யாழே! நீயே நினைமறந்தால்,
காப்பார் யாவர் கொழுந்தமிழைக்
கண்ணுள் மணிக்கே இணைவைத்தே?

பரப்பார் நிலமும் புகழ்பரப்பிப்
பரவா உளமும் கனல்பரப்பும்,
வரப்பார் நெறிநூல் பலசாற்றி,
வந்தாய்! தமிழா, உனைவிளிப்பேன்:
வரப்பார் நெறிநூல் பலசாற்றி,
வந்தாய்! நீயே நினைமறந்தால்,
புரப்பார் யாரிங் கொளிதமிழை;
பொருள்,மெய், ஆவிக் கிணைவைத்தே?

பணையார் தோளும், உணர்நெஞ்சும்
பணிசெய் முனைப்பும் விறல்வேந்தும்,
புணையாய் இருந்தே தமிழ்ப்புரந்த
புலியே! ஒருசொல் உனைவிளிப்பேன்:
புணையாய் இருந்தே தமிழ்ப்புரந்த
புலியே, நீயே நினைமறந்தால்,
துணையார் இனியே தீந்தமிழ்க்கே;
தொலையா வாழ்விற் கிணைவைத்தே?

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

எத்துணை நலங்கள் கிடைப்பதானாலும் நமக்கு அவைவேண்டா. ஊன் ஓம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை, பீடு அழிய வந்தவிடத்து மருந்தாகாது! மொழி யிழந்து ஊமையாகிப் பண்பாடிழந்து விலங்காகி, உரிமையிழந்து அடிமையாகி வாழ்வுநடத்த நாம் என்றும் விரும்பியதில்லை. தமிழன் பிற்காலத்தில் உரிமையற்றுப் போவான் என்பதற்கு இந்திமொழி நுழைகின்ற இற்றைத் தமிழகக் கல்விக் கூடங்களும், தமிழ் வழிப் பயிற்சி நடத்தாத கல்லூரிகளுமே சான்று! மொழியுரிமை தராத சட்ட முரண்பாடுகளே கண் கூடு! தமிழா, நீ இன்னும் விழிக்கவில்லையாயின் அழிக்கப் படுவாய் என்பதை அறி!

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

என் அண்ணாமலைநகர் வாழ்க்கை

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

1. முயற்சிப் படலம்.

உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளுமான கல்வி நிலையங்களிற் கற்பிக்கப்பெறும் பாடங்களுள், தமிழ் ஒன்றே அடிமுதல் முடிவரை தருக்கத்திற்கும் முரண்பாட்டிற்கும் இடமானதாம். இஃது ஆரியத்தினால் தமிழுக்கு விளைந்த தீங்குகளுள் ஒன்று. தமிழ் நெடுங் கணக்கே ஆரியத்தினின்று திரிந்ததாகக் கால்டுவெல் கண்காணியாரும் கூறிவிட்டார். இஃது, ஏற்கெனவே வெறுவாயை மென்று கொண்டிருந்த வடமொழி வெறியர்க்கும் அவரடியார்க்கும் அவல் கிடைத்தது போலாயிற்று. கால்டுவெலார் நுண்மாண் நுழைமதியாரும் நிறைகோல் நடுநிலையாருமாயிருந்தாரேனும், அவர் காலத்திற் கழக (சங்க) நூல் வெளிப்பாடும் குமரிக் கண்ட வரலாறும் மறைமலையடிகள் போலும் புலவரும் தனித்தமிழ் ஆராய்ச்சியும் இன்மையால், தமிழின் உண்மைத் தன்மையை அவர்காண இயலாது போயிற்று. இதனால் அவர் பெயருக்கு எள்ளளவும் இழுக்கில்லை யென்க.



இயல்பான எளிய தமிழெழுத்துக்களும் ஆரியவல்லெழுத்துக்களின் மெலிவென்றும், தூய தென்றமிழ்ச் சொற்களும் வட சொற்களின் திரிபென்றும், வலம்புரி முத்திற் புலஞ்சிறந்த தலைத் தமிழ் நூல்களும் சமற்கிருத நூல்களின் மொழிபெயர்ப்பென்றும், செந்தமிழ்க்கே சிறப்பான கலைகளும் அறிவியல்களும் இலக்கண வமைதியும் வட நூல் அடிப்படையினவென்றும், இனி, முழுப் பூசனிக்காயைச் சோற்றில் முழுக்குவது போலத் தமிழ் என்னும் பெயரே திரவிடம் என்பதன் திரிபென்றும், பரவெளி ஆராய்ச்சி மிக்க

இவ்விருபதாம் நூற்றாண்டிலும் நெஞ்சழுத்தங்கொண்டு நாக்கடிப்பாக வாய்ப்பறையறைவதும், மொழி நூற்பெயரில் வெளியிடுவதுமாயிருப்பதால், வையாபுரிவழியினரும் மறைமலையடிகள் வழியினருமாகத் தமிழ்ப் புலவருந் தமிழாசிரியரும் இருவகையர்.

ஆலைத் தொழில் முதல் அரசியல் வரை எல்லாத் துறைகளிலும் ஆரியம் வேரூன்றியிருப்பதால், தமிழின் உண்மைத் தன்மையை எடுத்துரைத்தற்கும் காத்தற்கும், நுண்மதி, தமிழாங்கிலப் புலமை, ஆய்வுத் திறன், நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை ஆகிய அறுதிறம் இன்றியமையாது வேண்டும். இவ்வாறும் தவத்திரு மறைமலையடிகளிடம் நிறைவுறவிருந்தன. அதனால், தமிழ்ப் புலமையில் பனிமலைபோல் தனிமலையாக இருந்தாரேனும், அவர்கட்கு உறைவுக் காலத்திலும் மறைவுக் காலத்திலும் வேத்தியலாராலும் பொதுவியலாராலும் பாராட்டுமில்லை, பரிசுமில்லை. இந்நிலைமையே அவர் வழியினருக்கும். ஆரியச் சார்பான எக் கல்வி நிலையத்திலும் அவர்க்கு அலுவலுமில்லை; சொற்பொழிவு வாய்ப்புமில்லை,

யான் ஓராண்டு நடுநிலைப் பள்ளியிலும். இருபத்தீராண்டு உயர்நிலைப்பள்ளிகளிலும், பன்னீராண்டு கல்லூரியிலும், தமிழாசிரியனாகப் பணியாற்றினேன். இவற்றுள், உயர்நிலைப் பள்ளியிரண்டும், கல்லூரி ஒன்றும் ஆக முக்கல்வி நிலையங்களே கிறித்தவ மதச் சார்பற்றவை. ஏனையவெல்லாம் கிறித்தவக் கல்வி நிலையங்களாதலின், அவற்றில் எளிதாய் எனக்கு வேலை கிடைத்தது.

உயர்நிலைப்பள்ளி யிரண்டனுள், முதலது பிரம்பூர்க் கலவல கண்ணனார் உயர்நிலைப்பள்ளி; இரண்டாவது சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி. முதலதில் வேலை கிடைத்ததற்குக் கரணியம், பேராயக் கட்சிப் பெருமகனும் பெயர்பெற்ற அறுவையரும் (Surgeon) பிராமணருமான காலஞ் சென்ற பண்டகர் (Dr.) மல்லையாவின் பரிந்துரையே. மேலும், அக்காலத்தில் என் மொழியாராய்ச்சி அரும்பியிருந்ததேயன்றி மலர்ந்திலது. இரண்டாவதில், பண்டாரகர் Dr.) அரசமாணிக்கனாரின் பரிந்துரையும், தமிழ்ப் பெருமகன் (C. D.) நாயகம் அவர்களின் தமிழ்ப்பற்றும், அற்றைப் பள்ளியாளுங் கணத்தாரின் தமிழவுணர்ச்சியுமே கரணியம்.

கல்லூரி சேலத்து அற்றை நகராட்சிக் கல்லூரி. அதில் முன்பு தலைமைத் தமிழாசிரியப் பதவியும் பின்பு தமிழ்ப் பேராசிரியப் பதவியும், ஈடும் எடுப்புமற்ற உயர்திரு. இராமசாமி அவர்களின் தமிழார்வத்தாலும், நகராட்சித் தலைவர் திரு. இரத்தினசாமி அவர்களின் தமிழ்ப் பண்பாட்டாலும், நகராட்சித் தலைவர்

திரு. இராமலிங்கனார் அவர்களின் தமிழ்ப் பற்றுலும் எனக்குக் கிட்டின. தமிழ் நாட்டில் தமிழரையே முதல்வராகக் கொண்ட எத்தனையோ கல்லூரிகளிருந்தும் சேலங் கல்லூரி ஒன்றிலேயே எனக்கு வேலைகிடைத்ததும், அங்குப் பன்னீராண்டு பணியாற்றி யும் இன்று சொற்பொழிவாற்றவும் எனக்கதில் இடமில்லாதிருப் பதும், பேராசிரியர் இராமசாமியார் அவர்கள் தமிழ்ப்பற்றின் பேரெல்லையை உணர்த்துகின்றன.

சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகமா யிருந்தும் அதில் தமிழ் சரியாய்ப் பேணவும் கவனிக்கவும் பெரு மையால், தமிழ் மொழியிலக்கியம் பண்பாட்டைத் தகுந்த முறை யில் வளர்ப்பதையும், உலக முழுதும் பரப்புவதையுமே சிறந்த குறிக்கோளாகக் கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் காலஞ்சென்ற அரசவயவர் அண்ணாமலையார் அவர்களின் அரு முயற்சியால், 1929-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பெற்றதென் பது அனைவரும் அறிந்ததே. ஆயினும், கால் நூற்றாண்டிற்கும் மேற்பட அஃது எனக்கு அண்ணாமலையாகவே இருந்தது.

அதில், தமிழ் ஆராய்ச்சித்துறை ஏற்பட்டபொழுது துறைத் தலைவரைத் தெரிந்தெடுத்தமைத்தற்குப் பல்கலைக் கழக அதி காரிகள் முப்பெயர்ப் பட்டி யொன்றை வேண்டியதாகவும், அவ் வேண்டுகோட்கிணங்கி என் பெயர் உள்ளிட்ட ஒன்றைத் தாங்கள் விடுத்ததாகவும் தவத்திரு மறைமலையடிகள் என்னிடம் சொன்னார்கள் அதற்கேற்ப; பண்டாரகர் (டாக்டர்) மணவாள இராமானுசம் அவர்கள் அப் பல்கலைக் கழகத் துணைக் கண் காணகராயிருந்தபொழுது, சேலம்நகராட்சிக் கல்லூரிச்சம்பளத் திற்குமேல் ஈராட்டைக் கூடுதல் தருவதாகக் கூறி என்னை அப் பதவிக்கு அழைத்தார்கள். எனக்கு அப் பல்கலைக் கழகத்தின் அற்றை நிலை முற்றும் ஏற்றதாயிருந்ததேனும், வடமொழி வெறி யர் ஒருவர் அதற்குத் துணைக் கண்காணகராய் வரக்கூடிய பிற்றை நிலை நோக்கி அப் பதவியளிப்பை ஏற்கவில்லை. நான் அஞ்சியவாறே நேரவுஞ் செய்தது. ஆயினும், ஒரு பல்கலைக் கழகத்திற்குத் தாவக்கூடிய அளவு பேராசிரியர் இராமசாமியார் அவர்களால் உயர்த்தப் பெற்றிருந்த என் நிலைமையெண்ணி மகிழ்ந்தேன்.

1956-ஆம் ஆண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திரவிட மொழியாராய்ச்சித் துறை சூன் மீ ஏற்படுமென்றும், அதற்குத் துணைப் பேராசிரியர் முதலில் அமர்த்தப்பெறுவாரென் றும், முதற்கண் மேற்கொள்ளும் பணி தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி(அகராதி)த் தொகுப்பு என்றும், செய்தித்தாட்களில் வெளியான விளம்பரம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. தமிழ் வேர்ச்சொல் அகரமுதலி என்னையன்றி வேறெவராலும்

தொகுக்க முடியாததாலானும், என் உற்ற நண்பர் தூண்டுதலானும், ஊக்கங்கொண்டு, துணைப் பேராசிரியப் பதவியினின்று நாளடைவில் பேராசிரியப் பதவிக்கு உயரலாமென்னும் நம்பிக்கையுடன், அப்பதவிக்கு வேண்டுகோள்விடுக்கத் துணிந்தேன்.

இதற்கிடையில், சேலங் கல்லூரி இராமசாமி அவர்கள் மாணவர் விடுதியைத் திறந்துவைக்க அரசவயவர், முத்தையா அவர்கள் சேலம் வந்திருந்தார்கள்: அவ்வமையம், சேலங் கல்லூரி முதல்வர் பேரா. அச்சுதரும், பேரா. சொக்காப்பாவும், பேரா. கோவிந்தராசனும் என் தகுதியைப்பற்றி (அ. ம. ப. க. க. இணைக் கண்காணகர்) அரசவயவர் முத்தையா அவர்களிடம் சிறப்பாய் எடுத்துக் கூறினர்கள். திரு. முத்தையா அவர்களும் வேண்டுகோள் விடுக்கச் சொன்னதுமன்றி, அ. ம. ப க. க. பட்டமளிப்பு விழாவிற்கும் என்னைச் சிறப்பு விருந்ினராக வரவழைத்தார்கள்.

இதையடுத்து, மதுரைத் தியாகராசர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பண்டாரகர் அரசமாணிக்கனரும் துணைத் தமிழ்ப் பேராசிரியர் ஔவை சு. துரைசாமி அவர்களும் எனக்காக அ. ம. ப. க. க. இணைக் கண்காணகர்க்கும் துணைக் கண்காணகர்க்கும் பரிந்தெழுதியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். நான் அப் ப. க. க. பட்டமளிப்பு விழாவிற்குச் சென்றிருந்த பொழுது துணைக் கண்காணகர் திரு T. M. நாராயணசாமி அவர்கள் என்னிடம், "உங்களைப்பற்றி அரசமாணிக்கனரும், ஔவை. சு துரைசாமி அவர்களும் எழுதியிருக்கிறார்கள். ஆனால், எனக்கென்ன தமிழ் தெரியும்? சேதுவும் (தெ. பொ.) மீனாட்சிசுந்தரம் அவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தாம் கவனிக்க வேண்டும்." என்று சொல்லிவிட்டார்கள். அதினின்று எனக்குள்ள வாய்ப்பியல்பை உய்த்துணர்ந்து கொண்டேன்.

திருச்சி முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் சென்றவிடமெங்கும் பேசும் பொழுதெல்லாம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் தொகுப்பிற்கு நானே தக்கவனென்று பெருமுழக்கம் செய்தார். ஆயினும், திரு. நாராயணசாமி அவர்கள் பேரா. சேது அவர்கள் கீறின கோட்டைத் தாண்ட விரும்பவில்லை.

பேரா. சேது அவர்கள் என்மீதும் தனித்தமிழிலும் பற்றற்றவர் என்பது எனக்கு முன்னரே நன்றாய்த் தெரியும். அதோடு, அண்ணாமலைநகரில் நடைபெற்ற கீழைக்கலை மாநாட்டில் பேரா. தெ. பொ. மீ. யொடு நான் கருத்து வேறுபட்டமையும் என்

(19-ஆம் பக்கம் பார்க்க)

5-ஆம் தொடர்.

இலக்கியம்

ஆந்தைப் பாட்டு.

ம. இலெ. தங்கப்பா.

"வைய நலம் வேண்டா; வாழ்க்கை இனிவேண்டா;
பொய்யின்பம் வேண்டா; புலனுல் இடர்வேண்டா;

எய்தா நசை வேண்டா; இற்றழிதல் பின் வேண்டா;
வெய்துயிர்த்து நெஞ்சொடியும் வேட்கை இனிவேண்டா;

முந்தும் இரக்கம் முகிழ்த்தொருவன் தான்மணக்க
வந்தாலும் வேண்டா; வரைவாம் துயர் வேண்டா;

வன்மையுளான் போலும் வருவான் மணமுடிப்பான்;
பின்னிரு நாட் சென்ருல் பிழைப்பான்; திரிந்திடுவான்;

அன்னேன் கசப்புக்கும், அண்டை வெறுப்புக்கும்,
சின்னஉள மாந்தர் சிரிப்புக்கும் ஆளாகிக்

கொன்னே வருந்திக் குலேவுறுதல் தான்வேண்டா;
இன்னே துயர்போதும், இன்னும் சுமை வேண்டா;

என்ன உலகின்பம்; எற்றே பெருந்தாய்மை!
மன்னுலகில் பல்லோர் மகிழ்தனிமை கொள்கின்ருர்.

சொல்லுவதேன்? பெண்மைச் சுடரனேயார், மெல்லியலார்
நல்லழகும் வாய்ந்தார்தாம் நாடுவிட்டு நாடுவந்து

மேவும் பொதுப்பணியில் மெய்யின்பம் காண்கின்ருர்.
வாழ்வில் உயர்குறிக்கோள் வாய்ந்தால் அதுவியலும்!

யானும் அவரோ டிணைய முயன்றிடுவேன்;
ஊனின் வலிவதனை உள்வலியால் வென்றிடுவேன்;

நாளேயே சென்றவர்பால் என்கதையைக் கூறியவர்
தாளேப் பிடித்தேனும் தொண்டில் இணைந்திடுவேன்."

ஓரிரவில் பெண்ணிவ்வா றுள்ளத்தின் போராட்டம்
தீர முடிவெடுத்தாள்! தேர்ந்த நொடிப்பொழுதே
உள்ளழுத்துந் துன்பமெலாம் ஓடி மறைந்தனவே.
தள்ளவொணா ஏக்கமெலாம் தாமாய்ப் பறந்தனவே.
"இன்பத்து ளின்பம் விழையாதார் துன்பத்துள்
துன்பம் உறுதலிலர்" என்ற குறளுக்
கிலக்கியமா நங்கை இலங்கினாள்; உள்ள
நிலைக்கண் புதுமை நிகழ்ந்ததனைத் தானுணர்ந்தாள்.
பெற்றோர்மற் றில்லாதாள்; பேதை தனித்திருந்தாள்.
உற்ற புகைவிளக்கோர் ஓரத்தில் நின்றெரியும்.
கூரைமேல் புன்காற்றுக் கூவி அசைந்திருக்கும்.
சாரையாய்ச் சிற்றெறும்பு சார்ந்து சுவர்ஊரும்.
பல்லியொன்று பூச்சியினைப் பார்த்துக் குறிவைக்கும்.
மெல்லியலாள் நெஞ்சத்துள் மேவும் அமைதியிலே
புத்தம் புதுவாழ்வின் பூசல் கிளர்ந்ததுவால்!
சட்டென் றெழுந்தாள்; தனக்குள் நகைபுரிந்தாள்;
கைகொட்டி ஆர்ப்புற்றாள்; கண்ட புதுமுடிவால்
எய்துற்ற உள்ளாற்றல் எம்பிக் குதிப்பச்
சிறகு முளைத்த சிறியதொரு புட்போல்
அறையுள் அமர்கிலாள்; ஆர்வமிகத் தாழ்திறந்து
கொல்லைப் புறமடைந்தாள்; கோலக் கதிர்பரப்பும்
முல்லைக் குளிர்வெண் முழுநிலவில் அன்று
புதிய வொளிகண்டு பூரித்தாள்; சற்றே
மதியொளியில் தோய்வெண்ணி மங்கை நடந்திட்டாள்.
ஆங்கருகில் மின்னி அழகுமிழ்ந்த ஆற்றோரம்
பூங்கரையைச் சென்றடைந்தாள்; புல்மேட்டில் நின்றபடி
வெள்ளி உருக்காய், வெளிற்றரவம் போல்நெளிந்து
பள்ளத்துள் நீர்ஓடும் பாங்கில் தனையிழந்தாள்.
யாங்குள்ளாள், யாதுபொழு தென்பதெலாம் தான்மறந்தாள்.
ஆங்கோர் கனைப்பொலியைக் கேட்டுத் திடுக்கிட்டாள்
ஆரென்று பார்க்கவோர் ஆடவனை முன்கண்டாள்!
நேராய் எதிர்வந்தான்; நேரிழையாள் அஞ்சி
விலகினாள்; அம்மாந்தன் மேலும் நெருங்கி,
"நிலவில் உலவுகின்றாய் நீ யார்"? எனக் கேட்டான்.
என்னிதுகாண்! மங்கைஅவன் யாரென்று கண்டுகொண்டாள்.
முன்னர் "அழகில்லை" என்று குறைகூறி,
மேலும் பொருள்விழைந்த புல்லனவன்! இப்போழ்து
கோல மகளொருத்தி கொண்கனவன்! நங்கையாள்

சட்டென் றுளம் நடுங்கி, மேனி பதைபதைத்தே
எட்ட நடந்தாள் இலம்நோக்கி; அவ்வேளை

அந்த இழிஞன், அறையவொணா மாத்தீயன்
மந்தி மனங் கொண்டுவிட்டான்; மங்கை தனித்திருத்தல்

கண்டு நிறையழிந்தான்; காதற் குளந்துடிக்கும்
பெண்டென்று கொண்டானோ? பித்துற்றான் கீழ்மகன்காண்!

என்புகல்வேன், என்புகல்வேன்! ஈதோதான் ஊழென்பார்?
பின்பு நிகழ்ந்ததெலாம் பேச நடுங்குகின்றேன்.

அந்தோஎன் நாடே, அழிவின் கொடுங்காடே!
நொந்தவர்மேல் வேல்பாய்ச்ச நோன்போ
தலைக்கொண்டாய்?

புன்மகராம் நச்சரவுப் புற்றடர்ந்த பாழ்ங்குகையே
தொன்மைப் புகழ்கெடுத்தாய்; தூய்மை அழிந்தாயே!

மங்கை கிடக்கின்றாள் மாணும் உருக்குலைந்து,
வெங்காற்று மாமழையில் வீழ்ந்துபட்ட மென்மலர்போல்;

வல்லுருவை வாய்ப்பட்ட வன்னச் சிறுபுட்போல்;
வில்லின் கணைதைத்து வீழ்ந்த இளமான்போல்.

தீயோன் நடந்துவிட்டான்! தீய்த்த கடுவேட்கை
மாய, மனம்கசந்து, மாழ்கிக் குறுகியே.

ஆளைக் கடித்தே அரவம் வளைபுகல்போல்,
பாலுருட்டி உண்டு பதுங்குஞ் சுணங்கன்போல்,

நெஞ்சில் கறையாம் நெருப்பின் வடுத்தாங்கித்
துஞ்சா இழுக்கைச் சுமந்து மறைந்திட்டான்.

பெண்ணாள் உணர்வுற்றாள்; பிய்க்கின்றாள் தன்மயிரை;
மண்ணிற் புரள்கின்றாள்; மார்பில் அறைகின்றாள்;

கையைப் பிசைகின்றாள்; கண்ணீர் சொரிகின்றாள்;
வையமின்னும் வாழுதம்மா! வையமின்னும் வாழுதம்மா!

மையற்ற தாய்க்குலத்தின் மாண்புக் கிழுக்கூட்டி
வையமின்னும் வாழுதம்மா! வையமின்னும் வாழுதம்மா!

"ஆருமிலாப் பாழிரவே, ஆற்றங் கரையருகில்
கார்குழலைத் தீய்ப்பதற்குக் காத்திருந்த தெத்தனை நாள்?

சூறைக்கும் வன்கொலைக்குந் தூய்மையிலாச் செய்கைக்கும்
மாறாத் துணைபுரியும் மாண்பின்மை கொண்டாயோ?

வாராப் பிழைவளர்ப்பாய்; வல்லிருளால் போர்த்திடுவாய்
கார்உளத்தார் தீமைக்குக் கைவிளக்கம் ஆனாயோ?

"ஆறே, நிலவே, அழகமர்ந்த பைம்பொழிலே,
தேறாத நெஞ்சுக்குத் தேறுதல்நீர் என்பாரே;

நேராய் உமையணுகி நிற்கையிலே, அம்மாவோ,
பாரா வலைவீசிப் பாழ்ங்கொடியன் கையிலெனைச்
சேருக்கி விட்டீரே! சீர்குலையச் செய்தீரே!
ஆறாத் துயர்க்கனலால் அற்றழிந்து போகீரோ? 710

"மீனும் நிலவும் விழித்திருந்தும் யாதுபயன்?
வானம் அருட்கை வளைத்திருந்தும் யாதுபயன்?
கூனற் கடைமாந்தன் கொய்திழிவு செய்தானே!
மானம் அழிந்தேனே! மாணியற்கை நற்றாயே,
ஏனோ துயின்றாய்? இழிவைத் துயர்க்கனலை
நீநின் பரிசாக நேர்ந்தெனக்குத் தந்தாயோ? 716

ஓதும் அறநூல் உயர்ந்ததென்ன, நன்னெறியால்
ஏதம் கடிந்துபல சட்டம் இயன்றென்ன?
கோது விளைந்தபினர்க் கொல்தண்டம் யாதுபயன்?
தீதே விளையாமல் செம்மை நெறிவளர்க்க
யாதும் வழியிலையா? யாதும் முறையிலையா?
பேதை வினவுகின்றேன் பேசாயோ தொல்லுலகே? 722

அம்மா! கடையன், அழிஞன் தவறிழைத்தான்!
விம்மானோ? புன்னெஞ்சம் வெந்து சிதறானோ?
கம்பிப் புலம்பானோ? கையற் றழியானோ?
இம்மித் துயிலளவும் இன்றித் துடியானோ?
செம்முந் துயரறுக்கச் சிந்தானோ கண்ணீர்தான்?
நன்மை கொடியனுக்கு நச்சாகிப் போகாதோ? 728

தொல்லைக் குடையானோ? துன்பால் அழுங்கானோ?
அல்லுற் றழுநெஞ்சால் அஞ்சிஅஞ்சி மாழ்கானோ?
மெல்லியலார் சூழ்ந்தவன்மேல் கான்றுமிழ மாட்டாரா?
கல்லாகி வாழ்வெல்லாம் கைப்படைந்து வேகானோ
எல்லையிலா உட்பூசல் என்றும் அடங்காமல்
சொல்லிப் புலம்பானோ சுட்டதென்றன் சொல்லென்றே? 734

அன்றோ மணக்க அழகில்லை என்றுரைத்தான்;
இன்றோ வெறியால் எனைக்கேடு செய்தானே!
நின்ற வுடற்காமம் நேரழகின் போர்வைகீண்(டு)
இன்றுருவம் காட்டிற்றே! என்னோ அவலமிது!
குன்று நெறிப்பெருமை கொண்டதமிழ்ப் பீடெல்லாம்
தின்றான்! இருப்பானோ? தேம்பிஅழு கின்றேனே! 740

காதலிலேன்; இன்பமிலேன்; காப்பிழந்தேன்; வாழ்விழந்தேன்;
சாதலின்றி யாதுடையேன் சாற்றும் பணிவாழ்வின்
மாதர் துறவின்மேல் மாலுற்றேன்; அந்நொடியே
மோதித் துணித்தானே! முந்தை வினையிதுவோ?
பேதையேன், பேதையேன்! பித்துற்றிங் கேன்வந்தேன்?
தீதை வலிந்தேற்றுச் செத்தொழிய வந்தேனோ? 746

பெற்றோர் கவலைக்கும், பெற்றியிலார் தூற்றலுக்கும்,
உற்ற முதியார் உருள்விழிக்கும், வீட்டோரம்
வற்றாத எள்ளற்கும் மாதர்வாய்க் கோணலுக்கும்
பற்றி எரிகின்ற பஞ்சுளத்தின் துன்புக்கும்
எற்றே பிழைத்திருப்பேன்? ஏற்றதுயர் போதாதோ?
உற்றடங்க இந்த உயிரும் இனிதாமோ? 752

என்று கதறினாள் ஏந்திழையாள்; வானுமங்குக்
கன்றி அழுததுபோல் வெண்பனியுங் கான்றதுவால்.
வீழ்ந்தாள்; எழுந்தாள்; வெறியுற்றாள்; கண்புனலுள்
ஆழ்ந்தாள்; அதிர்ந்தாள்; அலைகுழலாற் கண்மூடி
நைந்தாள்; குமைந்தாள்; நடுங்கினாள்; வெய்துயிர்த்தாள்
தொய்ந்தாள் வலுவெல்லாம்; தொல்லை உலகுவிடுத்(து)
ஓடினாள்; ஆற்றுள் உறுங்கயத்தே போய்வீழ்ந்தாள்.
பாடு முடிந்ததுகாண்; பாழமைதி சூழ்ந்ததுவால். 760

(அடுத்த இதழில் முடியும்.)

(14-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்தத்திற்குப் பெருந்தடையாம் என்று சிலர் பேசிக் கொண்டனர்.

வேண்டுகோள் விடுத்து அரையாண்டாயிற்று. எத்தகை விளைவும் நேர்ந்திலது. முப் பேராசிரியர் முரண்டுகொண்டு எனக்கு முட்டுக்கட்டையிடுவதாக, செவிச் செய்திகள் வானில் உலாவின.

இந்நிலையில், காலஞ்சென்ற பண்டகர் வ ர த ர ா ச லு அவர்கள் சேலம் வந்து, பண்டகர் இராசாராம் வளமனையில் விருந்தினராகத்தங்கினார்கள், அதுபொழுது பின்னவர்(பண்டகர் இராசாராம்) அ. ம. ப. க. க. வேலையைப் பற்றியும் என்னைப் பற்றியும் முன்னவரிடம் எடுத்துரைத்தார். முன்னவரும் ஆவன செய்வதாகச் சொன்னார்.

அடுத்து வருவது அமர்த்தப்படலம்.

*

உடலியல்

மூளை.

மண்டையின் பருமனுக்கும் அதிலுள்ள மூளை அளவிற்கும் அறிவிற்கும் எவ்வகைத்தொடர்பும் இல்லை. பெரிய மண்டையில் உள்ள மூளையின் அளவு பெரியதாக இருக்குமே எனினும் அத்தகையோர் மூடராகவும் இருக்கலாம்; சிறிய மூளைத் தொகுதி உடையோர் சிலர் பேரறிஞராகவும் இருக்கின்றனர். ஆனால் பொதுவாக மாந்தனுடைய மூளையின் சராசரி எடை ஏறத்தாழ 48 'அவுன்சு' அல்லது 120 தோலா (அதாவது 3 பவுண்டு) ஆகும். சிலருடைய மூளையின் எடை 64 'அவுன்சு' வரை இருக்கும். உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாவற்றினும் யானைக்கும் திமிங்கிலத்திற்குமே, மாந்தனுடைய மூளையினும் கூடுதலான எடையுடைய மூளை உள்ளது. எனினும் அவை மாந்தனைவிட வளர்ந்த அறிவுள்ளவையாக இல்லை. இதற்குக் காரணம் அவற்றின் மூளை, அவை தம் உடல்களின் பருமனைப் பார்க்கிலும் மிகமிகக் குறைந்த எடையுடையது மாந்தனுக்கிருக்கும் மூளையின் எடை அவனுடைய உடல் எடையில் நாற்பதில் ஒரு பங்கு ஆகும். யானையின் மூளை எடை அதனுடைய உடலின் எடையில் ஐந்நூற்றில் ஒரு பங்காம்! திமிங்கிலத்திற்கு இருக்கும் மூளையின் எடை அதனுடைய உடலின் எடையில் பன்னிரண்டாயிரத்தில் ஒரு பங்காகும்!

மாந்தனின் உடலில் மிகவும் ஆற்றல், வாய்ந்த பகுதி மூளையே. அவனுடைய ஐம்புலன் அறிவிற்கும் ஐம்பொறி இயக்கத்திற்கும் மூளையே காரணமாகி நிற்கின்றது. உடலில் உள்ள உறுப்புகள் எல்லாமே செவ்வையாகவும் திறமுடையனவாகவும் அமைந்திருந்து, மூளை ஒன்றுமட்டுமே தன் திறனிலும் இயக்கத்திலும் குறைந்திருக்குமானால், அத்தகைய மாந்தர் எதற்கும் பயன்படாமல் வெறும் விலங்குகள் போல் எவ்வகையான ஆளுமை ஆற்றலும் அற்றவராக இருப்பர். மாந்தப் பயனிற்கு மூளை மிகவும் தேவையான பகுதியாக இருப்பதால், மூளை மிகவும் காப்பான இடத்தில் வைக்கப் பெற்றுளது. மூளையைச் சுற்றிலும் சிலந்தி வலை போன்ற மென்றோலும், அதை

யடுத்து அதனினும் சிறிது வலுவிருந்த நிணத்தோலும், அதன் மேல் மண்டையோட்டுடன் சார்ந்ததும் மிகவும் உறுதியாக அமைந்ததும் ஆன ஒரு வன்ருேலும், அதைச்சுற்றிலும் தண்டு வட நீர் என்ற குழைவை நீர்ப்பகுதியும், அவற்றை அகப்படுத்திய வலிவான மண்டை ஓடும் மூளைத் தொகுதியைக் கடிகாவல் புரிகின்றன. மூளைத் தொகுதியுள் பெரு மூளையும், சிறு மூளையுமே தலையாய பகுதிகள். பிறவெல்லாம் அவற்றின் உறுப்புகளே!

மூளைத்தொகுதியின் பெரும் பகுதி பெரு மூளையே. இது மூளைத் தொகுதியின் மொத்த எடையில் 85 விழுக்காடாகும். தலையின் முன் பக்கத்தையும், பின்புற இடப்பக்கத்தையும் பெரு மூளை ஆட்கொண்டுள்ளது இது சாம்பல் நிறமான நுண்ணுயிர் அணுக்களால் ஆனது. இதில் ஏறத்தாழ தொன்னூறு இலக்கம் உயிரணுக்கள் உளவாகக் கணக்கிட்டுள்ளனர். இந்நுண்ணுயிர் அணுக்கள்தாம் மாந்தர்தம் எண்ணங்கள், செயல்கள் இவற்றிற்குக் காரணமாகும். பெரு மூளையில் வெண்ணிறமான நுண்ணுயிர்ப் பகுதியும் உள்ளது. அது தண்டுவடத்துடன் இணைக்கப்பெற்றும், மெல்லிய நார் நரம்புகளால் பிணிக்கப் பெற்றும் உள்ளதால், உடலில் இருந்து வரும் செய்திகளை அவ்வப் பொழுதே பெரு மூளையின் சாம்பல் நிற நுண்ணுயிர்களுக்கு உணர்த்துகின்றது. பெருமூளை தான் மாந்தனின் மூளைத்தொகுதியில் மிகவும் சிறப்பானதும் இன்றியமையானதும்,புதுமையானதுமான பகுதி. இதுவன்றிப் பிற பகுதிகளான சிறு மூளைத் தொகுதியும் வேறு சில வேண்டாத பகுதிகளும் மாந்தனின் கூர்தலற வளர்ச்சிக்கு முன்பிருந்தே தொடர்ந்து இருந்து வருகின்ற மிகப் பழைய பகுதிகளாகும். பெரு மூளை கூர்தலற (பரிணாம) வளர்ச்சியின் இறுதிப் படி. விலங்கிலிருந்து மாந்தன் வேறுபட்டபின் தோன்றி வளர்ந்த பகுதி இது. பிற உயிரிகளில் இப் பெருமூளைப் பகுதி இல்லை. விலங்குகளிடம் கூட உயிர் வளர்ச்சியில் மிகப்பழையதான சிறுமூளைத் தொகுதியே உள்ளது இச் சிறுமூளையே பறவைகள், விலங்குகள் முதலிய எல்லா உயிரிகளையும் ஆள்கின்றது. ஆனால் மாந்தனின் பெருமூளையோ அவன் மூளைத் தொகுதியுள் இருக்கும் சிறு மூளைத் தொகுதியையும் ஆள்கின்றது.

முகவர்கள் கவனிக்க.

ஒவ்வொரு திங்களும் 5-ஆம் நாளைக்குமேல் பட்டியல் பணம் விடுக்கும் எந்த முகவர்க்கும் கண்டிப்பாக இனி இதழ் விடுக்கப் பெருது என்று அறிவிக்கின்ருேம்.

— அமைச்சர்.

பெருமூளையின் வெளிப்பகுதி பல மடிப்புகள் நிறைந்தது. இம் மடிப்புகளையெல்லாம் பிரித்துப் பரப்பி வைத்தால், தலை தவிர்த்த உடலாகிய முண்டத்தின் பரப்பளவு விரியும். இத் தகைய மடிப்புகளே மாந்தனின் அறிவுத் திறனுக்குக் காரண மாகும். மிகுதியான மடிப்புகள் உள்ள பெரு மூளையை உடைய ஒருவன் பேரறிவு சான்றவனாக இருப்பான். மூளைத் தொகுதியுள் வேண்டாத, எவ்வகைப் பயனுமில்லாத சில பகுதிகள் இருக் கின்றன. இவற்றைத் தலையினுள்ளிருந்து அகற்றிவிடினும் மாந்தனின் இயக்கத்திற்கு எவ்வகை ஊறுபாடும் நேர்வதில்லை. ஆனால் மூளையின் பிற பகுதிகளுக்கு ஏதேனும் ஊறு நேர்வதால் மக்களின் உளச் செயல்களும் உடல் செயல்களும் தாக்கப் பெறும்.

நுகர்ச்சி, உறுப்பு அசைவுகள், பார்வை முதலியவை எல்லாம் பெருமூளையின் செயல் திறத்தாலேயே நடைபெறு கின்றன பெரு மூளையின் இடப்பகுதி உடலின் வலப்புற உறுப்புகளையும் அதன் வலப்பகுதி இடப்புற உறுப்புகளையும் இயக்குகின்றன. மாந்தரில் பெரும்பாலார்க்கு பெருமூளையின் இடப்பகுதியே மிகுந்த இயக்கப் பகுதியாக இருப்பதால், அவ ரெல்லாரும் உடலின் வலப்புற உறுப்புகளையே மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். இடக்கைப் பழக்கமுடையவர் எல் லார்க்கும் பெரு மூளையின் வலப்புற ஆட்சியே மிகுதியாக இருக்கும். இப் பழக்கத்தை மாற்ற முயன்றால் மூளைத் திறன் குன்றும்; நினைவு தடுமாறுதலும் அதனால் சொல் தடுமாறுதலும் ஏற்படலாம்.

தலையின் பின்புறமுள்ளது சிறு மூளைப் பகுதியாகும். இதிலும் சாம்பல் நிற அணுக்களும் வெள்ளை அணுக்களும் இருக்கின்றன. சிறு மூளையின் தலையாய வேலை உடலை நடக்கும் பொழுதும் அமரும்பொழுதும் சாய்ந்து விடாமல் பார்த்துக்கொள் வதும் கணுக்கள், தசைகள், தோல் முதலியவற்றிலிருந்து வரும் செய்திகளைப் பதிவு செய்வதும் ஆகும். சிறு மூளை தாக்குற்று ஊறு நேருமானால் நாம் நிமிர்ந்து நடப்பதும், ஒரு வேலையைத் திறம்படச் செய்வதும் இயலா.

மூளைத் தொகுதி மின்துடிப்புகளின் அலைகளை ஒரே ஒழுங் காக வெளியிடுகின்றது. மூளை வேலை செய்கையில் இவ்வலைகள் ஒரு நொடிக்கு இருபத்தைந்து மேனியும், வேலை செய்யாதிருக் கையில் நொடிக்குப் பத்து மேனியும் வெளிப்படுகின்றன. மூளைக்கு ஏதாவது நோய் ஏற்படின் இவ்வலை அளவுகள் மாற லாம். இதனைக் கொண்டு நோயின் திறத்தை அறியலாம். மூளை அலைவுகள் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. எனினும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அலைவுகளின் எண்ணிக்கை பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. ○

உலகின் உணவுப் பொருட்கள்.

மாந்தன் இவ்வுலகில் செயற்கருஞ் சீரிய செயல்களை ஆற்றித் தன்னை உய்வித்துக் கொள்வதற்காக அவனுக்களிக்கப் பெற்றுள்ளது மாந்தவுடல். இவ்வுடலியக்கத்துக்கு இன்றியமையாதது உணவு. மாந்தனால் உண்டாக்கப் பெற்ற பொறிகள், கருவிகள் சீரியமுறையில் இயங்குதற்கு அவற்றுக்கு எண்ணெய் கரி முதலிய எரி பொருட்கள் செலுத்தப் பெறுவது போலவே உடலும் நன்முறையில் இயங்கி வருதற்காக உணவாகிய எரி பொருள் அதனுக் களிக்கப் பெறுகின்றது இதனை உணராமல் வெறும் நாச்சுவைக்காகவும், எவ்வகை நல்லியக்கத்துக்கும் பயன்படாமல் உடலைப் பருத்திப் பொதிபோற் பருக்க வைத்தற்காகவுமே உணவுண்டு வருபவர் பலர். வயிற்றுத் தீயைத் தணித்தற்குவேண்டிய குறைந்த அளவு உணவுகூட இல்லாமல் தீராப் பசிப்பிணியாளராக அழுந்திக் கிடப்பவர் வேறு பலர். உலக முழுவதையும் எடுத்துக் கொண்டால் குறிப்பாக இவ் விந்தியத் துணைக்கண்டமே (ஆப்பிரிக்காவின் ஒரிரு பகுதிகளைத் தவிர) பற்றுக்குறை உணவால் மி கு தி யு ம் பழுதுற்றுக்கிடக்கின்றது. உணவின் தன்மை, பயன், தேவை, அளவு பற்றிய அறிவே இல்லாமல் வெறும் பொறிகள்போல் (பொறிகளாவது தங்கட்குரிய உணவில்லை என்றால் இயங்கமாட்டா) விரும்பியதையும் கிடைத்ததையும் தின்று வெற்று வாழ்க்கை வாழ்பவரே இங்குப் பலராவர் கற்றாரும் செல்வரும் கூட இவ் வறிவிற் பின் தங்கியே கிடக்கின்றனர். ஆதலின் உடலைச் சீரிய முறையில் ஓம்பிக் காக்க விரும்புவார்க்கு உணவுப் பொருட்களைப் பற்றிய அறிவு இன்றியமையாததாம்.

உடலுக்கு எரிபொருளாகப் பயன்பட்டு, நாம் வேலை செய்வதற்குத் தேவையான ஆற்றலை(Energy) அளிக்கும் உணவுச் சாரம், மாச் சாரம் (Carbo hydrate) என அழைக்கப் பெறுகின்றது கோதுமை, அரிசி, மக்காச் சோளம், தினை வகைகள் இரை (Rye) ஓட்சு, 'பார்லி' போன்ற கூலங்களினின்றும், கிழங்குகள், சர்க்கரை போன்றவற்றினின்றும் இதனைப் பெறுகின்றோம். உடலை வளர்த்து நன்னிலைப் படுத்தப் பயன்படும் உணவுச் சாரம் ஊட்டச் சாரமாகும் (Protein) இஃது ஊன், மீன், பயறு, கடலை, மொச்சை வகைகள், கொட்டைகள், எண்ணெய் வித்துகள் நெய்ப் பசை வாய்ந்த பழங்கள் ஆகிய வற்றினின்று பெறப்படும். உடலை நோய் அணுகாமல் காத்து நலம் செய்வதற்கு உயிர்ச் சாரங்களும் (Vitamins) மாழைச் சாரங்களும்(Minerals) பயன்படுகின்றன. இவற்றைப் பழங்கள் காய்கறிகளினின்றும் பெறுகின்றோம். பாலும் முட்டையும் பொருத்தமான அளவு சேருமானால் அதுவே ஒரு முழுமையான உணவாகும்.

உட்கொள்ளப்பெறும் உணவின் மதிப்பினை, அளத்தற்கு, வெப்ப அளவாகிய கலோரியை மேற்கொள்கின்றனர். பொருத்த மான, நிகரளவை உணவு (Balanced ' iet) என்பது இரண் டாயிரம் முதல் மூவாயிரம் 'கலோரி' அளவு உடையதாக இருத்தல் வேண்டும். உலக மக்கள் உண்ணும் தலையாய உணவுப் பொருட்கள் சிலவற்றை இப்பொழுது காண்போம்:

அரிசி: அரிசியில் இரண்டாயிரத் தைநூற்றுக்கும் மிகுதி யான வகைகள் உள. இவற்றுள் ஆயிரத்துக்கு மேற்பட்டவை இந்தியாவிலேயே விளைகின்றன.

அரிசி ஆற்றலைக் கொடுக்கும். எனினும் உடல் வளர்ச்சிச் சாரம் அதில் மிகக் குறைவே. இந்தியா, சீனம், சப்பான், பர்மா போன்ற நாடுகளின் தலையாய உணவு அரிசியே. அரிசி யுண்பார் ஊட்டச் சார உணவை மிகுதியும் சேர்த்துக் கொள்ளு தல் வேண்டும். அரிசியைத் தவிடு போகக் குற்றிவிடுதலால் அதன் சாரப் பொருட்களெல்லாம் நீங்கி விடுகின்றன அரிசியி லிருந்து சேக் (Sake சப்பானில்) அராக்கு (Arak சாவாவில்) செம்சு (Chemshu சீனாவில்) ஆகிய வெறிநீர்களும் இறக்கப் பெறுகின்றன.

கோதுமை: கூலங்களில் சிறப்பு வாய்ந்தது. இதில் 650 வகை உண்டு. மாச்சாரம், ஊட்டச்சாரம், கொழுப்பு, உயிர்ச் சாரம், மாழைச் சாரம் அனைத்தும் கோதுமை உணவில் உள. உலகில் மிகுதியாகப் பயிராவது இதுவே. இது பெரும்பாலும் மாவாக்கப் பெற்றே பயன்படுத்தப் பெறுகின்றது இதில் கடின மான வகைகள் உரொட்டி செய்யவும், இளகிய வகைகள் பண் ணிகங்கள் அப்பங்கள் (Cakes and Biscuits) செய்யவும் பயன் படுகின்றன. நெய்ப் பொருள் கலந்த கோதுமைச் 'சப்பாத்தி' களும் நல்ல உணவே. கோதுமையிலிருந்தும் சர்க்கரைப் பொருள், வெறியம் (alcohol) முதலியன இறக்கப்பெறுகின்றன.

மக்காச் சோளம்: உலகெங்கும் விளைகின்றது. சத்து நிறைந்தது. எனினும் கோதுமைக்கு அடுத்ததுதான். உமிநீக்கி முழுச்சோளமாகவும் மாவாக்கியும் உண்பர். மெக்சிகோவில் இதுவே தலையாய உணவு. வட அமெரிக்காவில் பண்ணிகங் களாகவும், தென்னமெரிக்காவில் அடைகளாகவும் உண்ணு கின்றனர். இத்தாலியரும் இதனை உண்பர். இது பசைப் பொரு ளாகவும், எண்ணெய்ப் பொருளாகவும்,வெறியமாகவும் ஆக்கிக் கொள்ளப் பெறுகின்றது.

தினை வகைகள்: புன்செய் நிலங்களிலும் வறண்ட பகுதி களிலும் விளையும். மாவாக்கிக் கஞ்சியாகவும் கூழாகவும் உண்

பர் தினை வெப்ப நாடுகளில் துணை உணவாகின்றது. மேற்காப்பிரிக்காவில் எண்ணெய்ப் பணியாரங்களாகச் செய்யப்படும் வடக்குச் சீனாவில் கோதுமையுடன் சேர்ந்து தலையாய உணவாகின்றது பீர், போம்பே (ஆப்பிரிக்காவில்) ஆகிய வெறி நீர்கள் இதினின்றும் வடிக்கப் பெறுகின்றன. உருசியாவில் தினையில் வகையைத் துழவை(Parridge)யாகச் செய்து பெரிதும் விரும்பி உண்கின்றனர்.

ஓட்சு, வாற்கோதுமை, (இ)ரை: ஓட்சு வறண்ட ஐரோப்பிய நிலங்களில் விளைகின்றது ஊட்டச் சாரம், உயிர்ச் சாரம் உடையது. சிற்றுணவாகப் பயன்படும். வாற்கோதுமை, மட்டான வெப்பப் பகுதியிலும் குளிர்ப் பகுதிகளிலும் விளையும். இங்கிலாந்து, இசுக்காத்துலாந்து, நார்வே, சுவீடன் நாடுகளில் உரொட்டி செய்யப் பயன்படும். வட ஆப்பிரிக்காவிலும் ஆசியாவின் சில பகுதிகளிலும் அடையாகவும், துழவையாகவும் துணுக்குகளாகவும் உண்ணப் பெறுகின்றது. (இ)ரை கருப்பு உரொட்டி செய்யப் பயன்படுகின்றது. ஊட்டச்சத்து வாய்ந்தது. ஐரோப்பாவில் வெப்பம் குறைந்த பகுதியில் விளைகின்றது.

உருளைக் கிழங்கு: 2000 வகை உண்டு. உலகிலெங்கும் பயிராகின்றது. எனினும் குளிர் நாடுகளிலேயே சிறக்கின்றது. சாரப் பொருள் அனைத்தும் இதில் உள மிகச் சிறந்த உணவு. வெள்ளையர் நாடுகள் பலவற்றின் தலையாய உணவு. காய்கறி போன்றும் உண்ணலாம்; மாவாக்கி உரொட்டி முதலியன செய்யவும் பயன்படுத்தலாம். வெப்ப நாடுகளில் இனிப்பான ஒரு வகை உருளைக் கிழங்கு பயிராகின்றது. சாரத்தில் இரு வகைகளும் ஒத்தனவே. கூலங்களைப் போலவே இதுவும் வெறியப் பொருள் உண்டாக்கப் பயன் படுகின்றது.

மரவள்ளிக் கிழங்கு வகைகள் (Cassava): வெப்ப மண்டில மேற்கு ஆப்பிரிக்கா, மலாயா, தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் விளையும். இனிப்பு வகைக் கிழங்கைப் பச்சையாகவோ சுட்டோ உண்ணலாம். கடுப்பு வகைக் கிழங்கினை உலர்த்தி மாவாக்கிக் கஞ்சியாகவோ, கூழாகவோ, துழவையாகவோ செய்துண்பர். இதனுடன் 'யாம்' எனும் கிழங்கு மிளகு,வெங்காயம் காய்கறிகள் சேர்த்துக் காரமானபண்டங்கள் செய்து உண்ணலாம். ஊனுடனும் பாற்பொருட்களுடனும் சேர்த்து உண்பர். கடுப்பு வகைக் கிழங்கின் பால் போன்ற சாறு மேற்கிந்தியத் திட்டுகளில் உணவுக்கு மணமும் சுவையும் ஊட்டுவதற்குப் பயன்படுகின்றது. இதன் மாவைப் புளிப்பேற்றி வெல்லப்பாகுடன் சேர்த்து மதுவாக்குகின்றனர்.

—*—

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு பேராயக் கட்சியை எதிர்ப்பதற்காகத்தான்: வேறொன்றுமில்லை.

—காமராசர்

பேராயக்கட்சிதானே இந்தியை நுழைக்கின்றது!

பெருநாட்டில் கால் பந்தாட்ட அரங்கில் குழப்பம்...600பெயருக்கு மேல் உயிரிழப்பு...! —செய்தி.

உலக ஒற்றுமையை வளர்ப்பதாகக் கூறப் பெறும் நாகரீக விளையாட்டுகளின் முடிவு இப்படித்தான் இருக்குமோ?

காவிரிப்பூம்பட்டனத்தில் **இந்திர விழா** கொண்டாடப்பட்டது.

—செய்தி.

ஓரிராண்டில் இஃது **இந்திவிழா** வாகலாம்.

அரசியல் சட்டத்தில் 19-ஆவது திருத்தம் நிறைவேறியது. —செய்தி.

ஒரேயடியாக நம் அரசியல் அமைப்பிலேயே ஒரு திருத்தம் செய்தால் என்ன.

நேருவின் சாவைக் கேட்டு நடிகர் சிவாசிகணேசன் கண்ணீர்! நடிகர் இராசேந்திரன் மயக்கம்!

—செய்தி.

நடித்த பழக்கம்!

போட்டியில்லாமல் புதிய தலைமையமைச்சர் காமராசரின் நடுநிலை முயற்சி! —செய்தி.

'ஒருவனை ஏமாற்ற அவனை நடுவனாகப் போட்டுவிடு' என்பது பழமொழி?

நேருவின் **இறுதி முறி**யில் தமக்கு இறுதிச் சமயச் சடங்குகள் கூடாவெனக் குறிப்பிருந்தும் முறைப்படி சடங்குகள் நடந்தேறின!

— செய்தி.

நேருவின் கொள்கையை **இறுதி**யாக **முறி**த்தனர் போலும்!

நேருவுக்கு நினைவுப் படிமம் அமைக்க முயற்சி! —செய்தி.

பின் மறந்து விட்டால் என்ன செய்வது?

இலால் பகதூர் சாத்திரி விரைவில் சென்னைக்குவருவார்! —செய்தி.

சென்னைமேல் இனி அவர்க்கு ஒரு கால் இருக்கும்!

வானூர்தி மூலம் நேருவின் சாம்பலை நாட்டிலுள்ள வயல் வெளிகளிலெல்லாம் தெளித்தனர்! செய்தி.

நல்ல எரு! ஆனால் போதாதே!

சென்னையில் நேருவின் சாம்பற்குடத்தின் அருகே தேவாரம் திருவாசகம் நான்மறைகள் ஓதப்பெற்றன! செய்தி.

எலும்பைப் பெண்ணுருவாக்கிய தேவாரம் என்று கூறப்பெறுவது உண்மையா என்று ஆய்வு நடத்தியிருக்கலாம்!

சென்னைத் துறைமுகத்துக்குச் சவகர் துறை என்று புதிய பெயரிட நடுவணரசு முடிவு!

ஏன் சென்னைக்கே 'நேரு மாநிலம்' என்று பெயரிடலாமே! குட்டக் குட்டக் குனிகிற நாடு தமிழ்நாடு தானே!

கற்பனை ஊற்று. **மெய்ம்மைப்பித்தன்.**

மெய்யுணர்வு.

அறிவென்னும் இரும்பை என் உள்ளக் கனப்பில் பழுக்கக் காய்ச்சி யெடுத்து நினைவென்னும் சம்மட்டியால் இவ்வுலகப் பட்டடையில் வைத்து மட்டு மட்டெடன ஓயாமல் தட்டித்தட்டி உருவாக்குகின்றேன். நான் நினைத்துக் கொண்டுள்ள உருவங்கள் பல!

அவ்வுருவங்களை என் வாழ்நாளைக்குள் செய்து முடிக்கவேண்டுமென்ற கட்டளை எனக்கு!

ஓயாத வேலை.

இடையிடையே நெருப்புக்கு வேண்டிய கரித்துகள்களைத் தேடியலைகின்றேன்!

பழுக்கக் காய்ச்சிய இரும்பின்மேல் ஓங்கி ஓங்கித் தட்டுவது என் வலது கையின் வேலை.

தட்டுகின்ற இரும்புக் கட்டியினின்று சிதறுகின்ற நெருப்புத் துண்டங்கள் போல் என் முழுமைப் பொருளினின்றும் சிதறுகின்றன பன்னூருயிரம் எண்ணத் துணுக்குகள்.

இவற்ருல் ஒரு பயனும் இல்லை!

இருப்பினும் நான் சமைக்கப்போகும் ஒவ்வோர் உருவத்தின் திண்மையையும் இவை குறைத்து விடலாம்.

சிதறிப்போகும் இத் தீத்தெறிப்புகள் என் நண்பரிடத்தும், மனைவியிடத்தும், குழந்தைகளிடத்தும், அவ்வப்பொழுது வந்து போகின்ற வழிப்போக்கர்களிடத்தும் போய் விழுகின்றன.

உருவமற்ற அவ் வெறும் நினைவுகளை அவர் எல்லாரும் பாராமுகமாய்த் தள்ளிவிடுகின்றனர்.

தெறித்துவிழுந்த அத்துகள்கள் சிலரைச் சிலவிடத்துக் காயப்படுத்துவன! சிலர்க்குக் கண்களில் பட்டு உறுத்திக் கண்ணீரைச் சிந்துவிப்பன.

சிலர் நெஞ்சங்கள் அவற்ருல் புண்ணுய்ப் போவதை நான் அறிய முடிகின்றது.

இவர் அவ்வேலையைச் செய்த என்மேல் எரிந்து விழுவதைக் கண்டு உள்ளூர நகைத்திருக்கின்றேன்.

இவ்வுருவற்ற துகள்களைப் போலவே அவர்தம் முறைப்பும், நகைப்பும் உருவற்று மொண்ணையாய்ப் போகின்றன.

அடித்து உருச்சமைக்கும் ஓரிரு படிவங்களும் சரியாக அமையாததை எண்ணி, எனக்கு இவ் வேலையைக் கற்றுத் தந்தவனிடம் சிறிது குறைப் பட்டுக் கொள்கின்றேன்.

எனக்குப் பெரும்பசியை உண்டாக்கிவிட்டு, ஒரு கவளம் சோற்றையே அவன் எனக்குத் தந்துள்ளதாக எண்ணுகின்றேன்.

ஓரிரு வேலைகளையே திரும்பத் திரும்பச் செய்வதாக எனக்குப் படு கின்றது!

வேறு வேறு அழகான படிவங்கட்குக் காத்துக் கொண்டிருப்போரின் கைகளிற்போய், நான் செய்த படிவங்கள் கிடைக்கின்றன. அவற்றைப் பெற்ற அவர் முகங்களில் சுருக்கங்கள் அலையிடுவதைப் பல முறை நான் கண்டு என்னையே கடிந்து எனக்குள்ளேயே நாணியிருக் கின்றேன்!

பூண்டற்றுப் போகும் இம் மக்கள் கூட்டங்களை, ஓட்டிக்கொண்டு போகும் காவலன், நேர்வழியில் போகாது குறுக்கும் மறுக்கும் ஓடிக் காலுங் கையும் சிராய்த்துக் கொண்டவர்களையும், கால்களில் பொத்துக் கொள்ளும் முட்களைப் பிடுங்கி எறிகின்றவர்களையும், அதட்டி ஒழுங்கு செய்யவியலாது கவலையுறுவதுபோல், கூடிவராத புதிய புதிய உருவங் களுக்காக நான் கவலையுறுவதுண்டு!

இரவும் பகலும் ஊதுலைக் கருகில் உருவங்களைப் புனைந்த பெருமை யோடு வெளியே நடமிடுகின்றேன்.

என் கால்களின் அகன்ற பரப்பில் மிதியுண்டு தலைகசுங்கிய பசும் புற்களின் தோற்றத்தைக் குனிந்து நோக்குகின்றேன்!

என் கைகளின் வீச்சுக்கு நடுநடுங்கும் பூத்த மலர் முகங்களைக் கண்டு வியப்புறுகின்றேன்!

என் கழுத்துக்கு மேலே வளர்ந்த கொய்யா மரக்கிளையில் தூங்கிக் கொண்டிருக்கும் இளம்பிஞ்சுகளைப் பறித்து இறும்பூதெய்துகின்றேன்! துள்ளித்திரியும் புள்ளி மானின் துடுக்குத்தனத்தை என்னால் சமைக்க முடியவில்லையே!

நான் அடித்துச் சமைக்கின்ற படிவங்களில் ஒன்றேனும் என் முன்னர் விரிந்து கிடக்கும் பல்கோடி சுழிவு நெளிவுகளில் உள்ள ஒளியுருவங் களைப் போன்று தோற்றமளிக்கின்றதா?

இல்லையே!

அவன் கொண்ட முழுத் திறனையும் கண்டு கண்டு வியக்கின்றேன்! அவ்வியப்பில் சலிப்பும், அவ்வன் நேர்மையல்லாத உள்ளத்தின்மேல் சினமும் கொள்கின்றேன்.

ஒவ்வொரு துணுக்கையும், துண்டத்தையும், மணலையும், மணியையும் பாராமுகமாய் விட்டுவிடாமல், மிக எளிய முயற்சியில் அரிய வேலைப் பாட்டை உள்ளடக்கிச் செய்த வேலைத்திறனை எனக்கு அவன் கற்றுக் கொடுக்காமற் போனதென்னை?

இருப்பினும் என்னோடு அவன் இணைந்து என் போலிச் சினத்தைத் தன் ஊமைக் காட்சியால் அகற்றுகின்றான்.

முக்கி முண்டி வெளிப்படுத்துகின்ற என் படிவங்களின ஒளிக் குறைவிற்கும் உருவத் தெளிவின்மைக்கும் அவன் அமைவு கூறுகின்றான்!

அவன் என் கையுள் அத்தனைப் பொருள்களையும் தந்துவிட விரும்பவில்லை போலும்!

கொக்கரித்துத் திரிகின்ற கோழியின் குரல்வளைபோல் இயங்கி வளைகின்ற சுருட் கம்பிக்கு நான் எங்குப் போவேன்?

'சிவ்'வென எம்பிக் காற்றைக் கிழித்துப் போகின்ற சிட்டுக் குருவியின் இறக்கைகளை நான் எனக்குக் கிடைத்த சம்மட்டியை வைத்துக் கொண்டு செய்ய இயலுமா?

இவ்வளவும் வீண் வீண்என்று பறைமுழக்குகின்றன என் எண்ணங்கள்!

சம்மட்டியடி பட்டுப் புடைத்து வீங்கிய என் விரல்கட்கு மாற்று விரல்களைத் தேடி மாட்டிக் கொள்ள முடியுமா?

எனக்குக் கிடைத்த ஊதுலைச் சாலை!

பொத்தல் துருத்தி!

ஈரங்கசிந்து புகைந்து அலைக்கின்ற கரித்துண்டுகள்!

என் வலதுகைக்கு வணங்கிவராத பருத்த சம்மட்டி!

இவற்றை வைத்துக்கொண்டு என் உள்ளத்தினையும், அது வெளிப்படுத்துகின்ற குமிழிகளையும் உங்கட்குக் காட்ட முடியுமா?

இப் பருப்பொருளின் செய்கைகள் அத்தனையுமே எனக்கு விளங்காத ஒரு பெரும் புதிராக இருக்கையில் நுண்மைப் பொருள்களை எங்ஙனம் உணர்ந்து உருவாக்க முடியும்!

என்னிடத்துள்ள இரும்பால் ஆணியும், வளையமும், சுருள்களையுமே சரிவரச் செய்ய முடியாத பொழுது, நீரைப்பற்றி நினைக்க முடியுமா?

கனலைக் காட்டி விளக்க முடியுமா?

காற்றின் மெல்லிய அசைவுகளை நிலைநாட்டுதல் ஒல்லுமா?

முடியாது! முடியவே முடியாது!

என் வாழ்க்கை முடியும் வரை அவற்றில் நான் வெற்றியடையப் போவதில்லை! அதனால் நான் என்னால் இயன்றவற்றைக் கூடச் செய்யாமல் அமைதியாக உட்காரவா?

அவ்வாருயின் எனக்கு அவன் இவற்றைக் கற்றுக் கொடுத்த நோக்கம்......?

என்னையே அவன் உருக்கொடுத்துப் பிறப்பித்த பெரும் பயன்......?
தன் அரிய நேரங்களைப் பயன்படுத்தி உருவாக்கியிருக்கும் அவன் ஆற்றல்களைப் பாராட்டிக் கொண்டிருப்பதில் தவறென்ன?
நாம் பாராட்டாவிட்டால், நாம் செய்யும் வேறு வேலைகள் தாம் எவை?
அவை எவற்றின் பொருட்டு?
எண்ண மின்னலின் ஒரு முனை அவன் நெஞ்சிலும் மறு முனை என்னுடைய புல்லிய நெஞ்சிலும் இருப்பதாக நான் உணர்கின்றேன்.
அவன் முனை பருத்தும் என் உள்ளத்தில் தொட்டுக் கொண்டுள்ள முனை சிறுத்தும் இருப்பது எனக்கு நன்கு புலப்படுகின்றது!
அவனின்று பிரிந்து போகும் பல்லாயிர நெளி மின்னல்களின் மெல்லிய முனைகள் என்போன்ற புல்லியர் உள்ளங்களைத் தொட்டுக் கொண்டிருப்பதாக எனக்குப் படுகின்றது!
வெறும் பருமைப் பொருள்களைச் செய்துசெய்து உவக்கும் என் உள்ளம், நுண்மைப் பொருள்கட்குத் தாவிப் பறக்கின்றதை நான் அறிய முடிகின்றது?
இவற்றின் கூட்டு மதிப்பு என்ன?
ஒளி புலப்படாத கருமையான என் பட்டடையில் அமர்ந்து என் வாழ்வு முழுதும் எதையும் முழுமையாக உருவாக்க முடியாத, என்னைப் பற்றி அவன் எள்ளி நகைப்பான் என்று எதிர்பார்க்கவில்லை!
அவன் எனக்குக் கற்றுத்தந்தவற்றை, ஒழுங்காக நினைவில் வைத்துள்ளேனு என்று எண்ணிப் பார்த்து மகிழ்கின்றேன்!
சிலவற்றின் மூலை முடுக்குகளைக் 'கால'மெனும் செல்லரித்து மூளியாக்கியிருக்கின்றது!
இருப்பதையேனும் மறவாதிருக்க அன்றுடம் சம்மட்டியால் அடித்து அடித்துக் காலத்தைக் கடத்துகின்றேன்!
இல்லையெனில் என் உடலியக்கத்துக்கு என்ன மதிப்பு?
ஏற்றப்பெற்ற ஒளியின் புயன்?
கற்றுக் கொடுக்கப்பெற்ற வேலைத் திறமையினை அடைத்துப் பூட்ட நான் விரும்பவில்லை!
காற்றுவரும் பலகணிகளை அடைத்துப் போட்டுவிட்டு நான் யாருக்காக இயங்க வேண்டும்? ○

எழுதுவார்க்கு !

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

திறப்பு விழா.

புதுவை—சுப்பிரமணியன்.

ஊர்காணும் ஆவல் உய்க்க ஒருபெருஞ் சாலை புக்கேன்!
கார்காணும் ஆவ லோடு கலையழ கோடு வானை
நேர்காணு மாறு யர்ந்த நெடுநிலை மனைகள் கண்டேன்!
தேர்காணுந் தெருவாம் அஃது தெரிவுறச் செய்தார் சில்லோர்.

அப்பெருஞ் சாலை நாப்பண் அகனெடு மனையொன் றின்முன்
முப்பெரு வளைவு கோலி முகையவிழ் மலர்க ளாலே
ஒப்பனை செய்து பல்லோர் ஒருங்குடன் குழுமி நின்றார்
ஒப்பருந் தலைவர் யாரோ ஒருவரின் வருகை நோக்கி!

தூநிறக் கைந்நூல் ஆடைத் தொகையினர் ஓர்பால்! தும்பைப்
பூநிறப் புதிய ஆடை போர்த்தனர் ஓர்பால்! மின்னும்
நானிறப் பட்டு டுத்த நங்கையர் ஓர்பால்! காற்றில்
மேனிற மாற்றுந் தூசு மெய்படக் காத்து நின்றார்.

"அறிவியற் புலவர் தாமோ? அறம்உணர் சான்றார் தாமோ?
பொறியியல் வல்லார் கொல்லோ! புகழ்கலைச் செம்மல் தாமோ?
நிறையொழுக் கத்தின் வேந்தோ? நிகழ்த்துக தம்பீ" என்றே
சிறுதொலை வொதுங்கி நின்ற சீரியோன் தன்னைக் கேட்டேன்.

"வருமவர் ஆற்று தற்காய் வகுத்துள பணியும் யாதோ!
பெருமழை என்னப் பேசிப் பிழிவரோ செந்த மிழ்த்தேன்?
அருமறை குறள்வ குத்த அறநெறி விளக்கு வாரோ!
திருமலி நாடு வாழத் திட்டமோ" என்றேன்; சொல்வான்:—

"இழுக்குடை நெறியின் வந்த இழிபணச் சேற்றில் வாழும்
புழுக்களை ஒத்தார் சில்லோர் பொழுதுபோக் கருமை காணக்
கொழுக்கவே தின்று விட்டுக் கூடியே கவறாட் டத்தின்
அழுக்கிலே புரளு தற்காய் அமைத்தனர் கழகம் ஒன்று.

இத்தகு கழகம் தன்னை இசைவுறத் திறப்ப தற்காய்
மெத்தவுந் தேடிப் பார்த்து மேன்மைகொள் அமைச்சர் தம்மை
நத்தியே வரவ ழைத்தார். நாடுகாப் போரும் ஒப்பி
ஒத்துழைப் பளித்தார்! நீரே ஒல்லையில் பாரும் நேரில்!

சுமைசுமை யாக வேலை சூழ்ந்துமே காத்தி ருக்க,
குமைச்சலுங் குறையுங் கோடி கோடியாய் உள்ளி ருக்க,
அமைச்சரைக் கண்டால் நாளை அதுஇது கிடைக்கு மென்ற
நமைச்சலில் இங்கே வந்து நகைப்பவர் பாரும்!" என்றான்.

சிரிப்புத்தான் வருகு தப்பா! சீருயர் ஒழுக்கம் மானம்
எரிப்புத்தான் செய்கின் றாரே! இவர்க்கொரு சட்டம் இன்றோ!
அரிப்புத்தான் கண்டால் தீயில் அழிவதா?" என்று சொல்லித்
திருப்பித்தான் பாரா மல்யான் திரும்பினன் வீடு நோக்கி! *

தொடர்-1. தொடர் நாடகம்.

போர் மறவனும் காதலும்.

ஆங்கிலத்தில்: சியார்சு பெர்னார்டுசா.
தமிழில்: 'வழுதி'

(இந் நாடகத்தின் பகுதிகளை எங்கும் எவரும் எவ்வகையிலும் ஆசிரியர் இசைவின்றி எடுத்தாளக்கூடாது.)

முன்னுரை:

(பெர்னார்டுசா அவர்கள் "இன்பூட்டும் நான்கு நாடகங்கள் என்ற தம் நூலுக்கு எழுதிய முன்னுரையில் தேவையானவும், இங்குத்தரப்பெறும் நாடகத்துக்குத் தொடர்புடையனவுமான சில பகுதிகளே இங்கு இடம் பெறுகின்றன.)

அப்பழுக்கற்ற நன்மை என்றும், கலப்பில்லாத தீமை என்றும் வாழ்க்கையை இரண்டாகப் பிரித்து நடுச்சுவர் வைத்துக் கொண்டு இரண்டுக்கு மிடையே நிகழும் போராட்டங்களை அடிப்படையாக்கி, நல்லவனென்றொரு கதைத் தலைவனையும், கொடியவன் என்றோர் எதிரியையும் மோதவிட்டுப் பார்க்கும் நாடகங்கள் சீரியவை அல்ல. [1] இவற்றுள் நாடகாசிரியன் முற்றிலும் ஒரு சார்புடைய கருத்துகளையே முடிந்த முடிபாக மேற்கொண்டு, அவற்றுக்கு மாறுபடுபவற்றையெல்லாம் நெறி விலக்காகவும், இயல்புக்கு மீறியனவாகவும் காட்டுகின்றான். ஒன்று, மிகவும் பணிவடக்கத்தோடு போற்றித் தொழுவது; இன்றேல் சினத்துடன் தூற்றி வெறுத்தொதுக்குவது! இத்தகைய மலிந்த சரக்குகளில் நான் வாணிகம் செய்கிலேன் அல்லன். விளையாட்டான வெற்றுணர்ச்சி நாடகத்திலிருந்து உண்மையான நாடகச் சாரத்தினை வடித்தெடுக்க வேண்டுமானால், நாடகக்கலை தன்னை உயர்த்திக்கொள்ளும் முயற்சியில், எவ்வாறு தனக்குத் தானே எதிராகக் கிளம்பி, சரிந்து கொண்டுவரும் பயனற்ற, போலியான நாடக வழக்காறுகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதை முதலில் காட்டியே ஆக வேண்டும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே சில நாடகங்களைத் தொடங்கினேன். ஆனால் இத்தகைய நாடகங்களை மேடைக்குக் கொணர அரும்பாடுபட வேண்டியதாயிருக்கின்றது. நாடக இயக்குநர்கட்கு இவை பிடிப்பதில்லை. பொதுமக்கள் விருப்பம், சுவை என்றே அவர்கள் தேடி அலைகின்றனர். [2] எனவே, இப்சனைப் போன்ற ஓரறிஞரின் சிறந்த

1, 2. பெரும்பாலும் இன்று தமிழகத்தில் நாடக நிலை இப்படித்தான் இருக்கின்றது.

கருத்து நாடகங்கள் அவர்களைத் திகைக்க வைக்கின்றன. கருத்தும் கலைநுணுக்கமும் நிறைந்த நாடகங்கள் ஒதுக்கப்பட்டு, கற்றுக்குட்டிகள் எழுதும் பிழைமலிந்த நாடகங்கள் நடிக்கப் பெறுவதும் புதிய செய்தி அன்று. வாணிக மனப்பான்மையால் அமையும் இத்தகைய வரம்புகள் குமுகாய நலனுக்குத் தடையாகவிருக்கின்றன இன்று நாடக அரங்கு வளர்ந்து குமுகாயத்தில் முகாமையானதோர் இடத்தைப் பெற்று வருகின்றது ஆதலின், சீரற்ற பள்ளிகளும் சீரற்ற சமய நிலையங்களும் போன்றே சீரற்ற நாடக அரங்குகளும் கேடு விளைவிப்பது உறுதி. ஏனெனில் வளர்ந்து வரும் புதிய நாகரிகம், நாடக அரங்கினையே பள்ளி என்றும், கோவில் என்றும் கருதும் ஒரு புதிய கூட்டத்தைப் பெருக்கிக்கொண்டு வருகின்றது. பொது வாழ்க்கையும் தனி வாழ்க்கையும் நாளுக்குநாள் நாடகத்தன்மை அடைந்து வருகின்றன. தற்கால வல்லாண்மையாளர்களும், தலைமை அமைச்சர்களும் மிகவும் சிறந்த நடிகர்களேயல்லால் வேறல்லர்! செய்தித் தாள்களும் நாடக முறையிலேயே வெளியிடப் பெற்று வருகின்றன. வழக்கு மன்றங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால், நாடகம் எந்த அளவுக்குத் தனி மாந்தர் நடத்தைகளையும் செயல்களையும் உருவாக்கி வருகின்றது என்பது தெரியும். வேறொன்றிலும் அன்று, வாழ்க்கையை வெறும் ஆகுலம்(Romantic) செய்வதில்தான்; அதாவது போலியாகவும் புன்மையாகவும் மேலோட்டமாகவும் செய்வதில்!

என்னைப் பொறுத்தவரையில் இவ் வாணிக வரம்புகளை அறுத்தெறிந்து, நாடகக் கலையின் பேராற்றலை மக்கட்கு உணர்த்தி அரங்கின் மதிப்பினையும் நாடகத்தாரின் பொருள் நிலையினையும் மிக உயர்த்தல் வேண்டுமென்பது தாம் என் எண்ணம்.

சமையலறையில் கல்வி...!

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருக்கையில் ஒரு முசுலீம் சமையற்காரர் ஒரு நாள் காந்தியடிகளிடம் வந்து, "எனக்கு மட்டும் ஆங்கிலம் தெரிந்திருந்தால் நான் எவ்வளவோ பொருள் ஈட்டமுடியும். இப்போது நான் பெறும் ஊதியம் வயிற்றுப் பாட்டுக்கே போதவில்லை" என்றார். "என்னிடத்தில் வாருங்களேன் நான் ஆங்கிலம் கற்றுத் தருகிறேன்" என்றார் அடிகள். "தாங்கள் கூறியது எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஆனால் சினந்து கொள்ள வேண்டா. நான் உங்களிடம் நாள்தோறும் வந்து ஆங்கிலம் கற்றுக்கொண்டால் என் தொழிலை எப்படிச் செய்வது?" என்றார் சமையற்காரர். 'அது சரி தான்; ஆனால் அதற்காக வருந்தவேண்டாம் உங்களால் வரமுடியாவிட்டால் நான் உங்கள் இருப்பிடத்துக்கு வருகிறேன்' என்றார் அடிகள். அன்று முதல் நாள்தோறும் நான்கு கல் நடந்து சென்று அச் சமையற்காரருக்கு ஆங்கிலம் கற்பித்தார் அடிகள்!

இதிற் பெரிய இடர்ப்பாடு என்னவென்றால் பொதுமக்கள் ஆழ்ந்த நாடகங்களை விரும்பாமையேயாகும். ஆயினும் அவர்கள் நிலைக்கு நான் இழிந்து செல்லேன். அத்தகையோர் என் நாடகங்கட்கு வர வேண்டுவதில்லை; அவ்வளவுதான்.

பொதுமக்கட்கும் அவர்தம் பேராட்களான ஆய்வாளர்க்கும் முன்னிலையில் நான் வேண்டுமென்றே இத்தகைய செருக்கான மனப்பாங்குடன் நடந்து கொள்ளவேண்டும் என்று எனக்கு விருப்பமா, என்ன? ஏதோ ஆய்வாளர்கள் அவ்வாறு கருதுகின்றனர்;என் நாடகத்திறன் சுவையூட்டுவதுதானும்;ஆயினும், உயர்ந்த உணர்வுகளும் ஆழ்ந்த நோக்கமும் கொண்டதாக இல்லையாம்! ஆய்வாளர்கள் என்னைப்பற்றிக் கூறும் குறைபாடு இது. பொதுவாக என் நாடகங்கள் திறம்பட அமைவனவேனும், உள்ளாழ்ந்து பார்க்கையில் அவற்றில் ஒழுங்குபெற்ற கருத்துக் கோப்போ, நல்லுணர்வோ இல்லையாம். மாந்தத் தன்மையற்ற, இயல்பு கடந்த காட்டுத்தனங் கொண்டவன் என்றெல்லாம் என்னைப் பலபடத் திட்டுகின்றனர். வாழ்க்கையின் அழுக்கான பகுதிகளையே நாடுபவன் என்றும், முன்னுக்குப்பின் முரணுடையவன், எள்ளலாளன், கோணற் கோமாளி என்றும் கூறுகின்றனர். மொத்தமாகப் பார்த்தால், நல்லதைத் தீயதென்றும், தீயதை நல்லதென்றும், புல்லியதை ஆழ்ந்ததென்றும், ஆழ்ந்ததைப் புல்லியதென்றும், நகைக்குரியதை மதிப்புக்குரியதென்றும், மதிப்புக்குரியதை நகைக்குரியதென்றும் கருதும் தலைகீழ்க் கொள்கையாளனாக இருக்கின்றேனும் நான்! இதற்கு நான் கூறும் விடை இதுதான்: இவ்வாறு கூறும் பெருமகன் எவனாவது, இத்தகைய தலைகீழ்க் கொள்கையால் குறைந்தது ஒரே ஒரு நல்ல நகைச்சுவை இசை நாடகத்தினையாவது உருவாக்க முடியும் என்று நினைப்பானாயின், செய்து பார்க்கட்டும்! என் நாடகங்கள் எனக்களித்துள்ள வெற்றிபோல் அவனுக்குக் கிடைக்குமா என்று பார்க்கலாம்!

நான் விரும்பினால் இவர்கட்கு இவற்றை எல்லாம் எளிதில் விளக்கிச் செல்லமுடியும். ஆயினும், என் நாடகங்களைப் பிறழவுணரும் மக்கள், என் விளக்கத்தினையும் பத்து மடங்கு பிறழவுணர்ந்து கொள்வதைத் தவிர வேறென்ன நடக்கும்? ஒரு சிலவற்றை இங்குக் கூறவேண்டுமென்றால் இந் நாடகங்களிற் காட்டப்பெறும் இயற்கையான ஒழுகியலுக்கும், ஆய்வாளர்களைக் கவரும் போலி ஆகுல வாழ்வின் ஒழுகியலுக்கும் இடையிலுள்ள அடிப்படை முரண்பாடுகளை ஒருவாறு கோடி காட்டிச் செல்லலாம். ஓரெடுத்துக்காட்டு கூறுவேன்: போர் மறவனும் காதலும் என்ற நாடகத்தில் வரும் அந்த (ஆய்வாளரின் கடிதலுக்காகிய) சுவிசுப் போர் மறவன் வழக்கமாக நாடக மேடைகளிற் காட்டப்பெறும் போர்மறவன் அல்லன் என்பதை நான்

அறிவேன். அவனுக்குப் பசியுண்டு; உறக்கமுண்டு; சோர்வுண்டு. மூன்றுநாட் போருக்குள் அவன் உரம் தளர்ந்து போகின்றது. தப்பி ஓடுதலும் மாட்டிக் கொள்வதுமாகிய அச்ச மூட்டும் நிகழ்ச்சிகட்கெல்லாம் அவன் உள்ளாகின்றான். தன் வேட்டெஃகத்தில் குண்டுகள் நிரப்பிக் கொள்வதை விடப் பையில் தின்பண்டங்களை வைத்துக்கொள்வது போர்க்களத்தில் தலையாயது என அவன் பட்டறிவால் தெரிந்து கொண்டிருக் கின்றான். இவையெல்லாம் நம்பமுடியாதவை, மூட்டாள்தன மானவை இயற்கைக்கு மாறானவை. வெறுப்போடு செய்யப்பட்ட பகடி என்றெல்லாம் ஆய்வாளர்கள் கூறியபொழுது, அவர்கட்கு உண்மையை உணர்த்த நான் சொல்லாடிக் கொண்டிருக்கத் தேவை-நேரமில்லை. தற்பொழுதையப் படைத் தலைவரில் தொடங்கி ஆறு படை மறவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி அவர்கள் மூளையில் உறைக்க வைத்தேன். இத்தகைய போலிக் களி வாழ்வுக் கொவ்வாத (ஆனால் நாடகச் சுவை நிரம்பிய) இவ்வுண்மைகளை எடுத்துக் கூறும்பொழுது, ஆண்மை, நாட்டுப்பற்று, நம்பிக்கை, நல்லார்வம், அறவுணர்வு இவற்றையெல்லாம் நான் மறுப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டு விடுகின்றனர் இதை நான் தெரிந்துகொண்டபொழுது தான், அவர்கட்கும் எனக்கும் உள்ள போராட்டம் வெறும் உண்மை உணர்வதற்கான போராட்டம் அன்று என்பது தெரிய வந்தது. எங்கட்கிடையே உள்ள போராட்டமெல்லாம், இவர்கள் புனைந்து போற்றும் இக் குறிக்கோள்களை நான் தாக்குவதனால் இவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழும் அரசியல் நடை முறைச் செயல்கள் மதிப்பிழந்து நாட்டு நலன் கெட்டு விடுமோ என்பதுதான். அவ்வாறு நாட்டு நலன் கெடுத்தல் வேண்டும் என்பது என் விருப்பமன்று. ஆயினும் என் செய்வது. அரசிய லிலும் சமயத்திலும் இவர்களால் போற்றுதற்குரியவாகக் கொள் ளப்பெறும் உயர்ச்சி நிலைகள் எல்லாம் உண்மையில் பகட்டுப் பெயர் தாங்கியுள்ள போலிப்புனைவுகளாக விருக்கின்றனவே! ஒழுக்கத்திலும் சமயத்திலும் போலவே அரசியலிலும் போலிப் புனைவுகளை நான் வெறுக்கின்றேன். பொய்யான ஒழுகலாறும், பொய்யான நன்னடத்தைகளும் எனக்குநிறைவளிப்பன அல்ல. இவை பகற்கொள்ளை; பட்டினி, பிணி, குற்றம், குடிவெறி, போர் கொடுமை, பொருள் நடை, இன்னும் இவைபோன்ற நாகரிகக் கேடுகட்கெல்லாம் பொய்யான மதிப்பினை வழங்கி, அவற்றைப் பெருமைக் குரியனவாக்குகின்றன; செய்தித்தாட்களோ இவற் றுக்கு முன்னேற்றம் என்றும், அறிவியல் என்றும், ஒழுக்கம் சமயம் என்றும், நாட்டுப்பற்று, பேரரசு மேம்பாடு, நாட்டின் பெருமை என்றும் பெயர் கொடுத்து எழுதுகின்றன. நாடக மேடையிலும் இப் பொய்மைகளைக் காணும் மக்கள் அவற்றை மூட்டாள்தனமாக நம்பித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள் கின்றனர். இந்நிலையை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். இப்

போலி உயர்ச்சி நிலை வாணர்கள் உலகைச் சுமமாவிட்டாற் போதும். உலகின் நலங்கள் அனைத்தும் தாமே வெளிப்பட்டியங்கும். உள்ளதை உள்ளபடி அவர்கள் மதிக்கக் கற்றுக் கொண்டாற்போதும்—தங்களைத் தாங்களே மதித்தலும்,—ஏன், என்னை மதித்தலுங்கூட இதில் அடங்கும்—நாம் எவ்வளவோ விரைந்தும் சிறந்தும் முன்னேறலாம். இவர்கள் கூறும் இப் போலி ஒழுகலாறுகள் ஒழிந்துவிட்டால் ஒழுக்கமின்மையும், குழப்ப நிலையும் வந்துவிடப் போவதில்லை. ஒருமுகமாகவும், முயற்சி வலிவோடும், சொல்வன்மையோடும் எக்காள முழக்கத்தோடும் கூறப்படும் பொய்களின் வலிமையால் தான் இவ்வுலகம் நிலைத்திருக்கிறது என்று கருதிக்கிடக்கும் மக்கட்கு மகிழ்வூட்ட வேண்டுமே என்பதற்காக நான் அத்தகைய குழப்ப நிலையைக் கற்பித்துக்கொண்டு, நாடகத்தில் காட்டப்பெறும் பொய்மையை விரும்பவில்லை.

உண்மையாகவே அறிவுக்குப் பொருத்தமான முறையான இயற்கை வரலாற்றினை விட்டுவிட்டு, நிறைவேறாத வேட்கை யுணர்வால் தூண்டப்பெற்று நம் கற்பனையில் தோன்றும் புனைவுக் குறிக்கோள்களைப் பெரிதுபடுத்துகின்றோம். இக் குறிக்கோள்கள் மீதில்தான் நம் குமுகாய அமைப்புத் தூண்கள் நிறுவப் பெறுகின்றன. இத் தவறான முயற்சிகளின் விளைவுகள் ஒரோவழி ஆழ்ந்த கேட்டினவாகவும், ஒரோவழி நகைக்குரியனவாகவும் உள்ளன என் கருத்துப்படி வாழ்க்கையின் துன்பியலும் இன்பியலும் இவையே! நான் கூற வந்தது பற்றிய இச் சிறு குறிப்போடு விலகி நின்று நாடகத்தினைக் காண உங்களை அழைக்கின்றேன். (தொடரும்.)

தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

போய் விடுங்கள்.

வெண்ணிலவும் வானத்தில் வரவில்லை; வீட்டின்
வெளிப்புறத்து மின்விளக்கும் ஒளிசிந்தக் காணோம்;
கண்ணுக்கெப் பொருளினையும் காட்டாமல் நிற்கும்
கரிருளும் பனித்திரையும் விண்மீனின் ஒளியை
உண்ணுகின்ற நேரத்தில் கள்வன்போல் வந்தே
உதிராத மலரொன்றால் கன்னத்தில் தட்டிப்
பெண்ணென்றன் இளமைநலம் வேட்கின்றீர்; வேண்டா;
பித்தாகி நில்லாதீர்; போய்விடுங்கள் அத்தான்!

உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் என்பெற்றோர் விழித்தால்
உயர்வான நம்காதல் இழிபொருளைப் போலே
புறக்கணிக்கப் படும்அத்தான்; நிலையான நம்மின்
புகழ்சிதைந்து போய்விடும்;பின் பொல்லாங்கும் நேரும்;
அறக்கொள்கை வழுவாது வாழ்வதுவே என்றும்
அழியாத இன்பத்திற் கடிப்படையாம்; பாரில்
சிறக்கத்தான் வேண்டாமோ நம்காதல்? உள்ளச்
சிறுமைக்குப் பணியாதீர்; போய்விடுங்கள் அத்தான்.

கமழ்கின்ற திருமணத்து மேடையினில், அன்புக்
கருவூலம் போல்விளங்கும் பெற்றோர்நம் உற்றார்,
தமிழ்கற்ற பெரும்புலவர், நண்பரெல் லாரும்
தண்மைமிகு மனதோடு வாழ்த்தருளி, நல்ல
அமிழ்தான தீந்தமிழில் அறிவுரைகள் சொல்லி
அகங்குளிரச் செய்ததன்பின் நாமின்பந் தன்னில்
அமிழ்ந்திடும்பொன் னாள்நெருங்கி வருவதற்குள் இந்த
ஆவல்தான் நஞ்சாகும்; போய்விடுங்கள் அத்தான்.

—முதலியார்பேட்டை—நா பெரியசாமி.

தாய்மொழிப் பற்று...!

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் பணி புரிந்து இந்தியாவுக்குத் திரும்பினார். பம்பாய்த் துறை முகத்தில் அவரைச் சென்றுகண்ட பார்சிச் செய்தியாளர் ஒருவர் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார். ஆங்கிலத்திற் பேசுவதே இந்தியர்களிடை நாகரிகமாகக் கருதப்பட்ட காலம் அது.

காந்தியார் தொடங்கினார். 'நண்பரே நீரும் ஓர் இந்தியர் நானும் ஓர் இந்தியன். உமது தாய்மொழி குசராத்தி. என் மொழியும் அஃதே. அப்படியிருக்க ஆங்கிலத்தில் வினவுவது ஏன்? நெடுநாள் நான் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்து வந்திருப்பதால் தாய்மொழியை மறந்து விட்டேன் என்று நினைத்தீரா? அன்றி நான் ஒரு வழக்கறிஞனாக இருப்பதால் ஆங்கிலத்தில் பேசுவதுதான் மதிப்பு என்று நினைத்தீரா?''....

செய்தியாளர் வாயடைத்துப் போனார். சுற்றியுள்ளவரும் திகைப்புற்றனர்....அடிகளின் துணிவு எல்லாராலும் மதிக்கப் பெற்றது.

தமிழ் மரபும் பிற மரபும்

புலவர். தி. நா. அறிவுஒளி.

பண்டைக் காலத்துப் பல மொழிப் பாவியங்களில், கதைகளில் வரும் பெரும்பான்மைக் கதைத் தலைவன் தலைவியர்கள் நல்லவராய்-அழகராய்-மறவராய்த்-துன்பங்களைப் பொறுத்து ஏற்று வெல்பவராய்-அறவோராய்-நேரியராய் உருவாக்கப்பட்டிருப்பதை அறிவோம். உலகிலுள்ள உயர்ந்தோர் தம் கதை-பாவியங்களால் 'உயர் பண்புடையோரைப்'போற்றி உருவாக்க விழைந்துள்ளனர் என்பதையே இவ்வுண்மை நிலை நாட்டுகிறது. உலக அறிஞர்கள், எளிய மாந்தர் உயர் பண்புடையோராய் ஆவதற்காகப் படைக்கப்பட்ட முன்னமைப்பு(Model)போன்றே பாவியத் தலைவர்களை ஆக்கியமைத்துள்ளனர்.

உண்மை நடைமுறை வாழ்வில் மிக நல்லோரிடமும், மறவரிடமும் குறையும், அச்சமும், பிற்போக்கும் ஓரளவேனும் கலந்திருப்பதை அறியலாம். நடைமுறையில் காலப்போக்கில் நல்லோர் தீயோராவதும், தீயோர் நல்லோராவதும் காண்கிறோம். இந்த முறையை உளவியலாய்வு தெள்ளத் தெளிவாகத் தற்காலத்தில் நிலைநாட்டிவிட்டது. தற்காலக் கதை-புதினம் பாவியங்களில் தற்கால உளவியல் ஆய்வு முறைகளோடு கூடிய தலைவன்-தலைவியரே ஆக்கப்படுவதையும் அறிவோம். இந்த முறையில் கழக இலக்கியப் பாடல்களில் வரும் தலைவன்-தலைவியர் இயற்கைக்கேற்ற முறையில் கழகப் புலவர்களால் உருவாக்கிப் படைக்கப்பட்டிருப்பதை எண்ண வேண்டும் தமிழிலக்கிய மரபு-தமிழிலக்கண மரபு உளவியல் உண்மைகளுக்கு இசைந்தமைந்தவை என்ற உண்மையைக் கழக இலக்கியங்களும் தொல்காப்பியமும் தெள்ளத் தெளிவாக நிலை நாட்டுகின்றன

அறிவென்பது அடி வான விளிம்பு போன்று கண்ணுக்கெட்டும் தொலைவில் இருப்பது போலத் தான் தோற்றமளிக்கும். அதை எட்டிப்பிடிக்கலாம் என்ற ஆவலில் முன்னேற முன்னேற அதன் பரப்பு-தொலைவு-விரிந்து விரிந்து விலகிச் செல்லக்காணலாம். அறிதோறும் அறியாமையே கண்டு வியப்போம். அறிவின் எல்லையை அடைந்துவிட்டோம் என்ற ஆறுதலோ-நிறைவோ-அடைய முடியாது. நமக்கு முன்னர் 'அறிவு அடிவானை' நோக்கி நடப்பவர்களை நாம் பின்புறத்திலிருந்து பார்க்கும்பொழுது, நம் முன்னோர்கள் அறிவின் எல்லையை எட்டிவிட்டார்கள் என எண்ணும்படி தோற்றமளிப்பார்கள். ஆனால் உண்மையோ?...வேறு! நமக்குப் பின்னேயிருந்து நம்மைப் பார்ப்போர் நாம் அறிவின் எல்லையிலிருப்பதாக எண்ணி மயங்குவர்.

இவ்வுண்மையை நாம் எக்காலத்தும் மறக்கக்கூடாது. பிற மொழி இலக்கியங்கள் தமிழில் இறக்குமதியான பொழுது அப் பணியைச் செய்தோர் தமிழ்ப் பண்பை, தமிழ் மரபை ஓரளவு தழுவியே மொழி பெயர்த்தனர் என்பது உண்மையே. ஆனாலும் பிறமொழிக் கருவும், கருத்தும் அப்படியேதான் மாறாமல் இருக்கக் காண்கிறோம். அவை தமிழ் உருவடைதல் அரிது. அரிது மட்டுமன்று;முற்றும் இயலாததே! அந்நிலையில் 'மொழிபெயர்த்த புலவர் அறிவு' 'குறைப் படைப்பையே' உருவாக்குகிறது என்பதை நாம் மறைப்பதற்கில்லை. அதிலும் மொழி பெயர்ப்பாளர் 'குருட்டு நம்பிக்கையும் மடமையும்' உடையவராக இருந்தால், மொழி பெயர்ப்பு நூல் மொழியாக்கத்துக்குப் பயன்படுவது பெரிதும் குறையும். இதில் ஐயத்திற்கிடமில்லை!

தமிழில் மொழி பெயர்ப்புப் பாவியங்களும், தமிழ்ப் பண்பு, தமிழ் நெறிக்கு முரண்பட்ட கொள்கைகளைக் கொண்டமைந்த தமிழ்ப் பாவியங்களும் இலக்கிய மேன்மைத் தகுதியினின்றும் தாழ்ந்து விடுவதற்கு இதுவே முதற்காரணமாம்.

ஒரு மேலான இன்பத்தையோ, அடைவையோ, நிலையையோ, தகுதியையோ, சுவையையோ ஒருவன் துய்த்தறிந்து விட்டபின், அதனினும் தாழ்ந்ததையோ, குறைந்ததையோ உள்ளம் நாடாது. மேன்மைச் சுவை துய்த்தோர், எளியவற்றால் ஓரளவு கூட ஆறுதல் பெறமாட்டார்கள். குறை கூறியே அமைவர் இவ்வுண்மைக் கேற்பவே கழக தமிழின் உண்மைச் சுவை கண்டார்-பயன் கண்டார், பிற, மொழி பெயர்ப்பு நூல்களிடனிடம் நெஞ்சம் பறிகொடுப்பது அரிதே இனி வருங்காலத்தில் கழக இலக்கியங்களும், அவ்விலக்கிய மரபும், தமிழ்ப் பண்புமே பெருஞ் செல்வாக்கும் மதிப்பும் தலையாய முதன்மையும் பெறும். தமிழகத்தில் மட்டுமின்றி, உலகெங்கும் அவ்வுண்மைத் தமிழ் நலம் சிறப்பும் மதிப்பும் பெறுவது உறுதியாம். இடைக்காலப் பிறமொழி ஆக்கங்கள் இடையிலேயே இடை முறிந்துபடும் என்பதும் திண்ணமாகும்.

இயற்கைக்கு முரணான மிகைக் கற்பனைகளை 'உண்மை' என்று பகுத்தறிவு வளரும் அறிவியல் வளமிக்க இக் காலத்தில் கூறி ஏமாற்ற முற்படும் கூட்டம் எத்துணை மடமைப் பித்தும் பேதைமையும் வாய்ந்து விளங்குகிறது! இந்த இயற்பகை நூல்கள் தமிழ் நெறிக்கும் தமிழ் முறைக்கும் ஆகாதவை; முரணானவை. தமிழ்ச் சுவைக்காக இனைய நூல்களை ஒரு சிலர் போற்றிக் கற்கலாம். ஆனால் பெரும்பாலோர்க்குப் பயன்படாதவைகளாக அவை இப்பொழுதே ஒதுங்கிவிட்டன. இக் கற்பனைகள் ஓரளவு நல்ல அறிவுரைகளைத் தருகிறதே எனச் சிலர் வினவலாம். தமிழில் உள்ள திருக்குறளோ, கழக இலக்கியங்

களோ தராத உயர்ந்த—இன்றியமையாத—நல்ல அறிவுரைகளையோ, கருத்துகளையோ இப் பிறமொழியாக்கங்கள் தருகின்றனவா என ஆராய்ந்தால், உண்மையில் இல்லை என்பதைத் தெளியலாம். ஆகவே ஓரிரு கருத்துகளைத் தருவது என்பதற்காகப் பெரும்பாலும் மடமையும் கயமையும் கலந்த கதையையோ, பாவியத்தையோ தமிழர் வீணாகக் கற்றுக் கொண்டிருக்க வேண்டியதில்லை!

இன்றைக்கும் நாளைக்கும் உதவும் அறவுரை—அறிவுரை—உண்மைகளைத் தரும் தமிழ்ப் பண்பு மணக்கும் தமிழ் மரபு இலக்கியங்களையும், திருக்குறளையும் தமிழர் நாடோறும் ஐயந்திரிபற ஆராய்ச்சியுணர்வோடு கற்றுத் தெளிந்து ஒழுகினால் போதும். இனி தமிழுக்கு மொழி பெயர்ப்பு செய்பவர்களும் தமிழறத்துக்கு ஒத்ததும், தமிழருக்குப் பயன்படக்கூடியதும் நேர்மை வாய்ந்ததுமான பகுத்தறிவிலக்கியங்களை—சீர்திருத்த இலக்கியங்களையே—மொழி பெயர்க்க வேண்டும். இன்றேல், அந் நூல்களும் காலக்காற்றால் அடித்துச் செல்லப்படும் என்பது உறுதியாம். கழக இலக்கிய மரபினைப் புத்துயிர் பெறச்செய்யும் புத்திலக்கியப் படைப்புகளையே தற்கால எழுத்தாளர்களும் எழுதி மக்கள் வாழ்க்கைக்கு உதவல்வேண்டும் இதுவே காலம் வெல்லும், காலத்துக்கேற்ற கற்புத் தொண்டாம். ○

தென்மொழித் தொகுப்பு.

முதல் சுவடி.

முதல் சுவடியின் பன்னிரண்டு ஓலைகளும் சேர்ந்த தென்மொழியின் புதிய தொகுப்பு விற்பனைக்கு அணியமாயுள்ளது. மிகவும் குறைந்த தொகுப்புகளே கையயம் உள்ளமையால் தேவையான தமிழன்பர்கள் உரிய முழுத் தொகையையும் அனுப்பி, விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். படிகள் எஞ்சாமற்போமாயின் பின்னர் வருந்த நேரும். இலக்கிய இலக்கண அறிவியல்பற்றிய பல்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகள் 63ம், ஆங்கில மொழியாக்கங்கள் 12ம், 16 நூல் நிறைகளும், 73 இன்சுவைப் பாடல்களும், முழு இலக்கியம் ஒன்றும், 27 சொல் விளக்கங்களும், 31 துணுக்குகளும், 106 கருத்துரைகளும், 62 வினா விடைகளும், 8 சிறுகதைகளும், 3 நூற்சுருக்கங்களும், 6 கற்பனை ஊற்றுக்கட்டுரைகளும், 7 அறிஞர் வரலாறுகளும் கூடிய அறிவுப் பொட்டகம்! உயர்ந்த அழுத்தமான கட்டடம் பதிவு அஞ்சல் செலவும் சேர்ந்து விலை 10 உருபா. உங்கள் படிகட்கு உடனடியாக எழுதுங்கள்.

—அமைச்சர், தென்மொழி.

சீர்தமிழ் காக்க, அன்றிச் செத்தொழிக!

வை. சீனிவாசன், தேவபாண்டலம்.

கற்றுணர்ந்த சான்ருரே கண்ணிகர்த்த
தமிழர்களே, கனிகொள் இன்பம்
நற்றமிழிற் சுவைப்போரே நாப்புடைக்கப்
புகழ்வோரே, நலிந்த இந்தி
சொற்சிறந்த தமிழ்மொழ்வாழ் தமிழ்நாட்டில்
நுழைப்பதற்குச் சொன்ன வர்யார்,
வெற்றுரையாற் 'காப்ப'மென விண்ணதிரக்
கத்துகின்ற அமைச்சர் கட்கே?

ஓலெ லூம்பைப் போட்டுவிட்டால் ஓடிவரும்,
ஒருநாயும் உவந்து பின்னே!
சீர்சான்ற செந்தமிழீர், செந்தமிழ்க்குக்
காப்பளிக்க! சிறந்து வாழ்க!
பார்போற்ற வாழ்ந்திருந்த பழந்தமிழர்
மறக்குலத்தீர், பண்டை நாள்போல்
சீர்தமிழைக் காக்க! அன்றிச் செத்தொழிக!
செத்தொழிந்தால் சிறக்கும் மானம்.

வெற்பெடுத்த தோளினீர், விளைவெடுத்த
மூதறிஞர், விரும்பு மேன்மைக்
கற்பெடுத்த தாய்க்குலத்தீர், கற்கின்ற
மாணவரீர், புலவர் நல்லீர்,
கற்பிளக்கும் அதிர்முழக்குங் காட்டரிமா
நீவிர்உளங்; கனன்று சூழ்க!
புற்பிளந்து குடியிருக்கும் புன்முயல்கள்
அவர்உம்முன்; எளிது வெல்வீர்!

நினைவிருக்கின்றதா?

அமைச்சர்க்கு மடல் விடுக்க, அன்பர்களின் கையொப்பங்களைப் பெற்று விட்டீர்களா? இல்லையேல் இன்றே இப்பொழுதே தமிழ் காக்கும் அத் தலையாய பணியைச் செய்யத் தொடங்குங்கள். — ஆசிரியர்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

வள்ளுவர் தொகுத்த துறவறம்.

புலவர். வித்துவான். ஒண். கி. சந்திரசேகரன்,
எம். ஏ; பி. டி; பி. ஓ. எல்.

இனி, "அறத்திற்கே அன்பு சார்பென்ப" என்பதனைக் காட்டி "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என்புழி இல்லறமே அறமெனப்படுமெனின்,

"இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு"

என்புழி, நீத்தார் பெருமைக் கண் துறவறத்தையே அறம் எனக் கூறினாராகலின், இல்லறமொன்றே அறமெனப்படுவதியாங்ஙன் அமையும்?

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு"

என்புழி, இல்லொழுக்கத்துக்கண் நின்றொழுகி, நீங்கித் துறவுப் புக்குப் பிறப்பறுத்துக் கொண்டாரே பெருமையுடையாரெனப் படுதலின், அவர் பூண்ட துறவறமே அறம் எனச் சிறப்புறுவதாகும். அவர்தம் துறவறந் தானும் இயல்பினால் இல்வாழ்க்கைக் கண்நின்று நீங்கியவழியே சிறப்புறுதலின், முதற்கண் இல்வாழ்க்கையினையே மேற்கொண்டொழுக வேண்டுமென்பதனை வற்புறுத்தற் பொருட்டு அதனையே விதந்து "அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை" யென்றாரென்க. இல்வாழ்க்கை என்பது மனைவியொடு வாழ்தல் என்று பொருள்படுதலின், மனைத்தக்க மாண்புடையாளொடு கூடி வாழ்ந்தார்க்கே மன நலம் வாய்க்கும். அவ்வாறில்லாது துறவினை மேற்கொண்டார் பெரும்பாலும்,

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று"

என்றாற் போலப் பழிக்கப்படு படிற்றொழுக்க முடையராவர். இதனால், இல்லறம் ஒழுக்கமென்பதும், துறவறம் இருமை வகை தெரிந்து மேற்கொள்ளப்படும் அறமென்றும் விளங்கக்காண்டும். இதுபற்றி, அறமெனப்படுந் துறவறத்திற்கு இல்வாழ்க்கையே நேர்வாயிலாதலை யுணர்த்துதற் பொருட்டு அவ் வில்வாழ்க்கையினையே அறமென வேண்டினாரென்க இதனான் காணுறைதவம் களையப்படுமாறும் காண்டும். இன்னோரன்ன கருத்துகளையெல்லா மொருங்குவைத்து நோக்குழ, இல்லறமல்லது நல்லறமன்றென்றலின், அறமாயவற்றையெல்லாஞ் செய்தற்கு இல்லொழுக்கமே ஏற்றதாமென்றும், அவ் வொழுக்கத்துக் கண் மனமுதலாயின

கரிசுகளினீங்கித் தூயவாகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டு மென்றும், பின் பொறிவழிச் செல்லாது மனமுள் முகமாக அடங்கியுயிரை நோக்குழித், துயில்வோன் கையசத்தது நெகிழ்ந்து விழுமாறு போலப் பற்றுகள் நீங்கும் நிலைமையுண் டாவதே துறவறமாமென்றும், இவ்விரண்டற்கும் இடைக்கண் ஒருநிலை யுண்டாவதான் போதருவதோர் பயனின்றுமெனவும், இல்லறமுந் துறவறமும் ஒரு தொடர்ச்சியாய் வீடுபேற்றிற்குத் துணை செய்வனவாமென்றும், இல்லறத்தின் நின்றுழியே துறவறத்தார்க் கோதிய தூய்மையனைத்தும் பெறுதற்காமென் றும், சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் மனத்தை உய்க்குமளவும் ஒருநிலையாகி இல்லறமாமென்றும், ஆராவியற்கை யவாநீங்கிப் பேராவியற்கையைப் பெருமுயற்சி கைகூடுமளவும் பிறிதொரு நிலையாகித் துறவறமாமென்றும் ஓதிக்கொள்ளுவதன்றி, அவை தம்மிடையேற்ற இழிவுகள் கற்பித்துக்கோடல் சாலாதென்பதூஉம் கொள்ளக்கிடக்கும். அதுபற்றியே இவ்விருவகை யறங்களும் காழுங்கிடுகும்போல் யாப்புடையனவாமென்றோதுவாராயினர் என்க.

"நோற்பவ ரில்லவர்க்குச் சார்வாதி யில்லவரும்
நோற்பவர்க்குச் சார்வா யறம்பெருக்கி - யாப்புடைக்
காழுங் கிடுகும்போல் நிற்குங் கயக்தின்றி
ஆழிசூழ் வையத் தறம்" (அறநெறிச்சாரம் : 15)

அன்றியும், வீட்டுலகடைய வேண்டுவோர் தம் இயல்பாகக் காட்டுவன இவ்விரு நிலையினர்க்கும் பொருந்துமாற்றினை,

"இந்திரியக் குஞ்சரத்தை ஞான விருங்கயிற்றால்
சிந்தனைத்தூண் பூட்டிச் சேர்த்தியே-பந்திப்பர்
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்து வார் (அறநெறிச்சாரம் 190)

என்பதனானும் அறிதும்.

இனி, வள்ளுவர் கூறியாங்கு இல்லொழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலே விழுமிய பலவற்றுள்ளும் விழுமியதென்ப வாதலின், அவ்வொழுக்கத்து நின்று நீத்தலைப்பற்றிப் பரிமேலழகர் கூறுங்கால் "உரிய வொழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவந்தேயும்; பாவந்தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்த வநித்தங்களது வேறுபாட் டுணர்வும், அழிதன் மாலையவாய இம்மை மறுமை யின்பங்களி னுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம்; அஃதுண்டாக, பிறவிக்குக் காரணமாகிய யோக முயற்சியுண்டாம்; அஃதுண்டாக மெய்

யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும், அகப்பற்றாகிய யானென்பதும் விடும்; ஆகலான் இருவகைப் பற்றுகளையும் இம் முறையே உவர்த்துவிடுதலெனக் கொள்க'' எனக் காட்டினார். ஈண்டு, யாமும் இல்லொழுக்கம் வழித்தாக வருந் துறவறமே சிறந்த தென்பதனை அவ்விருவகை யறங்களுக் கோதிய நெறிகள் ஒன்றற்கொன்று காரண கருமமாக நிற்றலைக் கொண்டு கூட்டிக் காட்டுதும்:

இல்லறம்		துறவறம்	
8)	அன்புடைமை ...	25)	அருளுடைமை
9)	விருந்தோம்பல் ...	26)	புலான் மறுத்தல் (வெகுளாமை)
10)	இனியவை கூறல் ...		
13)	அடக்கமுடைமை ...	27)	தவம்
15)	பிறனில் விழையாமை	28)	கூடாவொழுக்கம்
18)	வெஃகாமை ...	29)	கள்ளாமை
19)	புறங்கூறாமை ...	30)	வாய்மை
20)	பயனில சொல்லாமை	31)	வெகுளாமை
21)	தீவினையச்சம் ...	32)	இன்னா செய்யாமை
22)	ஒப்புரவறிதல் (இம்மை	33)	கொல்லாமை (இம்மை)
23)	ஈகை (மறுமை)	34)	நிலையாமை } (மறுமை)
		37)	அவாவறுத்தல் } (மறுமை)
24)	புகழ்		...

1. **அன்புடைமையும் அருளுடைமையும்:**

''அருளென்னும் அன்பீன் குழவி (76:7)

''அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்

(76:5) என்பவற்றால் அன்பு வளர்ந்து அருளாய் விளையுமாறும், அன்பும் அருளும் பொருள் செயற்கு இன்றியமையாமல் ஒருங்கே வேண்டப்படுமாறும் அறிதும். அன்றியும்,

> ''அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
> நண்பென்னும் நாடாச் சிறப்பு''

என்புழி, அன்பின் விளைவாகிய நட்பினால் உண்டாகும் சிறப் பென்னும் நலனாவது தீ நெறிகளைச் செல்லுங்கால் விலக்கி, ஏனை நன்னெறிகளைச் செல்லாக்கால் செலுத்துதலாமென்பது

> ''அழிவினவை நீக்கி யாறுய்த் தழிவின்கண்
> அல்லல் உழப்பதாம் நட்பு''

என்பதனுலறிதும். இந் நட்புணர்ச்சியான் "இருமை யின்பத் திற்கு உரிமை எய்து நிலே"யுண்டாம். அருளுடையார்க்கு இருள் சேர்ந்த இன்னவுலகம் புகுதலும், தன்னுயிரஞ்சும் வினை யுண்டாதலும், அவ்வாறுளவாதலும் இலவாகவே இருமை யினுந்துன்பமின்மையாம். இவற்றன், இருமையினும் துன்பத்துட் புகாமை காத்தல் அன்புடைமைக்கும் அருளுடைமைக்கும் ஒக்கக் காணப்படுதலானும், அன்பான் அருளுண்டாதலறியப் படுதலானும், இவை முறையே தம்மிடை இயைபுடையவாய் இல்லறந் துறவறங்களுக்கு ஏற்புடையவாயின வென்க. அன்றி யும் இல்வாழ்க்கைக்குப் புறத்துறுப்பாகிய இடம் பொருளேவல் களை யன்புடைமையால் ஓம்பிக் கொண்டவனே பின் துறந்துழி யும் தான் இடையே செய்யும் அறங்களைத் தானே அழித்துக் கொள்ளாமல் அருளினீர்மையால் காத்துக் கொள்ள வல்லவ னுவன். இல்வாழ்வுழியுண்டாம் நற்பழக்கம் துறந்துழியுங் கை கொடுத்தல் நிகழும்.

"புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பில்ல வர்க்கு" (79)

என்பது, அன்பின்மையான் இடம் பொருளானவற்றை யிழத் தலும்,

"தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால், தேரின்
அருளாதான் செய்யும் அறம்" (249)

என்பது அருளின்மையான் செய்யும் அறங்களை யிடையேயழித் தலும் கூறுமாறறியப்படும். இதனுன் இல்வாழ்க்கையின் நின் றுழி அன்புடைமையாற் சிறந்தாற்கே, துறந்துழியும் அருளுடை மையான் அறங்காத் தொழுகுத லியல்பான்மையு மென்பது போதரும்.

2. விருந்தோம்புதலும் புலால் மறுத்தலும்:

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று (82)

என்றதனுன், விருந்தினரைத் தன்னின் வேருகக் கருதுதலும், அவர் வருந்தத் தான் மகிழ்தலும், சிறந்தது கையகத்தாயது நோக்கி அதனைத் தனக்கே யாக்கிக் கோடலும் செய்யாதான் துறவறம் புக்குழிப் பிறிதுயிர்களைத் தன்னின் வேருகக் கருது தலும், அவற்றின் உயிர் பிரிதலை யுடன்படுதலும், இழிந்தது கையகத்ததாகக் கொள்ள நினைதலும், அவ்வாருயதோர் உட லைத் தானுகரக் கொள்ளுதலும் இயல்பாகவே மேற்கொள்ளா னன்றே!

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" (251)

இவற்றான், வந்த விருந்தினரைப் பரிந்து எதிரேற்று உண்டி முதலாயின நல்கி நாடோறு மோம்புவான், பிறிதுயிர் வருந்தி நீங்குதற்கும், அது நீங்கிய வழிப் பிறர்தரும் இறிதசு புலாலை நுசைதற்கும் ஒருப்படா மன நலமுடை யனுவன் அன்றே. இதனுனும், இல்வாழ்க்கைக் கண் விருந்தோம்புவானை துறவறத்துக் கண் புலாலுண்ணுதலை மறுக்க வல்லனுது மென்றறியப்படும்.

3. அடக்கமுடைமையும், தவமும்:

உயிரானது அளவு குறித்தற்கரிய நெடுங் காலமாகவே பிறப்புப் பிணி மூப்பிறப்புகளான் இனைதலுற்று வருகின்றது. இதனையுணர்ந்து தண்டாத் தவநெறியிற் றலைப்படின் மெய்யறிவு பிறந்து வீடுபேறுண்டாகும்:

"ஆக்கமுந் திறலுஞ் சீரு மாயவு நலனு மேலாம்
ஊக்கமு வீடு மெல்லாந் தவத்தின தூற்ற மன்றோ"

(கந்தபுராணம்) இத்தவ முயற்சிக் கஞ்சுவார் "இன்போ ரணுவா மிடருதற்கு மாமலையாம், புன் போகம் வேண்டிப் புலம்பாதே" யென்னும் அறிவுரைக்குச் செவிமடுக்காது அதனையே பல்காலும் நயந்து பல பிறவியுந் துன்புறத் தக்க தீவினை செய்து கொள்ளு வர். இத் தீவினைக் கஞ்சுவார் வேட்கை யுட்பட்டு வீண் போகா மல் தவநெறிக் கேற்பனவே முயல்வார்.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு" (266)

தவமாவது, புலால் மறுத்து உயிர்கள்மேல் அருள் முதிர்ந் துழி உண்டி சுருக்கல் முதலியவற்றான் உடலை யொறுத்தலாம். இதனுல் பொறிகள் தளர்வனவாக அவற்றுவழி மனமும் போக் கல்கும். அம்மனமானது தன்வழியே சென்று பஃறலைப்பட்ட உடலை யொறுத்திடினும் பயனின்றாம். ஆகவே நுகர்ச்சிக்குரி யன அமைந்தவிடத்து அவற்றின் மேல்நசை யெழாது மடங்கும் பழுத்த நிலையைப் பெறுமாயின் புறத்துண்டாம் வருத்தத்தால் மனம் பொறிவழிப் போக்கினைத் துவர மறக்கும். இந்நிலையை இல்லொழுக்கின் திற்றற் கண்ணேயே பெற்றுக்கோடலமையும்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (126)

என்றதனுன், ஆமையானது ஐந்துறுப்பினையும் இடர்புகாமல் அடக்குமாறு போல ஐம்பொறிகளையும் தீவினை புகாமல்

அடக்குதலை, இல்வாழ்க்கையினின்றுநீயே பழகுமாறு காட்டி னார். தீவினை விளங்குவது மனை வாழ்க்கையில். அதற்கஞ்சி னோன் ஐம்பொறிகளையும் அடக்கினானாயின், துறவுக் கண் மன மடங்க மேற்கொள்ளும் தவ முயற்சிக் கண் மனமானது புறம் போதலை விடுத்து அகமுகத்து உயிரை நோக்குதலைப் பற்றும்.

மேலும் அடங்கிய பொறிவழியே மடங்கும் இயல்பிற்றாய் நடந்த மனமே பின் அப் பொறிகளை யடர்க்குமிடத்து அவற்று வழிப் போக்கொழிந்து நிற்றல் கூடும். ஆகவே, பொறிகளைக் கரிசு புகாமல் அடக்குதலும், அப் பொறிகளினிடத்து மடங்கும் இயல்பிற்றாய் மெத்தென மனத்தை நடத்தலும் ஒல்லும் இல் வாழ்க்கையினின்று துறந்துழியல்லது, பொறிகளை யடர்க்கு ஞான்றேனும் வேண்டிய வெல்லா மொருங்கு விட்டொழியுஞான் றேனும் மனமடங்குமென்பது பெறப்படாதாம். இதனானும், இல்லறத்தின் வழித்தாகிய துறவறமே சிறக்குமாறறியப்படும்.

4. **பிறனில் விழையாமையும், கூடாவொழுக்கமும்:**

காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, 'மதம்' என்னுமிவை யாறும் உட்பகை யெனப்படும். இவ்வாறனுள் ஏனையைந்தனுக்குங் காரணமாயது காமம். இது ஒழித்தற்கு அரியதூஉமாம். இது கையிகந் தோடுதற்கு இடம் பிறனில் விழைதலாம். பிறன்மனை யுட்கொள்ளாத ஆண்மை யொரு வற்கு வாய்க்கின் காமங் கையகப்பட்டு நிற்கு நிலைமைத்தாய், மனையாளது தோளொன்றே நசைந்துழி, வரவர அதன்புன்மை புலனாக, உவர்க்கும் நிலை வாய்க்கும்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்(கு)
அறனொன்றோ வான்ற வொழுக்கு" (148)

இவ் வொழுக்கத்தான் நெஞ்சகத்துக் காமங் காழ்ப்பேறாது நெகிழ்ந்த நிலையினதாகவே துறவு தலைப்படும். அந்நிலைக்கண் நெஞ்சில் துறப்பனவெல்லாம் எளிதின் கைவரும். உலகம் பழிப்பதெல்லாம் காமத்தான் எண்மையராய வழியே யாதலின் அஃதொழிந்து மனத்தது மாசிலாராயின் எற்றென்று ஏதம் பலவுந்தரும் படிற்றொழுக்கம் யாதானும் பற்றாதாம்.

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்" (276)

இதனான், இல்லறத்துக்கண் பிறன் மனையாளை விழையா தொழுகும் நீர்மையால், துறந்துழி மனத்தால் மாணுதல் வல்ல ராதல் எளிதில் எய்தப்படுமென்ப.

5. ஒப்புரவறிதலும், கொல்லாமையும்

அழுக்காறுமை முதல் தீவினையச்சம் வரையில் சொல்லியன மனமொழி மெய்களால் தவிரத் தகுவனவாக அற நூல்களுள் விதிக்கப்பட்டனவாகும் மேல் உலக நடை நோக்கிச் செய்யத் தகுவனவாய் எஞ்சி நிற்பனவும் அப்பொழுதைக் கப்பொழுது தோன்றுவனவுமுளவாம். அவற்றைத் தாமே யறிந்து செய்தலமையும். அவ்வாறெழுந்தன நின்றவெல்லாம் ஒப்புரவறிதலில் உய்த்துணரக் கூறினர். மறை நூல் நடைவழு தீர்திறன் பெறுதற்குக் கழுவாய்கள் விதிக்கப்பட்டுள்ளன உலக நடை வழு அதுபோல் தீர்திறனுடைத்தன்றும். தன்னை விற்றுக்கொள்ளுவதொரு பொருளில்லை: அவ்வாறுளதாவதொரு பொருள் தானுங் கேடாயின் யாவரே விழைகிற்பார்! அக்கேடுதான் விழைதக்கதல்லதாய வழியும் ஒப்புரவினால் வந்ததாயின் தன்னைவிற்றாயினும் கொளல் வேண்டும் என்ப. இதனால், எவ்வகையானும் வழுப்புகாது இம்மைக்கண் அறமும் புகழும் வேண்டிச் செய்யத் தகுவனவெல்லாம் எஞ்சாது செய்தானவன்.

> "ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
> விற்றுக்கோட் டக்க துடைத்து" (220)

செய்யத் தகுவனவெல்லாவற்றினும் சிறப்புடைத்தாய், அறிவு நூல்கள் விளக்காத நற்செயல்களையும் ஒப்புரவறிதல் அகப்படுத்து நிற்குமாறு போல, அறங்கள் எல்லாவற்றினும் சிறப்புடைத்தாய், கூறாத வறங்களையும் தன்னுளகப்படுத்து நிற்பது கொல்லாமை. அதுபற்றியே இல்லற வியலினிறுதியில் ஒப்புரவறிதலையும், துறவறத்தால் காக்கப்படும் நோன்புகளின் இறுதிக் கண் கொல்லாமையையும் வைத்தனரென்ப.

> "புத்தே ளுலகத்து மீண்டும் பெறலறிதே
> யொப்புரவி னல்ல பிற" (213)

என்றதனான் மேல் நிலைக்கு ஒப்புரவு உறுதுணையாதலுணருதும்.

> "நல்லா றெனப்படுவது யாதெனின் யாதொன்றுங்
> கொல்லாமை சூழு நெறி (324)

என்றதன்கண், வீடு பேற்றுக்குக் கொல்லாமையே நல்ல நெறி யெனப்படுமென்றுணர்த்தினர்.

இனி, மறைநூல் நடை, உலக நடைகளுக்கு வேண்டுவன வற்றையெல்லாம் ஒழிவற வுணர்ந்து, வழுப்புகாமல் தனது உயிரின் அறிவும் செயலும் சிறந்து விளங்கு நிலைமை யுண்டாகச் செய்யும் இயல்புண்டாய வழியே, துறவறத்துக் கண் கைக்

கொள்ள வேண்டற்பாலனவாய் நூலகத்து விதித்தனவும் ஒழிந்தனவுமாயவற்றை நாடுமியல்பினனுவன்.

"தேவரே தாமுமாகித் தேவராற் றெழிக்கப்பட்டு
மேவல்செய் திறைஞ்சக்கேட்டு மணிகமாப் பணிகள்செய்தும்
நோவது பெரிதுந் துன்பம் நோயினுட் பிறத்தறுன்பம்
யாவதுந் துன்பமன்னு யாக்கை கொண்டவருக் கென்றுன்"
(சீவக சிந்தாமணி)

என்பதுபற்றி ஒப்புரவிறுல் வருங் கேட்டினைத் தன்னை விற்ருயினும் இல்லறத்துக் கணின்ருன் கொள்ளுதல் தக்கதாயிற்று. இதுவேபற்றி, நிலையஞ்சி நீத்தலும் வேண்டுவதாயிற்று. ஆகவே இயங்குவ நிற்பவென்னு மிருவகைப் பிறப்பினும் இன்ப மென்ப தொன்றின்றி யுள்ளனவெல்லாந் துன்பமே யாமென்னும் உணர்வு நிலை ஒப்புரவறிந் தொழுகுதற்கண் தன்னை விற்றுக் கொள்ளுமியல்புடையானுக்கே யுண்டாவதாகும். அவன் அந்நெறியே மனை வாழ்க்கையைத் துறந்துழி, கொல்லுதலான்வரும் "செயிநுடம்பிற் செல்லாத் தீவாழ்க்கை" யுண்டாகாது, பகுத்துண்டு பல்லுயிரோம்பும் நெறியினிற்க வல்லனும். தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு வேளாண்மை செய்தற்கண் உய்க்கும் ஒப்புரவறிந்தானுக்கே துறவுக்குரிய பகுத்துண்டு பல்லுயி ரோம்பும் கொல்லா நெறி கை கூடும். இதனுனும், இல்லறத்தினின்று நிலையஞ்சி நீத்தலே சிறப்புடைத்தாதல் வலியுறும். இவ்வாறே பிறவும் அறிந்து கொள்ளப்படும். இவற்ருன், இல்லறத்தின் வழித்தாகிய துறவறத்தை வள்ளுவர் வகுத்துக் காட்டும் வண்மைக்கு நிகரின்மை யறிதும். *

தென்மொழி அன்பர் தம் நலங்கருதி
விலையைக் குறைத்துள்ளோம்.

துரை. மாணிக்கம் எழுதிய
இனிய, எளிய செந்தமிழ்க் காப்பியம்

கொய்யாக்கனி

பாவாணர் தம் அணிந்துரையும் புரட்சிப் பாவலர் தம் மதிப்புரையும் நூலின் பெருமையை உணர்த்தும்.

பிறர்க்கு: 2-25 தென்மொழி உறுப்பினர்க்கு: 1-50

அஞ்சல் செலவு 50 காசு தனி.

இன்றே எழுதிப் பெறுங்கள்.

தென்மொழி,
திருப்பாதிரிப்புலியூர்.

பாட்டரங்கம்.

இந்தி எதிர்ப்பு:

தெருப்போடு விளையாடல் வேண்டா; இந்தி
நினைவோடு கணக்காணல் வேண்டா; பொய்யாய்
விருப்போடு வேறுபடல் வேண்டா; பொய்யாய்
விதிசெய்து நெறிமாறல் வேண்டா; சொந்த
உரிமைக்கு மடைகட்டல் வேண்டா; நாட்டை
உணராமல் நடைபோடல வேண்டா; சேற்றுள்
எருமைக்குத் துணைபோகல் வேண்டா; மண்டை
எலும்புக்குள் மண்மூளை வேண்டா; வேண்டா!

கொந்தளிக்கும் எரிமலைபோல் குமுறி நின்று
கொதிக்கின்ற நெஞ்சங்கள் கொண்டு விட்டோம்;
செந்தமிழ்க்குச் சீர்கேடு மறைந்து செய்து
சாகாமல் செத்துவருஞ் சழக்கர் கட்கும்,
இந்திவெறி கொண்டவர்க்கும் இன்றைக்கே எம்
இடியோசை விடுதலைப்பண் கேட்டிடட்டும்
செந்தமிழர் பொருகளத்தில் இந்தி வம்பர்
சிந்துகின்ற குருதியினைப் பார் காணட்டும்!

— மு. ஆனந்தராசன், நுங்கம்பாக்கம்.

காலத்துக் குதவாத கற்பனையை எண்ணிக்
கவலையுறும் இளந்தமிழா, கனிவுடனே கேட்பாய்,
ஞாலத்துக் கறிவூட்டி, நற்றமிழைப் பேணி
நலிவறியா இனமாக நாகரிக வாழ்வுப்
பாலத்துக் கடியாகப் பண்பட்ட வாழ்க்கைப்
படியமைத்து வாழ்ந்திட்ட பைந்தமிழர் இற்றைக்
கோலத்தை நினைத்தாயா? கூற்றைப்போல் இந்தி
கொடியேற்றல் கண்டாயா? கூறப்பா, கூறு!

— கல்லூர் மணியம், மலேசியா.

வதைபட்டும், மிதிபட்டும், அடிபட்டும் நாம்
வடவரிடம் கைகட்டி வாழ்தல் நன்றோ?
உதைபட்டுத் தலையினிலே குட்டும் பட்டிங்(கு)
ஒண்டவந்த வடவர்க்குப் பணிதல் நன்றோ?
எதைவிட்டுப் போனாலும் போவார் அன்னார்
எழில்வளஞ்சார் தமிழகத்தை விட்டுப் போகார்
இதைவிட்டுப் போனாலோ வடவர் வாழ்க்கை
இடிவிழுந்த பெருமாடம் ஆகும் தானே!

குகைவிட்டுக் கிளம்புகின்ற புலியைப் போலக்
 குமுறிஎழு தமிழ்மகனே; தமிழைக் காப்போம்
பகைவெட்டி முறித்திடுவோம்; பண்பைக் காப்போம்
 படையொன்று திரட்டிடுவோம் நாட்டைக் காப்போம்.
நகைகொட்டிப் போர்முரசம் ஒலிப்போம்; இந்தி
 நலிபகையை ஓட்டிடுவோம்; எழுக இன்றே!
வகைகெட்டுப் போனதுவோ நம்மறந் தான்?
 வளர்த்ததமிழ் அன்னையினைக் காப்போம் வாராய்.

–சோ. அர. எழிலன் கோவை.

"அஞ்சினூர் தீவடவர் அன்னூர்தீ தோச்சாதீர்!
தம்படையாம் இந்தி தளர்ந்திட்டார்-வெம்மறவீர்"
என்று தமிழ்த் தழிஞ்சி இன்னிசையாம் பாடுவமேல்
அன்றே கலைவேம் அணி!

"அணிகொண்டார் செந்தமிழர்; அன்றுபுறங் கொண்டார்;
பணியாத இந்திப் படையர்–திணிமுரசீர்",
என்று முழவதிர்த்தே எல்லாரும் கூடுவமேல்
மண்டும் எமக்கு மகிழ்வு.

"மகிழார்,போர் காணூர் மறத்தமிழர் தம்முன்
உகிர்தீர் புலிபோல் உருக்கெட்(டு) – இகல்வளர்த்த
இந்திப் புலைமறவர் ஈடழிந்தார், போரொழி" கென்ம்
அந்தநாள் சாய்வோம் அலை.

–துரை. மாலிறையன், புதுவை.

மொழியடிமைக் கொப்பிடுதல் மூதற்கண் கேடு!
 முழங்கிச்சென் றெதிர்த்திட்டால் வாழ்வாய்;இன்றேல்
பழியடைவாய்; பண்பிழந்து நாடு தோற்பாய்
 பழையபடி அனைத்திலுமே அடிமை ஆவாய்.
அழிவுறுவாய் தமிழ்ப்பகைவர் அசைப்புக் கெல்லாம்
 அகப்பட்டுப் பாவையென ஆடி நின்றால்
இழிவுவர மாட்டாதா? புகழா சேரும்?
 ஏறனையாய் விழித்திடடா எழுச்சி கொண்டே!

–இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.

செந்தமிழ் மகனே, செந்தமிழ் மகனே,
வந்திடும் இந்தியின் வலுவால் விளையும்
கொடுமை, அடிமை கொஞ்சம் ஓர்க;
விடுபட வேண்டி வீறுடன் எழுக.
மொழியில் அடிமை இழிநிலை நேரின்
அழிவ துறுதி! ஆமிது மெய்யே!

விழிக்குத் தீமை விளைய வரினே
ஒழித்தல் இன்றி உவத்தல் செய்தியோ?
இன்றே இந்தியை எதிர்ப்பாய்;
நன்றே துணிக; நாடுக நலனே!

—''காரைவாணன்'', காரைக்கால்

வந்து புகுந்திடும் இந்திமொழி—தனைச்
சென்று மறைந்திடச் செய்யுமட்டும்—இங்கு
நொந்து மடிந்திடும் செந்தமிழர்-தம்மின்
நோக்கம் நிறைவேறப் போவதில்லை.

இத்தமிழ் நாட்டினை ஆளவந்தார்—எமை
இந்திபடி என்று சொல்லுகின்றார்-வெறுங்
கொத்தடி மையெனக் கூவிக் குழைப்பவர்
குன்றி யொழுங்கிடச் செய்திடுவோம்.

செந்தமிழ் நாட்டினில் தான்பிறந்தோம்—நாங்கள்
வெந்திறல் வீறுட னேபிறந்தோம்-இந்தி
மந்திதனக் கிழிஏவல் செய்வார்-தமை
மாய்த்தே தனித்தமிழ்ப் பாட்டிசைப்போம்.

—தமிழ்வளவன். பாண்டுகுடி.

பாரதிதாசன்:

கன்னியரின் காதலுக்கு விளக்கம் ஈந்தோன்!
கவர்ந்திழுக்கும் பாநாயத்தால் சிறந்து நின்றோன்;
அன்னையராம் பெண்குலத்தின் மாண்புரைத் தோன்
அடிமைநிலை கண்டெதிர்த்தோன் எங்கே?மாசில்
பொன்னனைய தமிழ்மொழியின் சிறப்புக் கண்டு
புலவர்க்கும் விண்டுரைத்தோன் எங்கே? ஓங்கு
தென்னையினைப் போன்றுசுவைத் தெளிநீர் தந்தோன்
தெளிவுடைய பெரும்புலவன் எங்கே? எங்கே?

- கோ. பொன்வேந்தன், சென்னை.

தமிழர்க்குத் தமிழுணர்வு தான்புகட்ட வேண்டுவதோ?
வேண்டும் என்றோய்!
அமிழ்தத்தை அப்படியே எடுத்துண்ண அறியாமல்
நிற்போர்க் கங்குக்
கமழ்கின்ற மணங்காட்டிக் கற்கண்டுச் சுவைகாட்டி
ஊட்டி விட்டோய்!
இமிழ்கடலாய் இசைத்தமிழை இயம்புமிடம் நின்புகழே
இருக்கும் ஐயா!
மூச்செல்லாம் தமிழாக்கி முதுமையிலும் இளமைநிகர்
முறுக்குக் கொண்டு

பேச்செல்லாம் தமிழ்ப் பேச்சாய் பேருணர்வும் தமிழாக்கிப்
பெற்றி யுற்ரேய்
ஏச் என்று சொன்னாலும் இன்தமிழ்த்தேன் அதிற்சொட்டும்!
அறிவு கூட்டும்;
போச்சையா எல்லாமும்! பொன்ருத வல்லாண்மை
போயிற்றையா!

—மதி ஒளி, சென்னை—5.

பொது:

நுகத்தடிக்கு வழக்கம் போல் தலைகொடுத்து
நொந்தழிய, மாடுகளா? வாழ்வின் நோக்கம்
அகத்திழிந்து சாவதுவா? அறிவி லாத
ஆடுகளா தலைகவிழ்ந்து வாழ்வதற்கே?
புகைப்புற்ற உளமுடை யார் அவர்கள் தூற்றிப்
போகட்டும்; மெய்யுணரார் பண்பிழிந்து
கத்திருந்தால் நமக்கென்ன? நமது வாழ்க்கை
நற்குறளைப் பின்பற்றி அமைந்த போழ்தில்!

—இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.

உலகம் உயிர்கள் அனைத்திலும்
உணரக் கிடத்தல் இறையாகும்;
கலகம் விளைக்கும் கயமையைக்
கடிதல் அறத்தின் முறையாகும்.
பயனைக் கருதா துழைப்பது
பகரின் சிறந்த பணியாகும்;
நானில் மயங்கி மனம் கெடல்
நவின்ருல் அஃதோர் பிணியாகும்.

—காரை. இறைபடியான்.

நல்ல கனிப்பாடல் கொண்டுதருவாள்—அவள்
நாப்பண் கிளுகிளுப்பில் மேனியொளிர்வாள்!
ஒல்லி உருவுமறைத் தோடிஒளிவாள்—நம(து)
உள்ளம் குளிரஉடல் தன்னிலுருள்வாள்;
அல்லி மலரிதழை மெல்லஅசைப்பாள்—அதில்
ஆர்ந்த சுவைமணத்தில் நீந்திஎழுவாள்!
சில்லென்று பூத்தமலர்த் தோப்புகளிலே—ஒளி
தேடி நடந்திடுவாள்—தென்றலவள்காண்!

கன்னக் கரையிலவள் தொட்டுவிடிலோ—இளங்
கன்னி மனத்திைராம் மின்னல்தருவாள்!
வன்னக் கரும்புகளின் தோகைகளிலே—இவள்
வாள்கள் சுழற்றிவிளை யாடிவருவாள்!

தொடர்-1 மெய்யறிவுக் கட்டுரை.

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு.

- மெய்ம்மைப்பித்தன் -

முன்னுரை.

அகன்று பரந்து புடை நிரம்பிய ஆலமரத்தின் ஆணிவேர் சல்லி வேர்களை யெல்லாம் அகழ்ந்து பார்த்துவிடத் துணிந்திருக்கின்றேன். அவ்வேர்களை இழையறாமல் பெயர்த்தெடுத்து, அவற்றின் நுனிகளின் இயக்கங்களையும் நிலைப்பாடுகளையும் கண்டு, அவ்வியத்தகு கமுக்கங்களை எல்லார்க்கும் பறைசாற்ற முனைந்திருக்கின்றேன். பரந்து கிடக்கும் பெருநீர்க் கடலின் நீரையெல்லாம் படிகொண்டு அளப்பதைப் போன்றிருக்கின்றது என்றன் செய்கை. இதனை நானே நன்கு உணர்கின்றேன். இருப்பினும் என் கைகளிற் கிடைத்த அளவுகருவி இப் படி ஒன்றே! நான் அளக்கவேண்டியதும் இக்கடலையே! ஆகையால் எனக்கு வேண்டியவை பொறுமையும் துணிவுமே! இவ்விரண்டையும் நான் ஓரளவு அணுகிப் பார்த்திருக்கின்றேன். அங்கு நான் கண்டதெல்லாம் வியப்பான அமைதியே! இதனால் எனக்காகிலும் பிறருக்காகிலும் ஏதாவது பயன் விளையப் போவதுண்டா என்று தொடக்கத்தில் நான் நினைத்து, மாறுபட உணர்ந்துஎனக்கு மலர்ச்சியைஉண்டாக்கும் இவ்வாழ்க்கையை வீணடித்துக்கொள்வதா என்ற செருக்காலும் அறியாமையாலும் ஏளனத்தோடும் நிமிர்ந்த நன்னடை போட்டிருக்கின்றேன். ஆனால் அந்த நன்னடை என்னை மிகவும் சோர்வடையச்செய்த

(முன் பக்கத் தொடர்ச்சி)

சின்னச் சுரும்புகளின் சிற்றிறகிலே-இசை
தேக்கி ஒளிச்சிதறல் காட்டிவருவாள்!
முன்னர்த் தமிழ்க்குளிர்மை முற்றுமளித்தாள்-அதில்
மூழ்கும் மனங்களிலே இன்பங்குவித்தாள்!

மேனி இலாதஇவள் மேனிதழுவில்-வரும்
மேன்மை நலம்பிறிதில் காண்பதில்லைகாண்!
தீனி இலாதுவளர் தெய்வக்குயிலாள்-இவள்
தென்னர் பொருப்பில்வளர் வண்ணமயிலாள்!
கானில் பிறந்துவரும் கட்டழகினள்-வெம்மைக்
காட்டில் குளிர்பரப்பும் திட்பமுடையாள்!
வானில் திரிந்துவரும் வாழ்வுநலத்தாள்-நமை
வந்தே மணக்குமுயர் பண்புநலத்தாள்!

—சாலை-இளந்திரையன்.

தைத் தவிர எவ்வகை இன்பத்தையும், வாழ்க்கைப் பயனையும் எனக்கோ பிறர்க்கோ தரவில்லை.

நான் இங்குக் கூறப்போகும் செய்திகளால் இக்காலத்தில் பகுத்தறிவு என்று கூறி மக்களைக் குழப்பத்திற்குள்ளாக்கும் பகுத்தறிவுக் காவலர் ஒரு சிலர் என்மேல் வெகுண்டு, என்னை 'அறிவற்றபேதை; அறிவியல் உணராத மடமை வாய்ந்தவன்' என்றெல்லாம் ஒருபுறம் தூற்றியுரைக்கலாம். மறுபுறம் இது நாள் வரை மக்களை ஏமாற்றிக் கொண்டு வந்தும், இனி மேலும் மக்களை அறியாமைப் படுகுழியிலும், மூட நம்பிக்கை என்ற மீளாச் சேற்றிலும் ஆழ்த்துகின்ற சமயக்காவலர் ஒரு சிலர் 'நம் கருத்துக்குகந்தவன்' என்று பலவாறு போற்றியும் உரைக்கலாம் நான் முன்னவர்க்குக் கசப்பானவனும் அல்லன்; பின்னவர்க்கு உவப்பானவனும் அல்லன். பகையென்றும் நட்பென்றும் பாராது இருள்போக்குங் கதிரொளிபோல்,என் உள்ளத்தே சுடர்விட்டுக் கொண்டிருக்கும் சுடர் விளக்கைக் கொண்டு, என்னைச் சுற்றியுள்ள அண்டை அயலார்க்கு ஒளியேற்றத் தொடங்கியிருக்கின்றேன். என்னினும் பெரிதும், பெருஞ்சுடர் வாய்ந்ததுமான விளக்குகள் பலரிடமும் காப்பாக அவரவர் உள்ளங்களில் வைக்கப் பெற்றிருக்கின்றன சிலர் அவற்றைத் தங்கட்காகவே வைத்துக் கொண்டுள்ளனர் இன்னுஞ் சிலர் சுடர்ந்து ஒளி விடுகின்ற அம்மங்கா விளக்குகளுக்கு கட்டுக்காவல்கள் இட்டுப் பெருந் தாழ்களைப் போட்டு முடக்கி விடுகின்றனர். சிலரோ, குளிர் காலத்துக் கருப்பஞ் சோலைகளில் மொய்க்கும் மின்மினிப் பூச்சிகளின் ஒளி வரிசையைக் கவனியாது, அக் கருப்பங் கழி கனிலேயே நாட்டம் வைத்து, வருகின்ற பயனைக் கணக்கிடும் தோட்டக்காரனைப்போல், தங்கள் உள்ளத்தே மின்னிச் சுடர் விடும் அக விளக்கங்களைப் பற்றிக் கவலைப்படாது, இவ்வுடம்பாகிய கருப்பங்கழியின் சுவையை எவ்வெவ் வகையாகக் கொள்முதல் செய்யலாம் என்று கணக்குப் போட்டுக்கொண்டே வாழ்நாளைக் கழிக்கின்றனர்.

இவ்வுலக உருண்டையுள் நாம் விரும்பாமலேயே வந்து பிறந்தபின், அதன் முற்பகுதியையும் பிற்பகுதியையும் பற்றி எவ்வகைக் கவலையும் படாமல் இயங்குவதுதான் சரி என்று மெய்ப்பிக்க எத்தனையோ வகைக் காரணங்கள் உள்ளன! அத்தனை வகைக் காரணங்களையும் ஒன்றுவிடாமல் கூறி, அவற்றிற்கான தடைவிடைகளைக் கூறிவிட முடியும் என்று எண்ணி நான் இக் கட்டுரையைத் தொடங்கவில்லை. பிறர் நுகர்ந்தாலும் நுகராமற் போனாலும் பூத்துப் பூத்து மணம் வீசிப் பின் உதிரும் மலர்களைப்போலவும், காய்த்துக் காய்த்துக் கனிந்து பின் சாம்பிப்போகும் பழங்களைப் போலவும், காலையில் தோன்றித் தோன்றி மாலையானவுடன் மறைந்து சுழன்று கொண்டிருக்கும்

கதிரவனைப்போலவும் நான் இக்கட்டுரைக் கருத்தை விதைக்கத் தொடங்கியுள்ளேன். இக் கருத்து என் வாழ்நாள் முழுதும் கனியாத கருத்து என்றே நான் கருதுகின்றேன். என்றால் முடிந்த அளவு கடலில் மூழ்கி என்னால் இயன்ற அளவு முத்துச் சிப்பிகளை எடுத்து வந்து கரைமீது போடுவேன் என்னைவிட மிகுந்த ஆழமான பகுதியில் எவரும் மூழ்கமாட்டார்கள் என்றோ நான் எடுத்துவந்து போடுகின்ற அளவினும் மிகுதியான அளவுள்ள முத்துச் சிப்பிகளை எவரும் வாரிவிடமாட்டார்களென்றோ நான் கூற முன்வரவில்லை. நான் முன்பு சொன்னதுபோல் எல்லாரிடமும் ஒவ்வொரு கைவிளக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அவரவரிடம் உள்ள அவரவர் விளக்குகளை அவர் எல்லாருமே கொளுத்திக் கொள்வார்களாயின் - அவ்வவ் விளக்குகளின் ஒளி அவரவர்களைச் சுற்றியுள்ள இருளைப் போக்கப் போதுமானதாகலின் – ஒருவரும் பிறர் விளக்குகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டா. ஆனால் அந்நிலை மாந்த உயிர்களால் இன்னும் அடையமுடியாத நிலையாகவே உள்ளது. இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவனும் தன் தேவைக்குத் தன் மன வயலைத் தானே உழுது, அறுவடை செய்து, உண்டு உயிர்புரப்பானாயின் அப்படிப்பட்ட ஒருவனுக்குப் பிறருடைய அகவொளி விளக்கு ஒருவேளை தேவைப்படாமற் போகலாம். மற்றையெல்லாரும் பிறருடைய அகவிளக்குகளால் தங்கள் தங்கள் விளக்குகளுக்கு ஒளியேற்றிக் கொள்ள வேண்டியவர்களே!

தோற்ற மாற்றங்கட்கு உட்பட்ட இவ்வுலக உருண்டையில் தாம் எத்தனைக் கோடி உயிர்கள். அவற்றுள் தம் எத்தனை வகையான வேற்றுமை ஒற்றுமைகள். அவ்வேற்றுமை ஒற்றுமைகளால் எத்தனை எத்தனைப் போராட்டங்கள். அப் போராட்டங்களில் தாம் எத்தனை வகை வெற்றி தோல்விகள். அவ் வெற்றி தோல்விகளின் முடிவுகள் தாம் எத்துணையளவு இரங்கத்தக்கவாக இருக்கின்றன! இவ்வுலக உருண்டையின் சுழற்சி போலவே பல்கோடி யாண்டுகளாய் இவ்வுயிர்களின் சுழற்சிகளும், வாழ்வு தாழ்வுகளும் ஒரே அளவினவாக, ஒரே வகையினவாக இருந்தனவா? இல்லையே! பிறப்பிலும், இயக்கத்திலும் எல்லா உயிர்களும் வேறு வேறு நோக்கங்களும், வேறு வேறு போக்குகளும் உடையவாகவன்றோ இருக்கக் காண்கின்றோம். ஆனால் அவை எல்லாவற்றிற்குமான வாழ்வு நடைமுறைகளில் எந்த வகையான வாழ்வு—எந்த உயிரினங்களின் வாழ்வு உயர்வாக இருக்கின்றது?

ஒரு மானைப் பார்த்து மிகவும் வியக்கின்றோம். அதன் துடுக்குத்தனத்தையும், மருட்சி பொருந்திய கண்களையும், கூர்மையான காதுகளையும், அழகிய மேனியையும், நெடிய கால்களையும், கடிய ஓட்டத்தையும் நாள் முழுதும் பார்த்துப் பார்த்து

மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒரு கிளியின் கோவைச் செவ்வாயையும், இள வாழையிலை போன்ற அதன் பசிய மேனியையும் நாம் மெய்ம்மறந்து கண்டு மகிழ்கின்றோம். நமக்கு விருப்பமான காதல் மடந்தையின் மொழியைக் அக் கிளிமொழிக்கு உவமை சாற்றி மகிழ்கின்றோம். இவ்வழகிய பொருள்கள் மட்டுமின்றி, மதர் தர்த்துத் தூளி பரப்பிப் பெருநடையிட்டு நிலமதிர முதிர் குரல் எழுப்பி வரும் ஆண் யானையின் பெருமிதந்தான் என்னே! அச்சமூட்டும் அதன் தோற்றத்திலும் எத்துணை அழகு நடமிடுகின்றது? எனினும் நாம் நம்மால் முழுவதும் விரும்பப் படாத இவ்வுடலை விட்டுவிட்டு மானாகவும் கிளியாகவும் யானையாகவும் மாறிவிட ஒப்புவமா? அவ்வாறு நம் மாற்றப்படுவோம் என்ற கட்டாய நிலை ஒன்று இன்னும் சிறிது நேரத்தில் வரப் போவதாக நாம் எண்ணிப் பார்ப்போம். நம் உள்ளம் எத்துணை அளவு அச்சங் கொள்கின்றது மானைத் துரத்தி வருகின்ற அரிமாவின் இடிக்குரல் நம் உள்ளச் செவிகளை நடுங்க வைக்கின்றது. ஒரு புறம் புலித்தோற்றம்; ஒரு புறம் வேடன். வலை முதலியன நம் உள்ளக் கண்களுக்குத் படுகின்றன. வேட்டெலிகத்தின் குண்டு வந்து நம்மேல் பாயலாம். திடுமென நம் உடலில் எங்கிருந்தோ 'விர்' என வந்து தைத்த ஓர் அம்பைப் பிடுங்கமுடியாமல் (கைகள் இருந்தால் தானே) நடுங்கிக் கீழே சாய்வது போன்ற ஓர் உணர்வு நம் நெஞ்சைப் பிய்க்கின்றது! ஒருபுறமிருந்து ஒளி பொருந்திய ஒரு வாள் நம் கழுத்தின்மீது பாய்ந்து ஐயகோ நினைக்கவும் அச்சம் உயிரைக் கழற்றுகின்றது. ஒரு நொடிப்பொழுதில் அழகிய ஒரு மானுக்கு ஏற்படுகின்ற எல்லா வகையான இடர்ப்பாடுகளும் நம் மனக் கண்களில் நிழலிடுகின்றன. இந்நிலையில் நாம் முன்னர் அதன் தோற்றத்தைக் கண்டு வியந்து பாராட்டிப் பேசியதெல்லாம் சுக்கு நூறாக வெடித்து நம் நினைவுகளுக்கே எட்டாத மாயத் தோற்றங்களாகப் போய்விடுகின்றன. நமக்கு வாய்த்திருக்கும் இப் பிறவி, அம் மானுக்கு வாய்த்திருக்கும் பிறவியைப்போல் அச்சமானதுமன்று இடர்ப்பாடானதுமன்று என்றறிந்து மகிழ்கின்றோம்.

இனி, மானைவிட்டுக் கிளியாகவோ, களிறாகவோ மாறி விடத்தான் நம் விழைவோமா? என்னைப் பொறுத்தவரையில் தான் அப்படி விரும்பவில்லை. கிளிக்கூண்டும், யானைத்தோட்டியும் என்னை அச்சுறுத்தவில்லை. ஆனால் என் கண்களின் ஒளி குன்றிப் போகவும், என் செவிகளின் விரிவு குறுகிப்போகவும், என் நாக்கின் சுழற்சி குழறிப் போகவும், என் அறிவு வெளிறிப் போகவும் நான் விரும்பவில்லை. கிளியைப் பார்த்து மகிழ்ந்து வியக்கின்ற அறிவும் விரிவும் உருவும் எனக்குத் தேவையே தவிர, அதனினும் கீழான உயிரினங்களை மட்டுமே அறிந்து [illegible] ற்றுயிரும், குற்றுணர்வும், குற்றுடலும் எனக்கு வேண்டவே வேண்டா. என் கண்கள் மல்லிகை மொக்குப்

போலிருந்தாலும், என் விழிப்பாவை கடுகத்துணை இருந்தாலும் என் பார்வையின் விரிவில் இப்பரந்த வானம் முழுவதுமே அடங்கி வரும்படி இருத்தல் வேண்டும். என் எண்ண ஓட்டத்துக்குப்போதாமல் இருக்கும்படியான கையகலமுள்ள நிலத்தில் நான் என் உடலையும் உணர்வையும் குறுக்கிக்கொள்ள விரும்பவில்லை.

இப்படி மாந்தனின் எண்ணமும், அவன் அறிவும் குறுகித் தேய்ந்துபோக அவன் ஏன் விரும்பவில்லை? எதற்காக வளர்ந்து விரிந்து போவதையே விரும்பல் வேண்டும்? அறிவு அல்லது அவன் உணர்வு விரிந்து போய்க் கொண்டே இருக்க வேண்டுமா? ஆம் எனின், அவ்விரிவின் அகன்ற விளிம்புகளை நாம் தொட்டே ஆகல் வேண்டும் அவ்வகன்ற விளிம்புகளை நான் உங்கட்குக் காட்டப் போவதாக நீங்கள் நினைத்துவிடல் வேண்டா? அவ்விளிம்பு நீங்களும் நானும் சருகுவதுபோல் நம் எண்ணக் கைகட்கும், அறிவு அளவு கோலுக்கும் அடங்கி விடுவதன்று. அவ்வடங்காத தன்மையில், நாம் அறிந்து கொள்ளக்கூடிய ஒன்றைமட்டும் நான் உங்கட்குத் திட்டமாகக் காட்டுவேன். மல்லிகையின் மணம் எங்கிருந்து வருகின்றது? எவ்விடத்தில் ஒளித்து வைக்கப் பெற்றுள்ளது? என்பவற்றை என்னால் காட்டிவிடல் ஒல்லாது. ஆனால் மல்லிகைப் பூவைப் பறித்து உங்கள் கைகளில் கொடுத்துவிட முடியும் அதன்பின் உங்களுடைய தன் முயற்சி தேவைப்படும். அதற்குமுன் நான் உங்களை வேண்டிக் கொள்வதெல்லாம் நீங்கள் அமைதியாக என் பின்னே வந்து கொண்டிருக்க வேண்டும் என்பதுதான்.

ஒரு குழந்தையைப்போல, புதிய உணர்வோடு, திறந்த உள்ளத்தோடு, அங்காந்த அறிவு வேட்கையோடு, தனக்குப் பேசி முடித்த மணமகளைப் பார்க்கப்போகும் மணப்பிள்ளையைப் போல, குவியல் சோற்றைத்தேடிப்போகும் தீராதபசிக்காரனைப் போல, கடலை நாடி விரையும் ஆற்றைப் போல, ஆவின் மடிக்குத் தாவும் கன்றைப் போல, மலர் நாடிப் பறக்கும் தேனீயைப் போல என் பின்னே நீங்கள் வரவேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன். இதுநாள் வரையில் நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் சேமிப்புகளை விட நான் உங்கட்குக் காட்டப்போவன உயர்ந்தனவாகவோ, உங்கட்கு நிறைவு தரக் கூடியனவாகவோ, நீங்கள் மகிழ்ந்துபோற்றத் தக்கனவாகவோ இருக்கும் என்று நான் உறுதியளிக்க முடியாது என்னைப் பொறுத்தமட்டில் ஒரு தாய் தன் முதற் பிள்ளைக்குக் கரவாது ஊட்டும் தாய்ப் பாலைப்போல், இன்றியமையாத ஒன்றை உங்கட்குச் சொல்ல வேண்டும் என்று கருதிக் கொண்டுள்ளேன். என் உடம்பு எத்துணை யளவு மெலிந்ததானாலும், வலிந்ததானாலும் என் மாட்டு ஊறுகின்ற உணர்வுப் பால், இயற்கைச் சாரம்

வாய்ந்ததே என்று மட்டும் நான் உங்கட்கு உறுதியளிக்கின்றேன் அப்பாலினும் உயர்ந்த சாரமுடைய பொருள் உங்கள் மாட்டுச் சேமிக்கப் பெற்றிருப்பின், ஈட்டப் பெற்றிருப்பின், அச் சாரச் சரக்குகளை இவ்வேழையாளனுக்கும் விலை போக்குங்கள் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

நாம் வந்து பிறப்பதற்கு முன்பே நமக்கெனப் படுக்கை விரிக்கப் பெற்றிருந்தது. நமக்கெனப் பராமறிப்புச்செவிலியரும் தாய்மாரும் தங்கள் மலர்போன்ற மென்கைகளை ஏந்தி நின்றிருந்தனர் நம்மை வாழ்த்தி வரவேற்க ஏராளமான பெயர் உற்றார் உறவினர் என்ற பெயரில் நம்மைப் புடை சூழ்ந்திருந்தனர். இந் நிகழ்ச்சிகளெல்லாம் எதற்கு? நாம் பிறந்து வளர்ந்து இறக்கும் வரையில் நாம் அவர்களுக்குச் செய்துவிட்டது என்ன என்று கணக்குப் போட்டுப் பார்ப்போம். நம் கணக்கு எதற்குதவும்? என்ன போலி நடவடிக்கைகள் இவை...? மனஞ் சோர்வடைகின்றது. பின் இவற்றிற்கெல்லாம் என்ன பொருள்? பொருள் ஏதும் இன்றி உலகம் இயங்குகின்றதா? இல்லையே; இதன் பொருளை ஆராயத் துணியும் அளவுக்கு வன்மையான அறிவு படைத்தவர்களாக நாம் இயங்குவதே இப் புவியின்மேல்தானே? நம் அறிவுக்குப் பொருளில்லையா? உண்டு எனின் அவ்வறிவுடைய மாந்தன் இயங்கும் இவ்வுலகம் பொருளுடையது ஆகாதது எப்படி? அவ்வாறு பொருளுடையதாயின் அப்பொருள் என்ன? அஃது எவ்வாறு அறியப் பெறுகின்றது? அவ்வறிவால் யார்க்கு என்ன பயன்? அப்பயன் என்பது என்ன? அதன் இறுதி நிலை என்ன? இவைபற்றியெல்லாம் ஒரு சிலர் மாறுபடக் கருதுமாறு இருப்பதும், வேறு சிலர் அவர் தமக்குத் தாமுணர்ந்தவற்றைக் கூறுபடக் கூறுமாறு இருப்பதும் ஏன்? இவ்விரு திறத்தார்க்குமிடையில் இன்னுஞ் சிலர் புகுந்து போலித் தோற்றங்காட்டி மயக்குவிப்பது ஏன்? இவற்றிற்கான விளக்கங்களைப் படிப்படியாக இக் கட்டுரைத் தொடரில் காணலாம்.

இங்குக் குறிப்பிட இருக்கும் கருத்துகளுக்கு எவ்வகையான துணைச் சார்புக் கருத்துகளையும் எந்த அறநூலிலிருந்தும், சமய நூலிலிருந்தும், அறிவியல் நூற்களில் இருந்தும் நான் எடுத்துக் காட்டப் போவதில்லை. அவை இக் கருத்துகளுச்கு இணக்கமாகவும் இருக்கலாம்; பிணக்கமாகவும் இருக்கலாம், அவை பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. அதுவன்றி அவை தம் சிறப்பைப் போற்றுவதோ, சிறப்பின்மையைத் தூற்றுவதோ என் வேலையில்லை. எதற்காக நான் இவ்வாறு அவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்பதை மட்டும் உங்கட்குக் கூறி விடுகின்றேன்.

(தொடரும்.)

ஆங்கில மொழியாக்கம்

EVENING HAS COME!

Like the folded wings of a green-legged crane
The lily at the pond has closed;
The evening has come; alas!
Evening not alone
But followed by the night.

KURUNTHOKAI 122.

வந்தன்று மாலை!

பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீ ராம்பலும் கூம்பின; இனியே
வந்தன்று; வாழியோ மாலை!
ஒருதா னன்றே; கங்குலு முடைத்தே!

-குறுந்தொகை 122.

STILL NO SIGN OF HIM!

Like darkness dense are the cool, luxurient shades
And moonlight-like the white expanse of sand.
But, their black boughs blossoming,
Lonely are the laurel groves.
Still, no sign of him!
Our brothers' fishing boats
Are sure to be here soon.

-KURUNTHOKAI 123.

இன்னும் வாரார்!

இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக் குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம் பொழில் புலம்ப
இன்னும் வாரார், வரூஉம்
பல்மீன் வேட்டத் தென்னையர் திமிலே

-குறுந்தொகை 123.

ஆங்கில ஆக்கம்: **ம. இலெ. தங்கப்பா** எம். ஏ., பி. டி.

(நூல்நிறைப் பகுதிக்கு நூல்களையோ நாள், கிழமை, திங்கள் தாள்களையோ விடுப்பார், தத்தம் ஆக்கங்கள் பற்றி நடுவாக உண்மைக் கருத்தறிவிப்பின் அதுபற்றி மிகவும் மனம் வருந்துவதாகவும், ஊக்கம் குறைந்து 'தென்மொழி' பாற் கசப்புணர்வும் கொண்டு, பலரிடமும் இந்நிறைபற்றிக் குறைசாற்றி வருவதாகவும் அறிந்து மிகவும் வருந்துகின்றோம். 'மதிப்புரை' என்னும் சொற்கு ஒரு வேளை 'மதிப்பாக (உயர்வாக) எழுதப்பெறும் உரை' என்று அவர் கருதிக் கொண்டு அவர்தம் படைப்புகளை இப் பகுதிக்கு விடுக்கின்றனரோ, யாமறியோம். நம் நோக்கம் எவரையும் எந்நூலையும் தாக்கவேண்டும் என்பதன்று; ஊக்க வேண்டும் என்பதே! அதற்கென நம் உள்ளத்திற்படும் உண்மையான கருத்தினை அவர் பொருட்டு நாம் மாற்றிக் கொள்வது எப்படிக் கருத்து வளர்ச்சிக்குத் துணை நின்றதாகும்? இத்தகைய மனப் பாங்கினர் இந் நடுநிலையாகக் கூறப்பெறும் நூல்நிறைப் பகுதிக்கு அவர்தம் படைப்புகளை விடுத்தல் வேண்டா என்றே கண்டிப்பாகவும், வணக்கத்துடனும் கூறிக் கொள்கின்றோம். —ஆசிரியர்.)

அறிவுப்பாதை [கிழமை இதழ்]

ஆசிரியர்: சா. குருசாமி.

விலை: 13 காசு.

தன்மான இயக்கத்தினரின் கிழமை ஏடு இது. உயர்ந்த நோக்கமின்றி அவ்வப் பொழுது முளைக்கும் வெற்றிதழ்களைப் போலல்லாமல் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பும் நோக்கத்துடன் இதழ் தொடங்கப் பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது. ஆசிரியவுரை ஏட்டின் கொள்கைகளையும் குறிக்கோளையும் விளக்கி நிற்கின்றது. 'தன்மானம்' 'அறிவியல்' எனும் இரு

சொற்களும் ஒரு பொருள் உடையனபோல் ஒன்றுக் கொன்று மாற்றாகக் கையாளப் பெறுகின்றன. இது பொருந்துவதன்று. 'அறிவிய'லே தன்மானம் என்றால், அறிவியல் என்றசொல்லால் ஆசிரியர் குறிக்கும் கொள்கைகளை ஒப்புக் கொள்ளாதார் தன் மானமற்றவர் என்றும், ஆசிரியரின் தன்மானக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாதார் அறிவியல் உண்மைகளை உணராதவர் என்றும் கூறுவதுபோல் அமைகின்றது. இது சரியன்று. ''தன்மானம்'' ''அறிவியல்'', ''Rationalism'' ஆகிய சொற்கள் ஒன்றுக்கொன்று மிகச்சிறிதே தொடர்புடையனவா யிருக்க, அவை ஒரு பொருள் உடையனபோல் கையாளப்பெறு வது எண்ணக் குழப்பத்தையே காட்டுகின்றது. பகுத்தறிவு மிகவுயர்ந்ததே எனினும், இன்று பகுத்தறிவாளர் எனத்தங்களை அழைத்துக் கொள்பவர் பரப்பிவரும் பகுத்தறிவுக் கொள்கையே முடிந்த முடிபு ஆகிவிடாது. அறிவுக்கு எல்லை வகுத்துக் கொண்டு, அதற்கப்பால் ஆய்ந்து பார்க்க முயலாமல், இனி அறிய வேண்டுவன எவையும் இல்லை என்று முடிவுகட்டுபவர் களைப் பகுத்தறிவாளர் என்று எங்ஙனம் கூறுவது?

சமயங்கள் உலகெங்கும் கேடு விளைவித்து வந்திருத்தல் உண்மையே. ஆனால் அறிவியலைப் பின்பற்றும் நாடுகள் மட்டும் கேடுகளை ஒழித்துவிட்டனவா? அத்தகைய நாடுகள் இன்றும் அழிவுத்துறையில் இறங்கி உள் அமைதியையும் உலக அமைதி யையும் குலைத்துக் கொண்டிருத்தலைக் காண்கின்றோமே. சமயத் துறையிற் குவிந்து கிடக்கும் மடமைகளையும் தீமைகளையும் அகற்றி அறிவு கொளுத்துவதனை வேண்டாஎன்று தடுக்கவில்லை. ஆனால் இறை மறுப்புக் கொள்கையே முடிந்த முடிபாகக் கொண்டு அறிவுக்கு வரம்பு கட்டுவதையே பிழை என்று கூறு கின்றோம். அது 'மெய்ப்பொருள் காண்பது' ஆகாது; ஆகலின் அறிவும் ஆகாது.

மற்றும், தமிழர் விடுதலை உணர்வை முழக்கிவந்த ஓரியக்கம் இன்று தன் இயலாமையை மறைப்பதற்காகத் 'தேசிய ஒருமைப் பாடு' என்ற போலி உணர்வுக்குள் புகுந்து கொள்வதும், இவ் வொருமைப்பாட்டுக்குப் 'பின் பாட்டுப்' பாடும் வகையில், தமிழர் பால் இன்று கிளர்ந்துவரும் மொழி உணர்வை வெறி என்று பழித்து அதனை அகழ்ந்தெறிய முயல்வதும் மிகவருந்தத்தக்கன. குமுகாயத்துறையில் சமயச் சழக்கர், குலவெறியர் பிடியினின்று தமிழன் விடுதலை பெற்றுத் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நிற்றலை விழையும் இவ்வேடு, அரசியல், மொழித் துறைகளில் தமிழன் பிறர்க்கடிபணிந்து கிடத்தலை வரவேற்பது எப்படித் 'தன்மானம்' ஆகும்? தன்மொழி நலன்கருதிப் பிறமொழிகட்குக் கேடு விளைவிப்பதுவே மொழி வெறியாகும். இப்பொழுது அதனைச் செய்துவரும் வடக்கரை எதிர்த்துப் பிற மொழியின்

வல்லாட்சியினின்று நம்மரும் தாய் மொழியைக் காத்து நிலை நிறுத்தத் துடிப்பது எவ்வகையானும் மொழிவெறி ஆகாது. பல தீங்குகட்குக் காரணமாகவிருக்கும் செயற்கைப் பாகுபாடான 'சாதி'யையும், மாந்த நாகரிக உயர்வுக்கே அடிப்படையாகிய இயற்கைப் பாகுபாடான மொழியையும் ஒரே நிலையில் வைத்து இரண்டையுமே 'வெறி'களாகக் குறிப்பிடுவது பகுத்தறிவுக்குப் பொருந்தாது. குலப் பாகுபாட்டுக்குத் துணையாக மக்கள் அமைப்பில் எதனையும் அடிப்படையாகக் கொள்ள முடியாமலிருக்க, மொழிப் பாகுபாடுகள் வெளிப்படையாக, விலக்கமுடியாதன வாக இருப்பதினின்றே மொழி இயற்கைப் பாகுபாடே என்பது தெளிவாம். பண்பாடு, நாகரிகம், இனவுணர்வு, நாட்டுணர்வு அனைத்துக்கும் அடிப்படை மொழியே. மொழியுணர்வில் கால் கொள்ளாத எந்த இயக்கமும் ஒரு நாட்டு மக்களின் சொந்த இயக்கமாக இராது. பயனும் தராது. மொழியுணர்வைப் புறக் கணிக்கும் சீர்திருத்தமும், 'சாதி' ஒழிப்பும், அரசியலும், உயிர் நிலையைப் புறக்கணித்து வெற்றுடற்குச் செய்யும் மருத்துவம் போன்றதாகும். தமிழனின் மொழியுணர்வை அழித்து அவனை ''இந்திய தேசிய''த்தில் இரண்டறக் கலந்துவிடச் செய்யும் 'தேசிய ஒருமைப்பாடு' தன்மான இயக்கக் கொள்கையில் வந்து புகுந்ததொரு முரண்பாடு. இஃது இற்றை நாள் பகுத்தறிவாளர் தம் புதுக்கொள்கை எனின், அற்றைநாள் அவர் தாம் வலித்துப் பேசியும் எழுதியும் வந்த கொள்கை பகுத்தறிவு சான்றதாக இல்லை என்பதா? மாற்றிக் கொள்வதே பகுத்தறிவாம் என்றால் இன்றிவர் கொண்ட பகுத்தறிவுக் கொள்கை நாளை மாறுபடா தென்பதற்கு அடிப்படை உறுதிஎன்ன? ஆகலின் இக்கொள்கை வீழ்ச்சிக்குக் காரணம் வலிவின்மையால் வந்த நம்பிக்கைக் குறைவோ, அன்றி ஆட்சியாளரின் அருட் கடைக்கண் வீச்சோ, யாம் அறியோம்!

— ''கல்லாடன்''

உறுப்பினர்கள் கவனிக்க...

'தென்மொழி' இதழ் அனுப்பப்பெறும் சுற்றுத்தாளில் குறிப் பிடப்பட்டுள்ள எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் பு. உ. எண் 382 முதல் 400 வரை உள்ள அன்பர் அனைவர்க்கும் சுவடி-2 ஓலை 6 (ஆடி இதழ்) முடிய உறுப் பினர் கட்டணம் முடிவடைகின்றது. தொடர்ந்து தென்மொழிப் பயன் துய்க்க விரும்புவார் இம்மாதத்திற்குள் கட்டணத்தை அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

—அமைச்சர், தென்மொழி.

உயர்வு நவிற்சியா...?

புலவர். கு. திருமேனி, பி.ஏ., பி.ஓ.எல்.
தமிழ் விரிவுரையாளர், தேசியக்கல்லூரி, திருச்சி.

யான் ஐப்பசித் திங்கள் (சுவடி 1 ஓலை 9) தென்மொழி இதழில் எழுதிய கட்டுரையை மறுத்துத், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இளையனே என்று கார்த்திகை இதழில் திரு. கு. சிவஞானம் அவர்கள் எழுதியுள்ளார். அவர் மறுப்பிற்கு மறுப்பே இக் கட்டுரை. தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் இளைஞனே என்பதில் எனக்கு மறுப்பில்லை. இளைஞன் அல்லன் என்று யான் குறிப்பிடவில்லை. இளைஞன் என்றால் எத்தகைய இளைஞன் என்று விளக்கம் கேட்பதுபோல் கேட்டு அவன் குழவி அல்லன்; இளைஞனே என்பதைப் பாட்டின் துணையினால் புலப்படுத்தியுள்ளேன்.

"இளையன் இவன் என உளையக் கூறி" என்ற அடிக்குக் "கிண்கிணி களைந்த கால்" என்ற பாட்டில் வரும் சொற்களை வைத்துக்கொண்டு, கிண் கிணி களைந்த இளைஞனா? பால்விட்டு அயினியும் இன்று அயின்ற இளைஞனா? இவவாறெல்லாம் வயின் வயின் வந்த வம்ப மன்னரைக் கவிழ்ந்து நிலஞ்சேர அட்டான் என்று செழியன் கைப்பற்றிய பகை வேந்தர்களை நோக்கிப் புலவர் கேட்பதாக எழுதியுள்ளேனேயன்றி யான் குழந்தைக்கும் இளைஞனுக்கும் வேறுபாடு தெரியாமல் எழுதவில்லை. யான் என்ன சொல்லியிருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே திரு. சிவஞானம் மறுக்கத் தொடங்கிவிட்டார்.

1) குழந்தைப் பருவத்தினன்.
2) இளையன்.
3) களிறுபோல் நடந்துவரும் வெம்போர் மறவன்.
4) ஒருவனாக நின்று எழுவரை வென்றவன்.

என்ற நான்கு நிலையில் அவனைப் புலவர்கள் பாடியுள்ளார்கள் என்று திரு சிவஞானம் எழுதியுள்ளமை நகை தருகின்றது. புறநானூற்றை இவர் படித்திருக்கிறாரா என்ற ஐயம் பிறக்கிறது.

1) குழந்தைப் பருவத்தில் செய்த போர் யாரோடு? எப் போர்க்களத்தில்?
2) இளையோனாய்ச் செய்த போர் யாரோடு? எக் களத்தில், ஏன்?
3) களிறுபோல் நடந்துவருபவன்எங்கு எப்பொழுது?
4) ஒருவனாய் நின்று எழுவரை வென்றமை —

—எப்பொழுது, ஏன், எங்கு? என்று அவர் பகுத்துணர்த்திய நான்கு நிலைகட்கும் வினு எழுப்பினுல் திரு. சிவஞானம் அவர்களின் புலமை புலனுகும்.

அடுத்து, ''இளைஞனையும் குழந்தையையும் அவர் ஒன்ருக எண்ணிக் கொண்டார் என்பதைத் தெரிவிக்கின்றன'' என்று எழுதியுள்ளார். அதில் பகையரசர்கள் செழியனை இளைஞன் என்று இழித்ததை இடைக்குன்றூர் கிழார், பகையரசர்களை, நோக்கி 'இளைஞன் என்று இகழ்ந்தீர்களே! அவ்வாருயின் அவ் விளைஞன் கிண்கிணி களைந்த குழவியோ'' என்று (இளைஞன் என்ற சொல்லிற்குக் குழவி அன்று என்ற கருத்தோடு) புலவர் வினுவுவதாக விளக்கமெழுதியுள்ளேன். இந்நுட்பம் புரிந்து கொள்ளும் நுண்மாண் நுழை புலம் இல்லாமல் மறுப்பெழுது வானேன்?

''மன்னர் குடியின் பிறந்தோர் முடி சூடிக் கொள்ளும் பொழுது இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டுகளைக் கடந்து விடுவது இயல்பு என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர்'' என்று வரலாறு காணு விளக்கம் ஒன்று தந்துள்ளார் திரு. சிவஞானம் அவர்கள். இவ்வொவ்வாக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு என்னை மறுக்குமுகத்தான் கரிகாலனை எடுத்துக்காட்டு கின்ருர்.

''பிறந்துதவழ் கற்றதற் றெரட்டுச் சிறந்தநன்
னுடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப''
(பொருநராற்றுப்படை 137-38

என்ற அடியை எடுத்துக் காட்டி இஃது உயர்வு நவிற்சி என் கிருர். அவ்வாருயின் இருபத்தைந்து ஆண்டுகட்குப் பிறகு கரிகாலன் அரசு பெற்ருன் என்று விளக்கம் கூறுவாரா? திரு. சிவஞானம் அவர்களே ''கரிகால்வளவன் பிறப்பதற்கு முன் னரே அவன் தந்தை இறந்தான். எனவே, அவன் பிறக்கும் பொழுதே ஆட்சிப் பொறுப்பையுடைய அரசனுகப் பிறந்தான்'' என்று எழுதியது முரண்பாடன்ரே!

கரிகால்வளவன் பிறப்பதற்கு முன்னரே அவன் தந்தை இறந்தான். எனவே அவன் பிறக்கும் பொழுதே ஆட்சிப் பொறுப்பை உடைய அரசனுகப் பிறந்தான். இதனையே பொருநராற்றுப்படை ஆசிரியர் கூறுகின்ருர். இவ்வாறு கூருமல் வேறு எவ்வாறு கூறுவார்? கரிகாலன் கருவாயிருந்த ஞான்றே தந்தையை இழந்தான். அதனுல், அரசாட்சி கருவாயிருந்த அவனுக்கே உரியதாயிற்று. அவ்வாட்சி கருவுக்கு உரியதேல் அக்கரு அரசியலை ஏற்று நடத்துவதாகத் தானே கொள்ள வேண்டும்.

இங்கு உயர்வு நவிற்சி ஏது? குழந்தை தோளில் நாட்டைச் சுமந்தது நம்பமுடியாததாக இருக்கின்றது என்ருல், கருணுகரத் தொண்டைமான் கலிங்கத்தில்கொண்ட வெற்றி குலோத்துங்கன் வெற்றியானவாறு எங்ஙனம்? குலோத்துங்கன் போர்க்களம் புகாது போயினும், அவன் படைத்தலைவன் சென்று கொண்ட வெற்றி அரசனுடைய வெற்றியானது போல, கரிகாலக் குழவி நாடு தாங்கிற்று என்ருல் அமைச்சர்களும், எண்பேராயமும், ஐம்பெருங் குழுவும் நாடு செகிற் கொண்டனர் என்றுதானே பொருள்படும். அரசாதலின் குழவிக்குரியதாக ஏற்றிப் பேசினுர் புலவர்.

உண்மை நிகழ்ச்சிகளைக்கூட உயர்வு நவிற்சி என்றும், புலவர் கற்பனையென்றும் கூறித் தமிழக வரலாற்றையே கட்டுக் கதை என்று தமிழிற்கு அயலார் கூறிவரும் இந்த நாளில் உண்மை நிகழ்ச்சியில் உயர்வு நவிற்சியைக் கற்பிப்பதால் வரும் பயன் என்னவோ? திரு. சிவஞானம் அவர்கள்

"ஆளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட்டாங்கு"

என்ற வரிகளை எடுத்துக்காட்டி இது உயர்வு நவிற்சியல்லவா? என்று ஒரு கேள்விகேட்டு என்னை மறுத்துள்ளார். இப் பகுதி உயர்வு நவிற்சி என்று திரு. சிவஞானம் எது கொண்டு துணிந் தார். ஆளி என்ருல் என்ன? அதன் இயல்பென்ன என்பது பற்றி ஒன்றுமறியாத பொழுது இல்லை என்ற முடிவிற்கு வருவா னேன்.

தமிழகத்தில் இருந்து அழிந்த விலங்கினங்களில் இதுவும் ஒன்று. இவ் விலங்கு அரிமாவின் வாயமைப்பில் துதிக்கையும் உடையது. இதன் வடிவத்தை இன்றும் கோயில் தூண்களில் படிவமாகக் காணலாம். இவ்விலங்கு தாய்ப்பால் குடிப்பதை மறக்கு முன்னே, முதல் வேட்டமாகக் களிறடும் என்பது தமிழ கத்தில் இலக்கியங் கூறும் உண்மை. அதனை அடிப்படையாகக் கொண்ட புலவர் அம் மரபினைக் கரிகாலனுக்கு உவமை கூறி யுள்ளார். அவ்வுவமையில் திரு. சிவஞானம் அவர்கள் உயர்வு நவிற்சி காணக்கொண்ட துணிவு எதுபற்றி வந்ததோ?

கரிகாலன் குழவிப் பருவத்தினனுக இருந்தபொழுது அவ னுக்குத் துணையாக இரும்பிடர்த்தலையார் முதலியோர் பகை யழித்து வெற்றி கொண்ட செய்தியை அவன்பால் ஏற்றிமுகமன் வழக்கில் குறித்தார் என்பதேயன்றி ஈண்டு நடவாத ஒன்றை

இறுதிப் பட்டியலும் முடிவான அறிக்கையும்: தொடர்ச்சி 7.

பாவாணர் பொருட்கொடைத் திட்டம்.

தென்மொழிச் சார்பில் மொழிப்பெரும் புலவர் பாவாணர்க்கு உருபா 2210-54 காசுகளைத் தமிழர்கள் அன்பளிப்பாகத் தந்தனர்.

திரவிட மொழிப் பெரும்புலவரும், சொல்லியல் மொழியியல் வல்லுநரும், தனித்தமிழ்க் காவலருமான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் தம் வாழ்க்கை நிலையை உயர்த்துவான் வேண்டியும், அவர்தம் நுண்மாண் நுழைபுல வன்மையான் வெளிப்போந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவான் வேண்டியும் நாம் தொடங்கிய இத்திட்டம் நாம் எதிர்பார்த்த பயனைத் தொடக்கத்தே தந்ததேனும், இடையே தம் போலிப் பெருமைகளைப் பறைசாற்றும் நோக்கம் கொண்டார் ஒரு சிலரால் குலைக்கப்பெற்றுப் போதிய அளவு ஊக்கப் பெருது பயன்குன்றத் தொடங்கியது. இந்நிலையில் பாவாணர் அவர்களும் நம்பால் கொண்ட ஐயுறவால் மாறுபடவே நம் பெருநோக்கின் அடித்தளமே விரிசல்படத் தொடங்கியது. இதன் முடிவாக யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுதல் போல,பாவாணர்தம் வருவாயைத்தாமே குறைத்துக்கொண்டார் என்பதைக் கூறியே ஆகல் வேண்டும். அரசியல், குமுகாய, மொழிப் போராட்டங்களை எவ்வகையானும் நடத்தியே தீர வேண்டிய கட்டுப்பாட்டுக்குத் தமிழர் கொணரப்பட்டிருக்கும் இவ்விழிந்த நிலையில், பாவாணர் அவர்களைத் தமிழர் தம் கண்

[முன் பக்கத் தொடர்ச்சி]

ஆசிரியர் உயர்வு நவிற்சியாக்கினரில்லை. கரிகாலனின் இளமையில் பகையழித்ததற்கு யாளி களிறட்டது உவமையானதில் உண்மை இருக்கின்றதே யன்றி உயர்வு நவிற்சியில்லை. ''இலக்கியக் கண்'' என்பது சொல்லுவதை அப்படியே பார்ப்பதில்லை; செய்தி எந்த முறையில் கூறப் பெற்றுள்ளது என்று சூழ்நிலை யறிந்து கொள்வதுதான்.

தாய் வயிற்றிருந்து தாயம் எய்தினன் கரிகாலன் என்றால், அவ்வாட்சியோடு தாய் வயிற்றிருந்தே அதன் வழிவரும் பகையையும் எய்தினன் என்றுதான் பொருள் படுமேயன்றி, பகைவர்கள் கரிகாலன் பருவமுற்று இருபத்தைந்து ஆண்டு முதிரட்டும் என்று காத்திருந்ததாகப் பொருள்படாது. (தொடரும்.)

னும் கருத்தும்போல் பேணல் வேண்டும். மொழி விடுதலைபெற அவர் ஆராய்ச்சி நூல்கள் கட்டாரிபோல் பயன்தரக் கூடியன. அவர்தம் வாழ்வு நலம் குன்றியிருக்கின்ற இவ் விடர்ப்பொழுதில் அந் நூல்களை வெளிக்கொணர்வது எவ்வகையாலும் அவரால் முடிந்ததன்று என்பதை நாம் அறிவோம். அவர்தம் நல் வாழ்வைச் சீரமைக்கவும், நூல்கள் வெளியீட்டிற்கும் குறைந்தது பதினையாயிர உருபாவாகிலும் தேவைப்படும். அப் பெருந் தொகையை இப்பூசல்கட்கிடையில் தென்மொழி திரட்டுதற்கான கால எல்லை பெரியதாக விருக்கும் என்று நாம் கருதுவதாலும், அந் நீண்ட காலத்திற்குள் பாவாணர்தம் வாழ்வு முற்றும் நலங் குன்றிப் போகுமே என்று நாம் வருந்துவதாலும், இது வரையில் திரட்டப்பெற்ற இச் சிறு தொகையோடு, நம் திட்டத்தை முடித்துக் கொள்ள வேண்டுவதாயிற்று. இத்தொகை அவர்தம் இன்றைய நிலைக்கு மிகச் சிறிதே எனினும் அவர்க்குத் தொடக்கக் கால உதவியாகவேனும் ஓரளவு நலம் பயக்கும் என்று கருதுகின்றோம். அவர்தம் நூல்களை வெளிக்கொணர்தல் தமிழர்தம் தலையாய கடமைகளில் ஒன்றாகும். அந் நூல்கள் வெளிவரின் தமிழுக்கு ஏற்பட்ட இழிவும், மிடிமையும் களையப்பெறும் என்பது திண்ணம். அவ்வருஞ் செயல்கட்குத் தமிழர்கள் என்றும் துணை நிற்கவேண்டும்.

தென்மொழி வழித் திரண்ட தொகையினை ஒரு மாநாடு கூட்டித் தமிழ் அன்பர்தம்முன்னிலையில், பாவாணர் அவர்கட்கு வழங்குதல் வேண்டும் என்பதும், அக்கால் தென்மொழிக் கழகம் தோற்றுவிக்கப் பெறல் வேண்டும் என்பதும் நம் திட்டமாயினும் தொகையளவு நோக்க நம் வகையளவைக் குறுக்க வேண்டியதாயிற்று. கடுகைக் களிற்று முதுகில் வைத்து வலம் வருவதை நாம் விரும்பவில்லை. பாவாணர்க்கு நம் செய்ய நினைத்தவை, நினைப்பவை இத்தொகையினும் பன்மடங்கு பெரியவை. அவை தம்மில் இஃது ஒரு சிறு கூறுபாடே! காலத்தால் அவையும் செயல்படும்.

இத் திட்டத்தில் பங்கு கொண்டு, தம்மால் இயன்றளவு உதவிய மாணவர்க்கும், ஆசிரியர்க்கும், பேராசிரியர்க்கும் தமிழன்பர்க்கும் எங்கள் அன்பார்ந்த நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக. இத் திட்டத்தின் வழித் திரட்டப் பெற்ற தொகை முழுமையும் பாவாணர்பால் சேர்க்கப் பெற்றுவிட்டது என்பதையும் பாவாணரும் அதனை நன்றியுடன் ஏற்றுக் கொண்டார் என்பதையும் மகிழ்வுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

அன்பன்,

பெருஞ்சித்திரன்.

இறுதியான பெயர்ப் பட்டியலும், தொகை விடுப்பு விளக்கமும் அடியிற் குறிக்கப்பட்டுள்ளன.

(4—6—64 முதல் 6—7—64 முடிய அலுவலகத் திற்குப் பணம் விடுத்தவர்கள்:)

திரு. பு. இரகுநாதன் நயம்பாடி. 2
அவர்வழி திரு. நா. சிங்காரவேலு 5
,, ,, மு. கோபால்சாமி 1
திரு. ம. மணவாளன், காட்டுப்பாளையம் 4
பெங்களூர் அன்பர் திரு. இரா. வையாபுரி. 5

அவர் வழி: தலைக்கு 5 உருபா மேனி கொடுத்தவர்கள் திருவாளர்கள்: இளவழகன், கண்ணன், த. கண்ணன் 15

அவர் வழி தலைக்கு 2 உருபா மேனி கொடுத்தவர்கள்: திருவாளர்கள்: அன்புதாசன், கலையரசன், இரா. நாராயணசாமி, ஆ. கிருட்டிணன் 8

அவர் வழி: தலைக்கு 1 உருபா மேனி கொடுத்தவர்கள் திருவாளர்கள்: அறிவுடைநம்பி, மோகன், கா. ஈசுவரன், ந. ஈசுவரன், துளசிராமன், த. பலராமன், த. முனிசாமி 7

திரு. கோ மனோகரன், கோவை-4 2
திரு எ. சச்சிதானந்தம், சென்னை-1 5
திரு கோ. கோவிந்தசாமி திருமுக்கூடல் 2

அவர் வழி: திருவாளர்கள் ம. செ. சண்முகம், தி. ம. சாரங்கன், அ. இராமன், கோ. விசயராகவன் 8

அவர் வழி: தலைக்கு 1 உருபா மேனி கொடுத்தவர்கள்

திருவாளர்கள்: மு. நாகப்பன், மு இலிங்கேசன், இரா. பாசுகரன், கே சானகிராமன், வா. பாலகிருட்டிணன், ஆ வேங்கடேசன், இரா. அண்ணாமலை, அ. வேதகிரி, மா. கி. இராமமூர்த்தி, பு. பாலசுந்தரம், பு. தருமன், இரா. தருமராசன் 12

அவர் வழி: 50 காசுமேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: தி. பு. குமாரசாமி, பி. தேவராசலு, சி. முத்தையன், ச. செபர்சுதீன், கி. ஞானசேகரன், ஏ. பரமானந்தம், தா. தாமோதரன், சி கோவிந்தசாமி, மு. சுப்பிரமணி, கே வரதராசன் மு. நடராசன், கோ. எத்திராசன், சீ நடேசன், தி. நா பெருமாள், பெ. கண்ணப்பன், ச. வேணுகோபால், மு. வேங்கடேசன், பெ. பக்தவத்சலு, சுந்தரவடிவேலு 9—50

தலைக்கு 25 காசு மேனி கொடுத்தவர்கள்:
திரு ந. கோபால், திரு. தாந்தோனி 0—50

திரு. இளஞ்சித்திரன் [தஞ்சை] அவர்கள் வழி 3-ஆம் முறையாக:

அ ஆ. பள்ளிமுதுநிலை 2-ஆம் ஆண்டு மாணவர்கள்

திரு ஆ சூசையப்பன், ம. அப்பாசாமி 1—02
திரு. கோ. பாலகேசவன், வே. செல்லத்துரை 0—50

அவர் வழி: தலைக்கு 2 உருபா மேனி கொடுத்தவர்கள்

தஞ்சை சரபோசி கல்லூரி மாணவர்கள்.
திரு. வீ. செகதீசன், (பி. எசி. 3) திரு. கா. சிங்காரம் 4

அவர் வழி: 1 உருபா மேனி கொடுத்தவர்கள்.

திருவாளர்கள்: கி. நடராசன், இரா. தனசாமி, செ. சண்முகம், இரெ சிவப்பிரகாசம், பி. தங்கராசு, கா. குணசேகரன், பா முருகேசன், வே முருகப்பன், ப. ஆதிமுத்து, வெ. சானகிராமன், க. கலியபெருமாள், ப. இராமதாசு, க. இராமசாமி, கி பூபதி, தோ. சூரியமூர்த்தி, என். சௌந்திரராசன், த. மாரிமுத்து, இரா. இராமதாசு, இலெ. மாணிக்கம். கோவி. நாகராசன், ச துரைசாமி, இரா செயபாலன், சா இளங்கோவன், இரா செயராமன் 24

பிற வகுப்புகள்:

திருவாளர்கள்: ந. சண்முகசுந்தரம் (பி. ஏ. 2) வே. பழனித்துரை (பி ஏ 3) பி. இராமசாமி (பி ஏ 2) அ முகமதுயூசுப் (பி எசி 3) சி. க. பைரவன் (பி எசி. 2) ப விவேகாநந்தம் (பி. எசி. 3) ம. செகதீசன் (பி. ஏ. 1) கோ. கலியாணசுந்தரம் (பி. எ. 1) இரா. பாலசுப்பிரமணியம் (பி. ஏ. 1.) கோ. வைத்தியலிங்கம் (பி. ஏ. 1) த. அரங்க அம்பலவாணன் (பி. எசி. 1) த. சகந்நாதன் (பி. எசி. 1.) இரா. கிருட்டிணன் (பி. எசி. 1.) 14

தலைக்கு 50 காசு மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: சு. முருகையன், உரு. செகதீசன், ம. பாலகிருட்டிணன் (புகுமுகம்), கோவிந்தராசு (பி. எசி. 3) சா. நடராசன் (பி. ஏ. 3) மு. வேதசுப்பிரமணியம் (பி. எசி. 3) வெ. பிச்சை (பி. எசி.) மு. இராசு (பி. எசி. 1.) வே, முனிசாமி (பி. ஏ. 1.) 4—50

திரு. சி. வையாபுரி (புகுமுகம்) 1—01

திரு. வி. கிருட்டிணமூர்த்தி 10, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1 5—05

திரு. மா. செல்வராசன் 110, பிடாரியார் கோவில் தெரு, சென்னை-1 1

பெங்களூர் 16. பா. நல்லபெருமாள் அவர்கள் வழி:

1 உருபா மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: வ. சி. வாசுதேவன், க. சீனு வாசன், மு. நமசிவாயன் 3

திரு. பிரான்சு 0—50

திரு. தொ. உமாதுரை, மத்திம்பாளையம், காரமடை வழி 1

திரு. இரா. துரையரசன் சைதாப்பேட்டை சென்னை அவர்கள் வழி:

சைவப் புலவர் சொ. இர. தேமொழி 3

தமிழ்நாடு பொறியியல் பணித்துறைத் தலைமைப் பொறியாளர் (பொதுவும் கட்டிடமும்) அலுவலகத்தில் பணியாற்றுவோர்:

தலைக்கு இரண்டு உருபா மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: இரா. துரையரசன், த. ந. செந்தில்வேலன் 4

தலைக்கு ஓர் உருபா கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: சாமி. சுந்தரன், மா. மோகன கிருட்டிணன், ஆ அண்ணாமலை, சீ. செல்வராசு, ச. தியாகராசன், பன்னீர்செல்வம், தி. கிருட்டிண சாமி, க. உ முகம்மது முகையதீன், எ. ஆ. பால், சோ. வேங்கடசாமி, இரா. இலக்குமிபதி, பொன்னேரி எம். சந்திரசேகரன், எம். சம்பத்துக்குமாரன், கொ. பொ கி. முகம்மது இசுமாயில், வேங்கட ராவ், சு. கதிர்வேல், த. ந. இராமன், தேவராசு, கே. சம்பத்துக்குமார், ப. க. சேது, அ. மு. சம்பந்தம், வெ. பெ. பொன்னுசாமி, பாசியம், அரங்கநாதன், சே. ரா. கிருட்டிணமூர்த்தி, ந. சண்முகம், து. இராச மாணிக்கம், ம. ரா. இலக்குமிநாராயணன், மாத்துரு பூதம், க பாலகிருட்டிணன், துரைவேலன், சு. முத்துசாமி, வா. எ. அந்தோனி, ப. தேவிதாசு, இரா. கணேசன், எம். இருதயதாசு, த. செயராசு,

செல்வியர்: சி. எசு. சரசுவதி, கே. ஆர். சானகி, த. செல்வலக்குமி, எசு. இராசலக்குமி, சே. ரீதா, இரா. சரோசா, திருவாட்டி: பி. கிருட்டிண கீதா.

மற்ற அன்பர்கள்:

திருவாளர்கள்: எ. நா. எத்திராசு ஆசிரியர், செங்கழுநீர்ப்பட்டு மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி பல்லாவரம் சென்னை; ஆ. சுப்பிரமணியன், அ. ர. பத்மநாபன், குரு. மதனகோபாலன், சு. இராமமூர்த்தி 49

தலைக்கு 50 காசு மேனி கொடுத்தவர்கள்

திரு. தி. கோ. இராதாகிருட்டிணன், தி. த. இரத்தினவேலு	1
திரு. என். சிவப்பிரகாசம்	0—25
சைதைத் தமிழ்ச் சங்கச் செயலர் திரு. அருளொளி	1
கோ. அர. கிருட்டிணசாமி உடற் பயிற்சி ஆசிரியர், செங்கழுநீர்ப்பட்டு மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி பல்லாவரம், தமிழ்நாடு	1
சைதைத் தமிழ்ச்சங்க ஆசிரியர் திரு. முத்து முருகனார்	1
கடலூர், மித்திரா அச்சக உரிமையாளர்	5
,, மித்திரா அச்சகத் தோழர்கள்	5
மொத்தம்:	215—83
முன் மொத்தம்:	1995—21
தொகு மொத்தம்:	2211—04

பாவாணர்க்கு விடுக்கப்பெற்ற தொகை விளக்கம்:

27—6—64 ல் விடுத்த காசோலை. [எண் A.B. No. 12781 code No. 56 of The Tanjore Permanent Bk Ltd. Tirupathirippuliyur dt 27-6-64.]	2135—79
27-6-64-க்குப்பின் பெற்ற தொகை விடுக்கப் பெற்ற விளக்கம்	
29—6—64-இல் பணவிடை வழி:	3—50
15—7—64-இல் பணவிடை வழி:	71—75
	2211—04

குறிப்பு: இனி, பணக்கொடைத் திட்டத்துக்கென தொகை விடுக்கும் அன்பர்கள். திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ., ஆ. 959-5-ஆம் மேற்குக் குறுக்குச் சாலை, காட்டுப்பாடி நகர் விரிவு. [வ. ஆ.] என்ற முகவரிக்கு நேரே விடுக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி.

தென்மொழிவளர்ச்சியில் மெய்ம்மைநாட்டம் உடையவரும் தனித்தமிழ்த் தொண்டருமான திரு: மகிபை. பாவிசைக்கோ அவர்களின் வைகாசி, ஆனி மாத அன்பளிப்பு உருபா பத்தும், அவர்தம் நண்பர் திரு சொக்கலிங்கம் அவர்களின் அன்பளிப்பு உருபா பத்தும் வரப்பெற்றோம். தனித்தமிழ் வளர்க்கும் அவ் வினித்த நல் நெஞ்சினர்க்கு நம் உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

ஆசிரியர்.